DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

# உதயன்

26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca
UTHAYAN
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1439 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 3, 2023



## இலங்கையின் புகழ் பெற்ற வீணை இசைக் கலைஞர் என். எஸ். வாகீசன் அவர்களின் மாபெரும் மேடை நிகழ்ச்சி இன்று

தற்போது எமது தாயகத்திலிருந்து கனடாவிற்கு கலைப் பயணத்தை மேற்கொண்டு வருகை தந்துள்ள இலங்கையின் புகழ் பெற்ற வீணை இசைக் கலைஞர் என். எஸ். வாகீசன் அவர்களின் மாபெரும் மேடை நிகழ்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று- இன்று 03-11-2023 வெள்ளிக்கிழமையன்று ஸ்காபுறோ சீனக் கலாச்சார நிலையத்தின் மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அனுமதிச் சீட்டுகளுக்கு 416 677 5511 அல்லது 416 732 1608 இலக்கங்களை அழைக்கவும்.
(உள்ளே விபரமான செய்தி 16ம் பக்கத்தில்)

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் படைப்பாளிகளையும் அறிஞர்களையும் கௌரவிக்கும் விழா சிறப்புற நடைபெற்றது



கனடாவில் இயங்கிய வண்ணம் தமிழ் இலக்கியம் மற்றும் படைப்பிலக்கியத்தின் கூறுகளாக விளங்கும் கவிதை சிறுகதை ஆகிய துறைகளில் கருத்தரங்குகளையும் போட்டிகளையும் நடத்தி வரும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஏற்பாட்டில் படைப்பாளிகளையும் அறிஞர்களையும் கௌரவிக்கும் இவ் வருடத்திற்குரிய விருதுகள் வழங்கும் விழா கடந்த 28-10-2023 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
(உள்ளே விபரமான செய்தி 13ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

## Vettyvel Law Professional Corporation சட்ட நிறுவனத்தின் புதிய அலுவலகத் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது

**Vettyvel Law Professional Corporation** சட்ட நிறுவனத்தினர் தமது புதிய அலுவலகத்தை கடந்த 27ம் திகதி வெள்ளிக்கிழமை **2225 Markham Rd Unit 203, Scarborough ON** என்னும் விலாசத்தில் திறந்து வைத்தார்கள்.
நிறுவனத்தின் சட்டத்தரணி திருமதி நிசானியின் மற்றும் செல்வா வெற்றிவேல் ஆகியோரின் அழைப்பில் நூற்றுக்கணக்கானவர்கள் திறப்பு விழாவில் கலந்து சிறப்பித்தார்கள்.
சிரேஸ்ட சட்டத்தரணி கைலாசநாதன் நாடாவை வெட்டி புதிய அலுவலகத்தை திறந்து வைத்தார். பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரியும் அங்கு சமூகமளித்து அனைவரையும் பாராட்டினார்.
(உள்ளே விபரமான செய்தி 24ம் பக்கத்தில்)




Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG Billyard Insurance Group
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com








ஆரம்ப பிரன்ச் மொழியை கற்றுக்கொள்ளல் கனிஸ்ட பாலர் வகுப்புகளில் தொடங்குதல்

விண்ணப்பங்கள் ஏற்கும் திகதி தொடக்கம்: நவம்பர் 6, 2023
விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதி நாள்: டிசம்பர் 1, 2023

இணையவழி மூலம் விண்ணப்பிக்க:
www.tdsb.on.ca/french




# பிராம்டன் நகரில் பட்டாசுகள் தடை செய்யப்பட்டுள்ளன

பட்டாசுகளை உபயோகிக்கவோ, வாங்கவோ, விற்கவோ, கொளுத்தவோ, காட்சிக்கு வைக்கவோ அல்லது உடைமையாக வைத்திருக்கவோ நீங்கள் அனுமதிக்கப்படுவதில்லை




Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# வடக்கிலிருந்து மாத்திரமல்ல. தெற்கிலிருந்தும் ஒலிக்கத் தொடங்கியுள்ள ‘காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும்’ படலம்

ஒருதேசத்தின் மக்களுக்கு அரசியலும் அவர்களை ஆள்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கமும் எவ்வளவு முக்கியமானவை என்பதை அரசாங்கத்தை தேர்ந்தெடுத்த மக்களே மறந்து விடுகின்றார்கள். ஒரு தேசத்தை ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகளாக நாங்கள் இருக்கின்றோம் என்ற எண்ணத்தோடு அந்த பதவிகளை கைப்பற்றிய நாட்களிலிருந்து அவர்கள் விரும்பும் வரை ஆட்சியில் இருப்பதையே நோக்கமாகக் கொண்டு இயங்கிவருகின்றார்கள். இந்த நியதி உலகின் எல்லா நாடுகளிலும் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள “ஆளும் வர்க்கத்தின்’ கட்டமைப்பாகும்.

அவர்கள் ஆளும் கட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும் சமமான அளவிலேயே அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்பெறுகின்றன என்பதை அவர்களுக்கு வாக்களித்த மக்கள் அறியக் கூடியதாக இருந்தாலும் ஆட்சியாளர் இடத்தில் மக்கள் எந்தக் கேள்வியையும் கேட்பதில்லை. எனினும் தாங்கள் ஆளுகின்றவர்களின் நடவடிக்கைகளினால் பாதிக்கப்படுகின்றோம் என்பதை அறியும் போது அவர்கள் போராடத் துடிக்கின்றார்கள். ஆனால். இராணுத்தையும் பொலிஸ் படையையும் தங்கள் கைகளுக்குள் வைத்திருக்கும் ஆட்சியாளர்கள் போராடத் துடிக்கின்றவர்களை கைது செய்யவோ அன்றி கொன்று விடவோ தீர்மானிக்கின்றார்கள்.

இவ்வாறான கொடுமைகள் உலகின் பல நாடுகளிலும் குறிப்பாக தென்னாசிய நாடுகளிலும் தென் ஆபிரிக்க நாடுகளிலும் கடந்த காலங்களில் இடம்பெற்று வருகின்ற தொடர் சம்பவங்களாகவே தென்படுகின்றன.

இவ்வாறான திட்டமிட்ட அதிகாரத் திமிர் அவர்களால் கையாளப்படுவது இனம், மொழி மற்றும் மதம் சார்ந்து அல்ல. அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் “அவர்களை எதிர்க்கத் தொடங்கும்’ அனைத்து தரப்பினருக்கு எதிராகவும் திரும்பும். அங்கே அவர்கள் பயன்படுத்துவது ஆளப்படுபவர்களின் குடும்பங்களைச் சார்ந்தவர்களாக விளங்கும் இராணுவம் மற்றும் பொலிஸ் சேவையில் உள்ளவர்களையே. இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் நசுக்கப்பட்டது மாத்திரமன்றி அதில் ஈடுபட்டவர்களின் இலட்சக் கணக்கானவர்கள் ‘காணாமல் ஆக்கப்பட்டவர்களாக’ மறைந்தும் மறைக்கப்பட்டும் போனார்கள்.

‘அரகலய’ என்னும் போராட்டத்தின் எழுச்சியை அடக்க சாதாரண உழைக்கும் வர்க்கத்தின் பிள்ளைகளை இராணுவமாகவும் பொலிஸ் படையிலும் இணைதுக் கொண்டு போராட்டக்காரர்களை கைது செய்தும் சிறையில் அடைத்து சித்திரவதை செய்தும் சில சந்தர்ப்பங்களில் கொலை செய்யப்பட்டும்.. இவ்வாறான படலங்கள் தொடர்ந்து செல்லும் நிலையிலும் வடக்கிலும் தெற்கிலும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மற்றும் சிங்கள குடும்பங்களைச் சார்ந்த பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தீவிரமாக போராடத் தொடங்கியுள்ளார்கள். இதனை இராஜபக்சாக்களும் விக்கிரமசிங்காக்களும் பார்த்துக் கொண்டு ‘சும்மா’ இருப்பார்கள் என்று எவரும் எண்ணி விட முடியாது.

தென்னிலங்கையில் காணாமல் போன உறவினர்கள் மற்றும் உறவுகளின் நினைவாக முப்பது வருடங்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் உண்மைக்கான நீண்டதும் வேதனை தருவதுமான உண்மைக்கான தேடல், 2009இல் போரின் முடிவிலிருந்து இவர்களைபோலவே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவரும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருப்பதை அனைவரும் உணரக்கூடியதாக உள்ளது.

”பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களைச் சுற்றியுள்ள உண்மையை மீட்டெடுப்பது என்பது, அரசாங்கம் சர்வதேச சமூகத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க இந்த பிரச்சினையை கையாள்வதாக பாசாங்கு செய்து கொண்டு, ஆனால் உண்மையில் காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் இறக்கும் வரையும் காத்திருப்பதனால் இந்த பிரச்சனை தானாக மறைந்து விடும் என்று காணாமல் ஆக்கப்பட்ட கொடுமைகளுக்கு பொறுப்பான அரசுத் தலைவர்களும் இராணுத் தளபதிகளும் காத்திருப்பது போலவே இருக்க முடியாது.” ஏன தென்னிலங்கை காணாமல் ஆக்கப்பட்டவரம்களின் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா கூறியுள்ளார்.

இதே போன்று போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 188 தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பான உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்கு முன்னதாக ஏற்கனவே உயிரிழந்துள்ள அதேவேளையில் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த போராட்டங்களில் அல்லது நினைவேந்தல்களில் பங்குபற்றிய இளைஞர்களை வாயடைக்கச் செய்வதற்காக அவர்களை கடத்திச்சென்று சித்திரவதை செய்யும் நடவடிக்கையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஏராளமான கடத்தல்கள் வரலாற்று ரீதியாக தீர்க்கப்படாமல் இருக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுத கிளர்ச்சி மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டுப் போருடன் தொடர்புடைய சம்பவங்கள் இதில் உள்ளடங்கும் என உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் வலியுறுத்தியுள்ளது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். மேலும். இலங்கையில் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் ஆளப்படும் மக்களின் சார்பாக எழுந்து நின்று போராடுகின்ற தீர்க்கமான நாட்கள் வரும் போது ஆட்சியில் அமர்ந்திருப்பவர்கள் அச்சமடையத் தொடங்குவார்கள் என்பதே உண்மை!

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# தென்னிலங்கையில் காணாமலாக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்படாத மக்கள் ரத்தொலுவயில் நினைவுகூரப்பட்டனர்



வடக்கிலும் தெற்கிலும் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதக் கிளர்ச்சிகளின் போது இடம்பெற்ற பாரியளவிலான கடத்தல்கள் வரலாற்று ரீதியாக தீர்க்கப்படாத ஒரு நாடாக இலங்கையை சுட்டிக்காட்டும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, ஜே.வி.பி காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் “சிரத்தையுடன் “ இருந்தால், 87-89 காலப்பகுதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயற்பட்ட மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளர்களின் பெயர்களை பகிரங்கப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

தென்னிலங்கையில் உள்ள உறவினர்கள் காணாமல் போனவர்களை நினைவுகூரும் முக்கிய நாளான ஒக்டோபர் 27ஆம் திகதியன்று சர்வதேச உண்மை மற்றும் நீதி செயற்றிட்டம் **(ITJP)** விடுத்துள்ள ஊடக அறிக்கையில், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக போராடிவந்துள்ள நிலையில், உண்மையினை நிலைநாட்டுவதிலும் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதிலும் இலங்கை அரசு தான் சிரத்தையுடன் செயற்படுகின்றது என்பதை வெளிப்படுத்தவேண்டிய நேரம் வந்துவிட்டது எனக் கூறியுள்ளது.

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காணாமல் போனவர்களின் குடும்பச் சங்கத்தின் தலைவர் மனித உரிமைச் செயற்பாட்டாளர் பிரிட்டோ பெர்னாண்டோ அவர்களின் முயற்சியால், தென்னிலங்கைச் சிங்களத் தாய்மார்கள் 33ஆவது தடவையாக சீதுவ ரத்தொலுவையில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு முன்பாக தமது அன்புக்குரியவர்களை நினைவு கூர்ந்தனர். பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களுக்கு நீதி கிடைக்கும் வரை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் படம் பொறிக்கப்பட்ட மாலையை **(chain with pendant)** அணிந்துகொள்வதாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நினைவுத்தூபிக்கு முன்பாக உறுதியளித்துள்ளனர்.

தென்னிலங்கையில் காணாமல் போன உறவினர்கள் மற்றும் உறவுகளின் நினைவாக முப்பது வருடங்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் உண்மைக்கான நீண்டதும் வேதனை தருவதுமான உண்மைக்கான தேடல், 2009இல் போரின் முடிவிலிருந்து இவர்களைபோலவே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவரும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவே இருப்பதாக குறித்த ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

”பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களைச் சுற்றியுள்ள உண்மையை மீட்டெடுப்பது என்பது, அரசாங்கம் சர்வதேச சமூகத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க இந்த பிரச்சினையை கையாள்வதாக பாசாங்கு செய்து கொண்டு, ஆனால் உண்மையில் காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் இறக்கும் வரையும் இந்த பிரச்சனை மறையும் வரையும் காத்திருக்கும் பரிகசிக்கத்தக்க செயற்பாடாக இருக்க முடியாது.” என **ITJP'** யின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா கூறியுள்ளார்.

DRIEBERG COLLEGE ALUMNI ASSOCIATION -CANADA
Presents their
22nd ANNUAL CAROL SERVICES on
SATURDAY, NOVEMBER 4, 2023 at 6.00 P.M
MILLIKEN WESLEYAN METHODIST CHURCH at 3 Clayton Drive
Markham, ON L3R 8N3 (Kennedy Road & North of Steel Avenue East)
Guest Speaker Professor Dr. Alex Thevaranjan (Past student of Drieberg College). INVITES YOU AND YOUR FAMILY AND FRIENDS
Contacts:
GUNAM HUNT 416-472-0379 THEVA THEVASAGAYAM 416-701-2169
REGI THAVARATNAM 416- 446-2965
RAJAGOPAL MATHIALAGAN 416-277-1067

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தாவடி பகுதியில், 10 வயதுச் சிறுவனுக்கு பியர் பருக்கிய ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாவடி பகுதியில், 10 வயதுச் சிறுவனுக்கு பியர் பருக்கிய ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த சந்தேகநபர் நேற்றையதினம் முச்சக்கர வண்டியினுள் வைத்து குறித்த சிறுவனுக்கு பியரினை பருக்கியுள்ளார். இது குறித்து சிறுவனின் தாயார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபர் நேற்றிரவு சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். சிறுவனின் தந்தை வேலை நிமித்தமாக வெளிநாட்டில் வசித்து வருகிறார்.

# நான் சொல்வதே இங்கு நடக்கும்: பிக்குவின் கதை கருத்தில் கொள்ளப்படாது அமைச்சர் டக்ளஸ் சீற்றம்!



நான் சொல்வதுதான் இங்கே நடக்கும். பிக்குவின் கதையைக் கருத்தில் எடுக்க முடியாது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நெடுந்தீவு பயணிகள் படகுச் சேவை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டபோதே அமைச்சர் இவ்வாறு கடுந்தொனியில் தெரிவித்தார்.

நெடுந்தீவு பயணிகள் படகுச்சேவை தொடர்பாகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டிய நெடுந்தீவுப் பிரதேசசெயலர், நயினாதீவு பிக்கு தனது படகை குறிகாட்டுவான் இறங்குதுறையில் நெடுந்தீவுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தரித்து நிறுத்துகின்றார். இதனால் நெடுந்தீவு செல்லும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள் கின்றனர். கடற்படையினர் பிக்குவுக்குப் பயந்து எதுவும் கூறுவதில்லை என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம், நீங்கள் என்ன சொன்னாலும் பிக்கு கேட்கமாட்டார் எனக் கூறினார்.

அதையடுத்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நான் சொல்வதுதான் இங்கே நடக்கும், பிக்கு சொல்வது அல்ல. அவரது படகு இனியும் அந்த இடத்தில் தரித்து நின்றால் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வேன். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அங்கு நேரில் சென்று பார்ப்பேன் என்று கடும் தொனியில் குறிப்பிட்டார்.

# விடுவிக்கப்பட்ட காணிகளை அபகரிப்பதற்கு முயற்சிகள் — காணி உரிமையாளர்கள் குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மாங்கொல்லைப் பகுதியில் அண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட தனியார்காணி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்த மான காணி என அதிகாரிகள் உரிமைகோரியமையால் காணி உரிமையாளர்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டது.

“கடந்த 33 வருட காலத்துக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மாங்கொல்லை பகுதியில் இருந்து இராணுவத்தினர்வெளியேறியதை அடுத்து, அப்பகுதி மக்கள் தமது காணி களை அடையாளப்படுத்தி, எல்லைப்படுத்தும் நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் வியாழக்கிழமை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சிலர் அப்பகுதிக்கு வந்து, இந்தக் காணிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குஉரியது. நாம் கடந்த 40 வருட காலத்துக்கு முன்பே காணி, உரிமையாளர்களிடம் இருந்து காணிகளைக் கொள்வனவு செய்து விட்டோம்” எனத் தெரிவித்தனர்.

“காணியை நாம் யாருக்கும் விற்கவில்லை. இது எங்களின் காணிகள். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான காணி எமது காணிகளில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ளகாணிகளே என காணி உரிமையாளர்கள் பதிலுக்குத் தெரிவித்தனர்.

அதனை ஏற்கமறுத்த அதிகாரிகள், “இந்த காணிகளையும் தமது நிறுவனம் கொள்வனவு செய்து விட்டதாகத் தெரிவித்ததுடன், இது உங்கள் காணி தான் என்பதற்கு எங்களுக்கு உறுதியை காண்பித்து உறுதிப்படுத்துங்கள்” எனக் கூறினர்.

“அதற்கு காணி உரிமையாளர்கள் நாங்கள் எதற்கு உங்களுக்கு உறுதி காட்ட வேண்டும்?

உங்களின் உறுதிகளை பரிசீலித்து உங்கள் காணி எங்கே இருக்கிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு” என்று தெரிவித்தனர்.

அதனை அடுத்து, “இந்தக் காணிகளையும் கொள்வனவு செய்து விட்டோம். அதற்கான உறுதிகள் எங்களிடம் உள்ளன. ஆதாரங்களுடன் வருகிறோம்” எனத் தெரிவித்துவிட்டுஅவர்கள் அங்கிருந்து சென்றனர்.

# சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முயற்சி பருத்தித்துறை — டிக்வெல்ல வரையான சைக்கிள் பயணம் பருத்தித்துறையில் இருந்து ஆரம்பம்!





இலங்கையில் சுற்றுலாத்துறை மேம்படுத்தும் முயற்சியாக சர்வதேச சுற்றுலாகளை ஈர்க்கும் வகையில் பருத்தித்துறை முதல் டிக்வெல்ல வரையில் சைக்கிள் பயணம் (29,10) நள்ளிரவு 12.00 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

36 மணித்தியாலங்களில் சுமார் 600 கிலோ மீட்டர் தூரத்தை சைக்கிள் பயணமாக கடக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள குறித்த சைக்கிள் பயணத்தில் ஈடுபடவுள்ளனர்.

வடமராட்சி - பருத்தித்துறை, சற்கோட்டை முனை பகுதியில் இருந்து நேற்று (29) நள்ளிரவு 12.00 மணிக்கு ஆரம்பித்து முன்னெடுக்கப்பட்டுள்ள குறித்த விழிப்புணர்வு சைக்கிள் பயணம் மாத்தறை மாவட்டம் - டிக்வெல்ல முனையை (31) நள்ளிரவு 12.00 மணிக்கு சென்றடையும் வகையில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் தென்னிந்திய சுற்றுலாத்துறை அமைச்சின் இளைஞர்கள், மற்றும் சுற்றுலாவில் பங்கெடுக்க வந்த இளைஞர்கள் உள்ளடங்கலாக சர்வதேச சைக்கிள் ஓட்ட வீரர்கள் உள்ளிட்ட 65 சைக்கிள் ஓட்ட வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

# தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களையும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

- மன்னார் நிருபர் (29-10-2023)



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து சனிக்கிழமை (28) இரவு கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 09ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் ஞாயிற்றுக்கிழமை (29) மாலை உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்து வரப்பட்ட நிலையில் தலைமன்னார் கடற்படை முகாமில் மலேரியா பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஞாயிற்றுக்கிழமை மதியம் குறித்த 23 இந்திய மீனவர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை (29) மாலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பதில் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 09ம் திகதி வரை (09-11-2023) விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் ரயில் மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிப்பு



- மன்னார் நிருபர் (29-10-2023)

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமேஸ்வரத்தை சேர்ந்த ஐந்து படகையும் அதிலிருந்து 37 மீனவர்களையும் இலங்கை கடற்படை கைது செய்ததை கண்டித்தும் மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் மண்டபம் ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் சென்னை ரயிலை மறித்து போராட்டம் நடத்த மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

மேலும் நவம்பர் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை முதல் மீனவர்களை விடுதலை செய்யும் வரை தொடர்ந்து மீனவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட போவதாகவும், இன்றில் இருந்து தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட போவதாக ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்கள் நடத்திய அவசர ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

# ஆளுநர் பதவியை ஒழிக்கவேண்டும்! – பழ. நெடுமாறன் வேண்டுகோள்

உலகத் தமிழர் பேரமைப்பு
World Tamil Confederation
(Registration No. AAATU4567GE2021501)
சென்னை அலுவலகம்: 6, தெற்கு மதகுத் தெரு, கோட்டூர்புரம், சென்னை - 600 085
முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம், விளார் சாலை, தஞ்சாவூர் - 613 006.
தொலைப்பேசி: 04362-255044 &worldtamilconfederation@gmail.com
----------------------------------------------------------------
தலைவர்: பழ. நெடுமாறன்

**தமிழ்நாட்டில் ஆளுநர் பதவியை ஒழிக்கவேண்டும்!**
**உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்**
**(கனடாவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**

தற்போது பழ நெடுமாறன் அவர்கள் சற்று உடல் நலம் குன்றி ஓய்வெடுத்து வந்தாலும் தற்போதை தமிழ்நாட்டின் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாக விளங்கும் தமிழக ஆளுனர் தொடர்பான விடயம் ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து கீழே காணப்படும் தனது செய்தியை உலகெங்கும் வாழும் தமிழ் மக்களோடு பகிர்ந்து கொண்டுள்ளார்.

மக்களுக்காக தியாகம், தொண்டு, துன்பம் ஆகியவற்றை ஏற்ற ஒப்புயர்வற்றத் தலைவரும், தமிழ்நாட்டு மக்களால் மிக மதித்துக் கொண்டாடப்படுபவருமான தியாக சீலர் என். சங்கரய்யா அவர்களுக்கு பெருமையுறு முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்க மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு, ஆட்சி மன்ற உயர்க் குழு ஆகியவை ஒரே மனதுடன் முடிவு செய்தன. பல்கலைக்கழகத்தின் வேந்தர் என்ற முறையில் ஆளுநர் என். ரவி அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்ட போது அவர் அதை ஏற்க மறுத்து திருப்பி அனுப்பினார்.

பல்கலைக்கழகத்தின் இரு குழுக்களும் மீண்டும் அத்தீர்மானத்தை நிறைவேற்றி அவருக்கு அனுப்பி வைத்ததோடு துணை வேந்தரும் பதிவாளரும் நேரடியாகச் சென்று ஆளுநரைச் சந்தித்து வேண்டிக்கொண்டனர்.

தமிழக உயர் கல்வி அமைச்சரும் இப்பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான பொன்முடி அவர்கள் இதற்கு ஒப்புதல் அளிக்கும்படி ஒரு முறைக்கு இருமுறை ஆளுநரை வேண்டிக் கொண்டார்.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் சட்டப்படி பெருமையுறு முனைவர் பட்டமளிக்கும் அதிகாரம் அப்பல்கலைக்கழகத்திற்கே உண்டு. ஆளுநரின் ஒப்புதல் பெற வேண்டிய தேவையில்லை. ஆனால் அப்பட்டத்தில் வேந்தர் என்ற முறையில் ஆளுநர் கையொப்பம் இட வேண்டும். அத்துடன் இப்பட்டத்தினை தியாக சீலர் சங்கரய்யாவுக்கு வழங்கி அவரைப் பெருமைப்படுத்த வேண்டும். ஆனால் தனது பதவிக்குரிய மாண்பினைச் சற்றும் உணராத நிலையில் ஆளுநர் நடந்து கொண்டது அவரது சிந்தனை வறட்சியையும் சிறுமைத்தனத்தையும் அப்பட்டமாக வெளிக்காட்டி மக்கள் முன்னால் அவரை அம்பலப்படுத்திவிட்டது.

தனது செயலுக்கு உரிய காரணம் எதையும் ஆளுநர் இது வரை கூற மறுத்திருப்பது அவரது மமதைக்கு சரியான எடுத்துக்காட்டாகும்.

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தையும் அதில் ஈடுபட்டு எண்ணற்ற தியாகம் செய்தவர்களையும் ஆர். எஸ். எஸ். அமைப்பு ஒரு போதும் மதித்ததில்லை. இந்திய விடுதலைப் போராட்டத்தில் அவர்களின் பங்களிப்பு எதுவும் கிடையாது. அந்த அமைப்பைச் சேர்ந்த ஆளுநர் ரவியின் தொடர் நடவடிக்கைகள் பலவும் மக்களின் கண்டனத்திற்கு ஆளாகி உள்ளன. ஆளுநரின் அற்பச் செயலின் மூலம் தியாக சீலர் சங்கரய்யா அவர்களின் பெருமை அணு அளவும் குறைந்துவிடவில்லை. திரு. சங்கரய்யா அவர்களுக்கு பெருமையுறு முனைவர் பட்டம் வழங்கப்பட்டிருந்தால் அப்பட்டத்திற்கு மேலும் பெருமை கூடியிருக்கும். அந்தச் சிறப்பினை ஆளுநர் தனது எதேச்சதிகாரப் போக்கின் விளைவாகச் சீர்குலைத்திருப்பதின் மூலம் ஆளுநர் பதவிகள் தேவையற்றவை என்ற கருத்தோட்டத்திற்கு மேலும் வலிமை சேர்த்திருக்கிறார். இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று கூடி அடுத்த தேர்தலுக்கான வாக்குறுதியாக ஆளுநர் பதவியை ஒழிப்பது குறித்து அறிவிக்க வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.



அன்புள்ள,

(பழ. நெடுமாறன்)
தலைவர்.

# கேரளாவிலுள்ள தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்




கேரளாவில் மலையக மக்களின் உரிமைகளையும், வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற VTMS (விவசாயிகள் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம்) களத்தில் இறங்கி தொடர் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம், குளத்துப்புழா என்ற இடத்தில் தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக RPI என்ற ரப்பர் தோட்டக் கழகத்தை கேரள அரசும், ஒன்றிய அரசும் இணைந்து தொடங்கியது.

தாயகம் திரும்பிய 700 குடும்பங்கள் தங்களது உயிரை பணயம் வைத்து ரத்தத்தையும், வேர்வையையும் சிந்தி செல்வம் கொழிக்கும் பூமியாக மாற்றினர். தற்போது, தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு, வாழ்வாதாரத்தை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக, VTMS மாநிலத் தலைவர் M.S. செல்வராஜ் தலைமையில் கேரள முன்னனி தலைவர்களுடன்,கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

இதனிடையே கடந்த செவ்வாய்க்கிழமை 31-10-2023 அன்று குலத்துப்புழாவில். மாபெரும் எழுச்சிக் கூட்டத்தை VTMS தலைவர்கள் கேரள முன்னணி தலைவர்களுடன் இணைந்து நடத்தினர். இதில் நூற்றுக்கணக்கான ரப்பர்தோட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டு எதிர்கால செயல்பாடுகள் பற்றி நீண்ட விவாதம் நடத்தினர். மேலும் எதிர்கால செயல்பாடுகள் பற்றி திட்டமிடப்பட்டது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# புதிய கடற்தொழில் சட்டம் நிறைவேறினால் இலங்கை கடல் வெளிநாட்டு சக்திகளிடம்: மீனவ மக்கள் விழிப்படைய வேண்டும் — சுரேஞ்சன் பெனாண்டோ



புதிய கடத்தொழில் சட்டம் நிறைவேறுமானால் இலங்கையின் வளமான கடற்பரப்புக்கள் வெளிநாட்டு சக்திகளிடம் சென்றடைந்து விடும் என இலங்கை மீனவ தொழிற்சங்கத்தின் பொதுச்செயலாளர் தினேஷ் சுரஞ்சன் பெனாண்டோ தெரிவித்தார்.

சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம் பெற்ற வடமாகாண மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் சுதந்திரமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற மீனவ சமூகத்தை மீன் பிடிக்கில் இருந்து அப்புறப்படுத்தி வெளிநாட்டு பல்தேசிக் கம்பெனிகளுக்கு எமது கடல் வளத்தை தாரை வார்க்கும் நோக்கில் புதிய சட்டத்திருத்தம் இடம்பெற்றுள்ளது.

புதிய கடற்தொழில் சட்டத்தை மீனவ சங்கங்களோ சமாசங்களோ கோராத நிலையில் யாரின் தேவைக்காக அல்லது யாரின் நோக்கத்தை நிறைவு செய்வதற்காக புதிய சட்டத்திருத்தத்தை கொண்டு வர உள்ளார்கள் என்ற சந்தேகம் எழுகிறது.

நாம் 1996 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கடற் தொழில் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வந்து இழுவைமடித் தொழிலை முற்றாக தடை செய்யுமாறு பல தடவைகள் அரசாங்கத்திற்கு கோரிக்கை முன் வைத்துள்ளோம், இதுவரை நிறைவேறவில்லை.

ஆனால் தற்போது மீனவ சமூகம் கோராத புதிய சட்ட திருத்தத்தின் மூலம் வெளிநாட்டு படகுகளை இலங்கை கடற்பரப்புக்குள் உள்நுழைய சட்ட நீதியான அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது.

முன்னாள் கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன காலத்தில் இலங்கை கடற்பரப்புக்குள் சீன கப்பல்கள் மீன்பிடியில் ஈடுபட்டன.

இலங்கையில் சுமார் ஐந்து இலட்சம் கிலோமீட்டர் வளமான கடற் பிரதேசத்தை வெளிநாட்டு சக்திகளுக்கு தாரை வார்க்கும் நோக்கில் புதிய சட்ட திருத்தத்தில் கடற்தொழில் அமைச்சருக்கும் பணிப்பாளருக்கும் அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று இடங்களையும் இயற்கை வளங்களையும் அந்நிய நாடுகளுக்கு விற்று விட்ட நிலையில் எஞ்சிய கடல் வளத்தையும் வெளிநாடுகளுக்கு விற்கப் போகிறார்கள்.

இலங்கையில் பிறந்த மீனவ சமூகம் தமது தொழில் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு எவ்வித அருகதை அற்றவர்களாக கட்டிப் போடுவதற்கு புதிய சட்டத்தின் ஊடாக வழி வகுக்கப்படுகிறது.

ஆகவே ஆபத்தான கடற்தொழில் சட்டத்தை எதிர்ப்பதற்கு இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த மீனவ சமூகங்களும் தயாராக வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.



# யாழ்ப்பாணம் இணுவில் சிவகாமி அம்மன், பின் வீதியில், பத்திரகாளி, அம்மன் ஆலயத்தில் அசைவ மடை உற்சவம்





யாழ்ப்பாணம் - இணுவில் சிவகாமி அம்மன் கோவிலின், பின் வீதியில் அமைந்துள்ள, பத்திரகாளி, அம்மன் ஆலயத்தின் வருடாந்த அசைவ மடை உற்சவம் 29-10-2023 அன்று சிறப்பாக இடம்பெற்றது. கருவறையில் வீற்றிருக்கும் இணுவில் பத்திரகாளியம்மனுக்கு அபிஷேக, ஆராதனைகள், இடம்பெற்று பின் அசைவ உணவுகள் படைத்து பக்தர்களுக்கு தானம் வழங்கிவைக்கப்பட்டது.

இவ் உற்சவமான இணுவில் பத்திரகாளியம்மனின் அறங்காவலர்கள் பண்டைய காலம் தொட்டு வருடா வருடம் அசைவ மடை உற்சவத்தினை நடாத்தி வருகின்றனர்.



# தமிழ்நாட்டில் வியாபாரத் தொடர்பு கொண்ட கிழக்கு ஆளுநர் தனக்காக வடக்கு மீனவர்களை அடகுவைக்க வேண்டாம் — அன்னராசா சீற்றம்

தமிழ்நாட்டில் வியாபாரத் தொடர்பு கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்தியாவில் தனது வியாபாரத்தை தக்க வைக்க வடபகுதி மீனவர்களை அடகு வைக்க வேண்டாம் என யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கோரிக்கை விடுத்தார்.

29-10-2023 சனிக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு ஆளுநர் செந்தில் இந்திய தொலைக்காட்சி எமது வட மாகாண கடற் தொழிலாளர்களை பாதிக்கும் வகையில் செவ்வியொன்று வழங்கியுள்ளார்.

அதாவது இந்தியா கடற்தொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி வரவில்லை எனவும் மீன்களை பிடிக்கும் போது தற்செயலாக இலங்கை கடற்பரப்புக்குள் சென்று விடுகிறார்கள் என அவர்களின் வருகையை நியாயப்படுத்தி கருத்து தெரிவித்திருந்தார்.

அவரின் கருத்தை கண்டிப்பதோடு கிழக்கு ஆளுநருக்கு ஒன்றை கூறிக் கொள்ள விரும்புகிறோம் நீங்கள் இந்தியாவை சேர்ந்தவர் என்பதை சொல்லாமல் சொல்லுகிறீர்கள்.

இந்தியாவில் உங்களுக்கு பல வியாபாரங்கள் உள்ள நிலையில் ஊடக நிறுவனங்களுக்கும் முதலீடு செய்து உள்ளீர்கள் என அறியக் கிடைக்கும் நிலையில் உங்கள் வியாபாரத்தை பாதுகாப்பதற்காக எமது மீனவர்களை அடகு வைக்க வேண்டாம்.

இந்தியா எல்லை தாண்டிய மீனவர் பிரச்சனை சுமார் 12 வருடங்களாக நீடித்து வரும் நிலையில் கிழக்கு ஆளுநர் செந்தில் ஒரு நாளிலேனும் எமது மீனவர்களின் பிரச்சனை என்ன என கேட்டிருக்க மாட்டார்.

முடிந்தால் அவருக்கு நாங்கள் ஒன்றை கூறுகிறோம் முதலில் யாழ்ப்பாணம் வாருங்கள் எமது மீனவர்களை அழைத்து உங்களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது என கேளுங்கள் முடிந்தால் அதனை தீர்த்து வைக்க முயற்சி செய்யுங்கள்.



அதை விடுத்து உங்கள் வியாபாரங்களை தொடர்ந்து இந்தியாவில் மேற்கொள்வதற்கு எமது மீனவர்களை பலிக்கடா ஆக்க வேண்டாம் என்ற செய்தியை அவருக்கு கூற விரும்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக தீப்பந்த போராட்டம்!





இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சங்கானை பேருந்து நிலையத்திற்கு முன்பாக தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டமானது ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் தீவக தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் தீப் பந்தங்களை ஏந்தியவாறு ”நெருக்காதே நெருக்காதே பொருளாதாரத்தை நெருக்காதே, குறைத்திடு குறைத்திடு மின்சார கட்டணத்தை குறைத்திடு, அடிக்காதே அடிக்காதே ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, குறைத்திடு குறைத்திடு பொருட்களின் விலைகளை குறைத்திடு என கோ' மிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் தீவக தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள், சமூகமட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராக பதவி உயர்வு!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணியாளர் திறன்விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலைப் பல்கலைக்கழகப் பேரவை வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் சனிக்கிழமை (28) காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி ஆர். விஜயகுமாரனின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், பணியாளர் திறன்விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதி முகாமைத்தவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் நிதி முகாமைத்தவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இந்தியா செய்திகள் India News

# இளைய கவிஞர்களின் வரவால் தமிழ்க் கவிதைகளின் அகமும் முகம் மாறியிருக்கிறது

## படைப்பியல் பயிலரங்கில் கவிஞர் மு.முருகேஷ் பேச்சு

சென்னை அரும்பாக்கத்திலுள்ள டி.ஜி. வைணவக் கல்லூரியின் தமிழ்த்துறை (சுழற்சி II) சார்பில் கடந்த அக்டோபர் 9, 10, 11 ஆகிய மூன்று நாட்கள் படைப்பியல் பயிலரங்கு நடைபெற்றது. இரண்டாம் நாள் நடைபெற்ற கவிதைப் பயிலரங்கிற்குத் தமிழ் இலக்கியத் துறை & தமிழ்த்துறை (சுழற்சி II) தலைவர் முனைவர் க.ர. லதா தலைமையேற்றார். பயிலரங்கில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற கவிஞர் மு. முருகேஷ் பேசியதாவது:

"நீண்ட மரபினையுடைய தமிழ்க் கவிதையில் மகாகவி பாரதியார் தொடங்கி வைத்த புதுக்கவிதைக்கான எழுச்சி, பலரையும் கவிதை எழுதத் தூண்டியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழில் அறிமுகமான புதுக்கவிதை வடிவம், பெரிய எழுச்சியை உண்டாக்கியது. அதுநாள் வரை இலக்கண வரையறைக்குள் நின்று, மரபுக்கவிதைகளை மட்டுமே எழுதிவந்த பண்டிதப் புலவர்கள் புதுக்கவிதையை எதிர்த்தனர். ஆனாலும் காலத்தின் தேவையை சரியாய் புரிந்துகொண்ட புதுக்கவிதை, எதிர்ப்புகளைத் தாண்டியும் தமிழில் நிலை பெற்றது.

தற்போது தமிழில் கஜல், ஹைக்கூ, லிமரிக், ஹைபுன் என உலகின் பல சிறந்த வடிவக் கவிதைகளும் எழுதப்படுகின்றன. காலத்தின் தேவை கருதியே எந்தப் படைப்பும், எந்த வடிவமும் ஏற்றுக்கொள்ளப்படும். "பிறநாட்டுக் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்" என்று பாரதி பாடிச்சென்ற தமிழ் நிலத்தில், மக்களின் வாழ்வைப் பற்றியும், சமூக அக்கறையோடும் படைக்கப்படும் எப்படைப்பும் காலம் கடந்தும் வாழும்.

இன்றைக்கு தமிழில் ஏராளமான இளைய கவிஞர்கள் கவிதை ஆர்வத்தோடு



கவிதைகளைப் படைத்து வருகின்றனர். அவரவர் வாழ்க்கையை, அவரவர் பார்வையில் எழுதும்போது கவிதையில் உண்மையும் உயிர்ப்பும் கூடுதலாகிறது. 21-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நவீன அறிவியல் தொழில் நுட்பம் அமைத்துத்தந்துள்ள புதிய வழியில் இளைய தலைமுறை கவிஞர்கள் எழுதும் கவிதைகளால், தமிழ்க் கவிதையின் அகமும் முகமும் மாறியிருக்கிறது என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்" என்றார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் சி.சிவராஜ் (கவிஞர் இல்லோடு சிவா) எழுதிய "உயிர்வதை" எனும் கவிதை நூலினை முனைவர் க.ர. லதா வெளியிட, கவிஞர் மு. முருகேஷ் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் முனைவர் ஆ.இரமேஷ், முனைவர் கு. வடிவேல்முருகன், முனைவர் செல்லப்பிள்ளை, முனைவர் கஜலட்சுமி, முனைவர் ஜ. சிவகுமார், முனைவர் ஏழுமலை, முனைவர் ராம்ராஜ், முனைவர் த.சிவலிங்கம், முனைவர் அ.சதாசிவம், முனைவர் ம.பிரபு, முனைவர் ம.செந்தில் குமார், முனைவர் மு.சண்முகம், முனைவர் க. மாரிமுத்து, முனைவர் சசிகலா, முனைவர் கு.கலைவாணன், முனைவர் துரை. அருண் பாண்டியன், முனைவர் அ. வீரமணி ஆகியோரும் கலந்துகொண்டனர்.



**படக்குறிப்பு:**
*சென்னை டி.ஜி. வைணவக் கல்லூரியில் நடைபெற்ற படைப்பியல் பயிலரங்கில் கவிதை குறித்து உரையாற்றிய கவிஞர் மு. முருகேஷ்-க்கு, தமிழ்த்துறை (சுழற்சி II) தலைவர் முனைவர் க.ர. லதா நினைவுப்பரிசினை வழங்கினார். உடன் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்கள்.*


கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

**மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள்-19.11.2023.**

மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் நினைவேந்தல் எதிர் வரும் 19.11.2023 ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் என்பதைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அறியத் தருகின்றது.

மாவீர்களுக்கான வீர வணக்க நினைவேந்தல்,காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 2.00 மணி வரை தொடர்ந்து நடை பெறும்.

மாவீர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர், உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரும் இந்த நாளில் ஒன்றிணைந்து நின்று மாவீரர்களை நினைவேந்துவோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619 **ctro@tamilremembrance.com**



THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஆஸ்திரேலிய சுரங்க நிறுவனம் உள்ளூர் மக்களிடம் பொய் சொல்கிறது – மன்னார் தீவை அழிக்கும் நில விற்பனை இடம் பெறுவதாக மன்னார் பிரஜைகள் குழு குற்றச்சாட்டு

- மன்னார் நிருபர் (29-10-2023)

மன்னார் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அவுஸ்திரேலிய சுரங்க நிறுவனம் ஒன்று, அதன் உள்ளூர் பங்காளிகள் மூலம், மன்னார் தீவின் கரையோரப் பகுதியில் - பொய்யான சாக்குப் போக்கு களின் கீழ் நிலத்தை வாங்குகிறது. என மன்னார் பிரஜைகள் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவில் ஞாயிற்றுக்கிழமை (29) மதியும் விசேட ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் பிரதிநிதி ஜேம்ஸ் ஜேசுதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

இதன் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் கருத்து தெரிவிக்கையில், மன்னாரின் மின்சார தேவைக்காக சோலார் பேனல்களை நிறுவுவதாக கூறி, குறைந்த விலையில் குடியிருப்பாளர்களின் காணிகளை நன்கு அறியப்பட்ட உள்ளூர்வாசிகள் வாங்குகின்றனர்.

எவ்வாறாயினும், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஆஸ்திரேலிய சுரங்க நிறுவனமான டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட்டிற்கு தாது மணல் அகழ்வுக்காக விற்பதே உண்மையான காரணம்.

சுரங்கத் தொழில் தொடங்கினால், வரலாற்று மற்றும் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த மன்னார் தீவின் அழிவை இது உணர்த்தும் என்பதை உள்ளூர்வாசிகள் உணர்ந்து வருகின்றனர்.

40 அடி வரையிலான சுரங்கங்கள் கணிசமான கடல் நீர் ஊடுருவி நிலத்தடி நீரை மாசுபடுத்தும், இது மக்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் விவசாயத்திற்கு பொருந்தாது.



டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் மன்னாரின் கரையோர பகுதிகளில் அகழ்வாராய்ச்சி செய்ய விரும்பவில்லை என அவுஸ்திரேலிய பங்குச் சந்தைக்கு பகிரங்கமாக அறிவித்தது.

இப்படி இருந்தால், இந்தப் பகுதிகளில் ஏன் நிலம் வாங்குகிறார்கள்? இலங்கையின் சட்டங்களில் அண்மைய மாற்றங்கள் காணி உரிமையாளர்கள் தங்களுடைய சொந்த சொத்துக்களில் அகழ்வாராய்ச்சி செய்ய அனுமதிப்பதும் இதற்கு முன்னர் ஆய்வு உரிமம் உள்ளவர்கள் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கடந்த ஆண்டு டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் தாது மணல் ஆய்வில் ஏழு ஆண்டுகள் நிறைவு பெற்றது. பின்னர் சுரங்க விண்ணப்பத்தை சமர்ப்பிக்க சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் அழைக்கப்பட்டது.

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் முன்னர் இதே ஆய்வு உரிமங்கள் ரத்து செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவின் டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் சுரங்க நிறுவனம் மற்றும் அவற்றின் உள்ளூர் துணை நிறுவனங்களான கில்சித் எக்ஸ்ப்ளோரேஷன், ஹேமர்ஸ்மித் சிலோன், சுப்ரீம் சொல்யூஷன், சனூர் மினரல்ஸ், ஓரியன் மினரல்ஸ் ஆகியவற்றின் பொய்கள் மற்றும் ஊழல்களின் நீண்ட பட்டியலில் "சோலார் பேனல்" என அவர் மேலும் தெரிவித்தார்.

# எமது பிள்ளைகளின் எதிர்காலத்துடன் இவ்வாறாக போலியாக விளையாடுபவர்களை சமூகம் இனங்காண வேண்டும் - கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர்

கிழக்கு மாகாணத்தில் உள்ள எந்தவொரு போலி நிறுவனத்தின் பெயரை சொல்ல விரும்பவில்லை. ஆனால் காளான் மாதிரி முளைத்துக் கொண்டு வருகிறது என்பதை நான் அறிவேன். நிந்தவூர் பகுதியிலும் அவ்வாறான நிறுவனங்கள் இயங்குவதாக கேள்விப்பட்டுள்ளேன். அரசாங்கம் இவ்வாறான போலி நிறுவனங்களுக்கு எதிராக மிக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது பிள்ளைகளின் எதிர்காலத்துடன் இவ்வாறாக போலியாக விளையாடுபவர்களை சமூகம் இனங்காண வேண்டும் Metropolitan College East Campus இன் தவிசாளர் கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

Metropolitan College East Campus இன் 5வது ஆண்டுப்பூர்த்தியை முன்னிட்டு கல்முனை வளாகத்திலிருந்து பிரதான வீதியூடாக மாபெரும் வீதி ஊர்வலம் சனிக்கிழமை (28) இடம்பெற்ற பின்னர் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது, Metropolitan College East Campus இன் 5வது ஆண்டுப்பூர்த்தியை முன்னிட்டு கல்முனை வளாகத்திலிருந்து பிரதான வீதியூடாக மாபெரும் வீதி ஊர்வலம் பிரமாண்டமாக இடம்பெற்றது. கடந்த 24 வருடங்களுக்கு முன்பு உருவாக்கப்பட்ட Metropolitan College Campus பல்வேறு சாதனை மாணவர்களை உருவாக்கியுள்ளது.



அது போன்று, கடந்த 2018ம் ஆண்டு கல்முனை மெட்ரோபொலிட்டன் காலேஜ் ஈஸ்ட் கேம்பஸ் உருவாக்கப்பட்டது.

இதில் கடந்தகால வரலாற்றைப் பார்க்கின்ற போது நாங்கள் சுமார் 2,500 மாணவர்கள் கற்றுத்தேறியிருக்கின்றார்கள். அதே போன்று ஆயிரம் மாணவர்கள் கியூ எஸ் பட்டம் பெற்று வெளியேறியிருக்கின்றார்கள். அதில் முழு இலங்கையிலும் 10 கலாநிதி பட்டங்கள் வழங்கியது எமது மெட்ரோபொலிட்டன் காலேஜ் மட்டுமே.

வெளிநாட்டிலுள்ள மாணவர்களுக்கும் கற்கைநெறிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் எமது நிறுவனத்தில் வழங்கப்படுகின்றது. விசேடமாக பல்வேறு பாராட்டுக்கள், கௌரவிப்புக்கள் மற்றும் பத்து மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த புலமைப்பரிசில் திட்டம் ஒன்றினையும் நாம் அறிமுகம் செய்விருக்கின்றோம். அதாவது, சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான பத்து புலமைப்பரிசிலை மாணவர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம் என்றும் கூறினார்.கிழக்கு மாகாணத்தில் உள்ள எந்தவொரு போலி நிறுவனத்தின் பெயரை சொல்ல விரும்பவில்லை. ஆனால் காளான் மாதிரி முளைத்துக்கொண்டு வருகின்றது என்பதை நான் அறிவேன். நிந்தவூர் பகுதியிலும் அவ்வாறான நிறுவனங்கள் இயங்குவதாக கேள்விப்பட்டுள்ளேன்.

# கல்லூண்டாயில் கோர விபத்து – ஒருவர் உயிரிழப்பு!

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லூண்டாய் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கீரிமலை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஜோசப் சுதர்சன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கல்லூண்டாய் பகுதியில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் கார் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து சம்பவித்தது. இந்நிலையில் சைக்கிளில் சென்ற நபர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் அராலி தெற்கு பகுதியைச் சேர்ந்த காரின் சாரதி இன்றையதினம் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# சம்பந்தனின் முதுமையை காட்டி தலைவர் பதவிக்கு ஆசைப்படும் சுமந்திரன் – ஈ.பி.டி.பி குற்றச்சாட்டு






சம்பந்தனின் முதுமையை காரணம் கூறி கூட்டமைப்பின் தலைவர் பதவியை குறி வைக்கும் நோக்கில் சுமந்திரன் எம்.பி காய் நகர்த்துவதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் குற்றம் சாட்டினார்.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்புகையில், தமிழரசு கட்சியின் உடைய பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கருத்தை முன் வைத்துள்ளார் அது தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன என கேள்வி எழுப்பினர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஸ்ரீரங்கேஸ்வரன், சம்பந்தன் ஐயாவுக்கு முதுமை ஏற்பட்டது என்பது சுமந்திரன் கூறித் தான் தெரிய வேண்டியது அல்ல.

ஏற்கனவே சம்பந்தன் ஐயா பதவி விலகி மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் தற்போது சுமந்திரன் சம்பந்தன் ஐயா பாராளுமன்றத்திற்கு எத்தனை தடவைகள் வந்தார் என கணக்கு போட்டு கூறுவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

சம்பந்தன் தலைமை பதவியை இலக்கு வைத்து சுமந்திரன் காய் நகர்த்துவதாக அரசியல் பரப்பில் பேசப்பட்டு வரும் நிலையில் அவருடைய கருத்து தலைமை பதவியை இலக்கு வைத்து தான் என எண்ண தோன்றுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# போக்குவரத்து விதிமீறலால் யாழ்ப்பாணத்தில் மட்டும் தினமும் 200 பேர் பொலிஸ் பிடியில்!

யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் சராசரியாக 200 பேர் போக்குவரத்து விதிமீறலுக்காக பொலிஸாரால் பிடிக்கப்படுகின்றனர் என்று யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விதிகளுக்கு முரணான போக்குவரத்து அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. பொலிஸார் இத்தகையவர்களை இறுக்கமாகக் கண்காணிக்கின்றனர். தினமும் சுமார் 200 பேர் விதிகளுக்கு முரணான சாரத்தியத்துக்காகப் பொலிஸாரால் பிடிக்கப்படுகின்றனர்.

தலைக்கவசம் அணியாது வாகனம் செலுத்தல், மதுபோதையில் வாகனம் செலுத்துதல், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் இதர பத்திரங்கள் இல்லாது வாகனம் செலுத்தல் உள்ளிட்ட குற்றங்களுக்காகவே அவர்கள் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்படுகின்றது.



தண்டப்பணத்துக்கானபற்றுச்சீட்டு வழங்கப்படுபவர்களில் 10 வீதமானவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றார்.

# குறிகட்டுவான் விவகாரத்திற்கு தீர்வு — அமைச்சர் டக்ளஸ் நேரடி நடவடிக்கை

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் குறிகட்டுவான் பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை 29.10.2023 அன்று மேற்கொண்டிருந்தார். குறிகட்டுவான் இறங்குதுறையில் படகுகள் தரிப்பதில் காணப்பட்ட இட நெருக்கடிகளை சீர்செய்து ஒழுங்குபடுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீண்ட ஆழ்கடல் பயணத்தினை மேற்கொள்ளும் நெடுந்தீவு பயணிகள் படகுகளிற்கே இறங்கு துறையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், நேர அட்டவணைப்படி சீராக இறங்கு துறையில் படகுகள் தரித்து மக்களுக்கு அசௌகரியமற்ற சேவை வழங்குவதை ஒழுங்குபடுத்தி உறுதிப்படுத்துவதற்காக இரண்டு கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறிக்கட்டுவான் இறங்குதுறையில் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற படகுகளை தரிப்பதற்கு ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படாமையினால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

குறிப்பாக, மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மாத்திரம் பயன்படுத்தி போக்குவரத்தில் ஈடுபடுகின்ற நெடுந்தீவு மக்களும் அரச ஊழியர்களும் பாதிப்புக்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இதுதொடர்பாக, இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறிகட்டுவானுக்கான கண்காணிப்பு விஜயத்தினை 29.10.2023 அன்று மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு பயணிகள் படகு சேவை உரிமையாளர்கள், கடற்படை மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து கலந்துரையாடியதை தொடர்ந்து தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# வட்டுக்கோட்டையில் பெருமளவான கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது!

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டுக்கோட்டை பகுதியில் 104 கிலோ எடையுடைய கேரளா கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை வீதியூடாக முச்சக்கர வண்டியில் கஞ்சாவினை எடுத்துச் செல்லும் போது கடற்படையினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் போராட்டம்!




யாழ்ப்பாணம் அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்மாணம் ஐந்து சந்தி பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் 29-10-2023 அன்று முன்னெடுக்கப்பட்டது.

வெள்ளி ஜும்மா தொழுகையினை தொடர்ந்து பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து இவ்வாறு கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் மௌலவிகள், முஸ்லிம் வர்த்தகத்தினர், நலன்விரும்பிகள் மற்றும் கலந்து கொண்டனர்.



# நவ மகாஜனா சிற்பி தெ.து.ஜயரத்தினம் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்!

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் நவ மகாஜனா சிற்பி தெ.து. ஜயரத்தினம் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் 29-10-2023 அன்று காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகி கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச செயளாளர் சிவஹீ அவர்களும், சிறப்பு விருந்தினராக ஆரம்பப் பிரிவிற்கான வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் முரளீதரன் அவர்களும், கௌரவ விருந்தினராக மகாஜனாக் கல்லூரியின் ஓய்வு நிலை உப அதிபர் தவராஜாவும் கலந்துகெண்டனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகள், விருந்தினர்களின் உரைகள் என்பவற்றுடன் கடந்த காலங்களில் கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை நிகழ்வு தொடர்பான நினைவுப் பேருரையை கல்லூரியின் பழைய மாணவரான கவிஞர் சிறிசபேசன் அவர்கள் நிகழ்த்தியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# இலவச கண்புரை சத்திரச்சிகிச்சைகள் யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலையில் முன்னெடுப்பு



இலண்டனின் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்புடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இணைந்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் இலவச கண் புரை சத்திர சிகிச்சை நிகழ்வின் ஆரம்பநிகழ்வு 30.10.2023 அன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஆரம்பமாகியது. கண் சிகிச்சை நிலையப்பிரிவில் கண் சத்திரச்சிகிச்சை சிரேஷ்ட வைத்திய நிபுணர் எஸ்.மலரவன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எச். எம்.சாள்ஸ் கலந்துகொண்டார்.

இவ் கண் சிகிச்சை நிலையத்தின் வைத்திய குழாமினால் இன்றையதினம் 270 இலவச கண்புரை சத்திரச்சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இவ் சிகிச்சையானது இன்று ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 03.11 அன்றுவரை இடம்பெறவுள்ளது.

எனவே எதிர்வரும் 05 நாட்களில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு கண்புரை சத்திரச் சிகிச்சை மேற்கொள்ளமுடியும் என வைத்தியசாலையின் கண் சிகிச்சை நிலையப்பிரிவின் கண் சத்திரச்சிகிச்சை சிரேஷ்ட வைத்திய நிபுணர் எஸ்.மலரவன் தெரிவித்தார்.

இதில் இலண்டன் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் தலைவர் கலாநிதி பொறியிலாளர் க. சர்வேஸ்வரன், இலங்கைக்கான தலைவர் பொறியிலாளர் த. கென்றி அமலராஜ், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை பணிப்பாளர் கலாநிதி த. சத்தியமூர்த்தி, மேலதிக உதவி பணிப்பாளர்கள், பதிவாளர்கள், கண் புரை சத்திர சிகிச்சை வைத்திய குழுவினர்கள், இராணுவத்தினர்கள் சிகிச்சை பெறுநர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இலவச கண்புரை சத்திரச்சிகிச்சைகளுக்கான மருத்துவ உதவிகள், மற்றும் வைத்திய குழாமினருக்கான மேலதிக கொடுப்பனவுகள் உதவிகள் என்பவற்றுக்கான நிதியுதவியினை இலண்டன் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பு வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.







# வவுனியாவில் இருந்து திருடப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான ஐம்பொன் சிலை மீட்க்கப்பட்டது!

வவுனியாவில் இருந்து திருடப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட 30 லட்சம் ரூபாய் பெறுமதியான ஐம்பொன் சிலை ஒன்று பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த சிலையின் எடை 35 கிலோ என தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியில் வைத்து இந்த சிலை கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிலையை கடத்தி வந்தவர் தப்பி தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வருவதாக பொலிஸார் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் ரி. மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரே இந்த நடவடிக்கை முன்னெடுத்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதிக்கு பொலிஸார் சென்ற போது அதனை கடத்தி வந்தவர் தப்பித்து சென்றுள்ளார். சிலை கைப்பற்றப்பட்டு யாழ்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் 2023.10.27 அன்று வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் கடத்தல் மற்றும் வனங்களில் மரங்களை வெட்டுதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்துமாறும், சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தி சந்தேக நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் இன்றைய கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் பாதுகாப்பு தரப்பினருக்கு கூட்டத்திற்கு தலைமை தாங்கிய தலைவர்களால் அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கார்மாநாடு, கல்லாறு, கிளாலி, முருசுமோட்டை, குடமூர்த்தி, உமையாள்புரம் அக்கராயன்குளம் மற்றும் குஞ்சுப்பரந்தன் உட்பட பல பிரதேசங்களில் நடைபெற்று வரும் சட்டவிரோத மணல் கடத்தல் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காணொளிகள் மற்றும் புகைப்படங்கள் பல காண்பிக்கப்பட்டன.

பொலிஸ் மற்றும் இராணுவம் இதனுடன் தொடர்புடைய திணைக்களங்களுடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த இக்கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட 158 டிப்பர் ரக வாகனங்களும் நூற்றுக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரச உயர் அதிகாரிகள் சிலர் கூட டிப்பர் வண்டிகளை பயன்படுத்தி மணல் கடத்தலில் ஈடுபடுவது தெரியவந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.



கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு கருதி பாடசாலை நாட்களில் காலை 7 மணி முதல் 8 மணி வரையும், பிற்பகல் 1 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் முறிகண்டியில் இருந்து கிளிநொச்சி நகர எல்லை உட்பட பரந்தன் சந்தி வரை டிப்பர் உள்ளிட்ட கனரக வாகனங்களின் போக்குவரத்தை நிறுத்துவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.





மேற்கூறிய நேர எல்லைக்குள் ஏனைய வாகனங்களின் வேக வரம்பை மணிக்கு 40 கி.மீ ஆக குறைக்கவும் முடிவு செய்யப்பட்டதுடன், இந்த விதிகளை மீறும் சாரதிகள் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கவும் இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தில் சூரிய சக்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், மீள்குடியேற்றப்பட்ட மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மின்சாரம், நீர்ப்பாசனம், வீடமைப்பு, கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், எதிர்காலத்தில் அமுல்படுத்த எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் மற்றும் இங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் வடமாகாணத்தில் 25,000 நிரந்தர வீடுகளை நிர்மாணித்தல், சூரிய சக்தி மற்றும் மின்சார உற்பத்தித் திட்டங்கள் உட்பட மக்களுக்கு பயனளிக்கும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பாதுகாப்பு திணைக்களங்களின் தலைவர்கள், அரச நிறுவனங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# அதிக போதை பாவனையால் யாழ்ப்பாணத்தில் ஆணொருவர் உயிரிழப்பு!

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில் பகுதியில் அதிக போதைவஸ்து பாவனையால் ஆணொருவர் உயிரிழந்துள்ளார். உடுவில் பகுதியைச் சேர்ந்த விஜயராசா நிரஞ்சன் (வயது 34) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபரின் சகோதரர்கள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் இவர் தனது தாயாருடன் உடுவில் பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் இன்று காலை கழிப்பறைக்கு சென்று விட்டு நீண்ட நேரம் திரும்பி வரவில்லை. இந்நிலையில் தாயார் கதவை திறக்க முற்பட்டபோது அது திறபடவில்லை. இந்நிலையில் தாயார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தவேளை அவர் இறந்த நிலையில் காணப்பட்டார்.

அவரது சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளின்படி அதிக போதைப்பொருள் பாவனை காரணமாக குறித்த மரணம் சம்பவித்துள்ளதாக தெரியவருகிறது.

அவரது வீட்டிலும் போதைப்பொருள் ஏற்றும் ஊசி உள்ளிட்ட பொருட்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# வடமராட்சி கிழக்கில் வெள்ளை வானில் சென்றவர்களால் கொள்ளை!

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் வெள்ளை வானில் சென்ற சிலரில் நபர் ஒருவர் வீட்டுக்குள் புகுந்து வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி வீட்டில் இருந்த ஆவணங்கள் மற்றும் பணம் என்பன எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் இரவு 9:45 மணியளவில் கே.டி.எச் ரக ஹயஸ் வாகனத்தில் சென்றர்களால் மேற்கொள்ளப்பட்டது. பருத்தித்துறை பிரதேச சபையில் பணியாற்றிவரும் ஈஸ்வரன் என்பவரது வீட்டுக்குள் சென்று "உங்களுடைய அடையாள ஆவணங்களை காண்பியுங்கள் என்று தெரிவித்து" அவற்றை பார்வையிட்டனர்.

பின்னர் தொலைபேசிகளும் பறிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுடைய அடையாள அட்டை என்பனவற்றை பார்வையிட்டுள்ளதுடன் அவர் காணி ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக வைத்திருந்த ஆவணங்கள், சோதிக்கப்பட்டுளதுடன் அந்த பையில் இருந்த அதற்குள் இருந்த ரூபாய் 5 லட்சம் பணம், மற்றும் ஆறரை பவுன் தங்க நகைகளும் வாகனத்தில் சென்ற இனந்தெரியாத நபர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மருதங்கேணி பொலிசார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.




# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை பார்க்கும் போது வியப்பாக உள்ளது – ஆளுநர் புகழாரம்



அரச வைத்தியசாலைகளில் கட்டாயமாக நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எச்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற இலவச கண் புரை சத்திர சிகிச்சை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியசாலையின் கண் சிகிச்சை பிரிவுக்கு வருகை தந்தபோது, வழமையாக அரச வைத்தியசாலைகளில் ஒருவித நாற்றம் காணப்படும் ஆனால் இன்று அதை உணரவில்லை. இது ஒரு தனியார் வைத்தியசாலை போல காட்சி அளிக்கின்றது.

இங்கே அனைத்து விடயங்களும் தனியார் வைத்தியசாலை போல காணப்படுகின்றது. இதனை பார்க்கும்போது வியப்பாக இருந்தது. எனவே இதனை செயல்படுத்துகின்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பார் மற்றும் கண் சிகிச்சைக்கு பொறுப்பான வைத்திய நிபுணர் மலரவன் ஆகியோருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

# தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையின் உள்ளும், புறமும் தொடர்ந்து போராட வேண்டும் – சபா குகதாஸ்



தமிழ்த் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் வெற்றுக் கதிரைகளைப் பார்த்து பேசுவதை எதிர்வரும் நாட்களில் குறைத்து ஒற்றுமையாக சபையின் உள்ளும் புறமும் தொடர்ந்து போராட தயாராக வேண்டும் 75 ஆண்டுகளாக பேசுகிறோம் மாற்றத்திற்குப் பதிலாக மக்களுக்கு கிடைத்தது அநீதிதான் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பாராளுமன்றத்திலும் ஒற்றுமை இன்மையை காட்டிக் கொடுக்காமல் சுயலாப நோக்கில் செயற்படாமல் ஒற்றுமையே பலம் என்ற நோக்கில் களத்தில் இறங்குங்கள் செயலில் காட்டுங்கள்.

பாதிப்பின் உச்சத்தில் விரக்தி நிலையில் வாழும் வடக்கு கிழக்கு மாகாண பெரும்பான்மைத் தமிழ் மக்களின் மனநிலையை விளங்கிக் கொண்டு தொடர்ந்து போராட்டங்களை அறிவித்து பலவீன நிலையை வெளிப்படுத்தாது மக்கள் போராட்டங்களை அறிவித்து அரசியல் இருப்புக்கான குளிர்காய்தலை தவிர்த்து ஆக்க பூர்வமாக சர்வதேச நாடுகளின் அதன் ஊடகங்களின் கவனத்தை திசை திருப்ப போராட்டக் களமாக பாராளுமன்றத்தின் சபையின் மையப் பகுதியையும் பாராளுமன்ற முகப்பு வாயிலையும் ஐ.நா வதிவிடப் பிரதிநிதியின் வாசஸ்தலத்தின் வாசலையும் முதன்மையான நாடுகளின் தூதரக வாசலையும் மாற்ற வேண்டும்.



உள்ளக நீதிப் பொறிமுறையில் நாட்டு மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறிய விடையம் மிக முக்கியமானது தமிழர் தரப்பு அதனை வலுப்படுத்தி சர்வதேச நீதிப் பொறிமுறைக்கான கதவினைத் திறக்க தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து போராடுவதன் மூலமே மாற்றத்தை கொண்டு வரலாம் இத்தகைய போராட்டம் நாட்கள் கழிய பல எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைப்பதற்கான வழியை திறக்கும்.

தனித்து ஓடினால் மக்கள் நன்றாக ரசிப்பார்கள் வாக்கு வங்கி அதிகரிக்கும் என நினைக்கும் பிற்போக்கு சிந்தனையை தவிர்த்து சகலரையும் ஒன்றினைத்து போராட முன் வாருங்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களே. இத்தகைய செயற்பாடே நீதிக்கான வழியை திறக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் "ஊழல் அற்ற தேசத்தினை உருவாக்குவோம் ஊழல் வேண்டாம்" என்னும் கருப்பொருளில் விழிப்புணர்வு

(பிற்குறிப்புக் கேள்வி - ஊழல் அற்ற தேசத்தினை உருவாக்குவோம், - இந்த கருப்பொருள் இந்தியாவிற்கா அல்லது இலங்கைக்கா அல்லது இரண்டிற்குமாகவா?)



யாழ்ப்பாணம் இந்திய துணைத்துாதரகத்தின் ஏற்பாட்டில் ஊழல் தடுப்பு வாரத்தினை முன்னிட்டு "ஊழல் அற்ற தேசத்தினை உருவாக்குவோம், ஊழல் வேண்டாம்" என்னும் கருப்பொருளில் ஊழல் தடுப்புக்கான உறுதிமொழி எடுக்கும் விழிப்புணர்வூட்டல் யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் அலுவலகத்தில், யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதுவர் நட்ராஜ் ஜெயபாஸ்கர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரக பதவிநிலை அதிகாரிகள், அலுவலர்கள், கலந்துகொண்டு தடுப்புக்கான விழிப்புணர்வுக்கான உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

(பிற்குறிப்புக் கேள்வி - ஊழல் அற்ற தேசத்தினை உருவாக்குவோம், - இந்த கருப்பொருள் இந்தியாவிற்கா அல்லது இலங்கைக்கா அல்லது இரண்டிற்குமாகவா?)

# மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் அமரர் ச.சந்திரகாந்தன் ஞாபகார்த்த மழலைகள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி



அமரர் ச. சந்திரகாந்தன் ஞாபகார்த்த மழலைகள் உதைபந்தாட்ட கொண்டாட்ட சுற்றுப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி அணி வெற்றி!



அமரர் ச. சந்திரகாந்தனின் நண்பர்களின் நிதி அனுசரணையில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமியால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியானது 31-10-2023 காலை 8.00 மணியளவில் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இச் சுற்றுப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அமரர் சந்திரகாந்தனின் நண்பனான சட்டத்தரணி ப. ஐங்கரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பிரதி அதிபர் வே.சந்திரசேகர் மற்றும் அமரர் சந்திரகாந்தனின் பயிற்றுவிப்பாளர் கு. பிரபாகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வட மாகாணத்தில் 8 வயதிற்குட்பட்டவர்களுக்கு நடாத்தப்பட்ட முதற் சுற்றுப்போட்டியான இப்போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமி, மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி, கோண்டாவில் றொனால்டோ அக்கடமி, அரியாலை யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட அக்கடமி, மருதனார்மடம் நொதேர்ண் ஸ்போட்ஸ் கொலிச் மற்றும் வேலணை ஐயானார் அக்கடமி ஆகிய 6 அணிகள் பங்கெடுத்திருந்தன.



இறுதிப் போட்டியில் மருதனார்மடம் நொதேர்ண் ஸ்போட்ஸ் கொலிச் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி அணி விளையாடியது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 4:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமி அணியை எதிர்த்து கோண்டாவில் றொனால்டோ அக்கடமி அணி விளையாடியது. இதில் கோண்டாவில் றொனால்ட்டோ அக்கடமி அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

# வடக்கில் 370 அதிபர் மற்றும் பிரதி அதிபர்களை நியமிக்க நடவடிக்கை – மாகாண பணிப்பாளர் தெரிவிப்பு



வடமாகாணத்தில் பதின்மூன்று வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள அதிபர் மற்றும் பிரதி அதிபர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் யோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாளடாவிய நீதியில் அதிபர் மற்றும் பிரதி அதிபர்களுக்கான நேர்முகத் தேர்வுக்காக சுமார் 4500 பேர் பங்குபற்றிய நிலையில், வடக்கில் சுமார் 370 பேர் வெற்றிடமாக உள்ள பாடசாலைகளில் நியமிக்கப்படவுள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.



# நெடுந்தீவு இளைஞர் மரணம் – போதைவஸ்து பாவனையே காரணம்!

நெடுந்தீவில் இறந்த இளைஞர் ஐஸ் போதைப் பொருள் பாவனையினாலே ஏற்பட்ட உயர்குருதி அமுக்கம் காரணமாக மரணித்ததாக உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து அப் பகுதியைச் சேர்ந்த குணாராசா தனுஷன் (வயது 25) என்பவரது சடலம் 31-10-2023 அன்று இரவு மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவரது அம்மம்மா வீட்டில் தங்கியிருந்து 31-10-2023 அன்று அதிகாலை வீட்டுக்கு செல்வதாக கூறி சென்றவரை மாலைவரை காணமையால் தேடியபோதே ஆட்களற்ற வீட்டில் இறந்து கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பரிசோதனகள் மேற்கொள்ளப்பட்டதிலேயே இத்தகவல் வெளியாகியானதாகத் தெரிவிக்கப்பட்டது.



# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மாவீரர் நினைவுத் தூபியில் நினைவெந்தலும் துப்பரவு பணியும்!



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபி துப்பரவு செய்யப்பட்டு ஈகை சுடர் ஏற்றப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபியை துப்பரவு செய்யும் பணிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 01-11-2023 அன்று ஈடுபட்டனர்.

அதன்பின் தூபியில் ஈகைச்சுடர் ஏற்றி மாணவர்கள் மரியாதை செலுத்தினர்.

# மன்னாரில் இருந்து கொழும்பு சென்ற தனியார் சொகுசு பேருந்து மதுரங்குளி பகுதியில் விபத்து

- மன்னார் நிருபர் (02-11-2023)

மன்னாரிலிருந்து கொழும்பு சென்ற தனியார் சொகுசு பேருந்தானது மதுரங்குளி பகுதியில் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த பேருந்தானது வியாழன் (02-11-2023) மதியம் 12 மணியளவில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து புறப்பட்டு கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது மதுங்குளி பகுதியில் பட்டாரக வாகனம் ஒன்றுக்கு இடம் விடும் போது குறித்த பேருந்து தடம் புரண்டுள்ளது.

குறித்த விபத்தில் பேருந்தில் பயணித்த பயணிகள் எவருக்கும் எந்த ஒரு அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.


மேலும் இந்த விபத்து தொடர்பாக அப்பகுதி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





# கட்சிகளின் வழியே மக்களும்?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த வாரம் வவுனியாவில் தங்களுக்கிடையே மோதிக் கொண்டார்கள். ஆளுக்காள் அடிபட்டு, அதன் விளைவாக போலீஸ் நிலையம்வரை போயிருக்கிறார்கள். போலீசாரை சம்பவ இடத்துக்கு அழைத்ததும் அவர்கள்தான். எந்தப் போலீசுக்கு எதிராக இதுவரை காலமும் போராடினார்களோ, அதே போலீஸிடம் போய் ஆளுக்காள் முறைப்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்த மோதல் தொடர்பில் வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மோதலைப் பற்றிய விளக்கம் உண்டு. ஆனால் அது முழுமையானதாக தெரியவில்லை. சங்கத்துக்குள் ஏற்பட்ட மோதல் ஏன் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்தது? அதை ஏன் சங்கத்துக்குள் தீர்க்க முடியவில்லை? அல்லது அவ்வாறு தீர்க்கமுடியாதபடி வெளித் தரப்புகள் சம்பந்தப்பட்டவர்களை இயக்குகின்றனவா?

தமிழ்த் தேசிய அரசியலில் ஏற்பட்ட ஆகப்பிந்திய வீழ்ச்சி அது. கடந்த 14 ஆண்டுகளாக எல்லாப் போராட்டங்களிலும் ஊர்வலங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் முன்னணிப் படையாக நிற்பது அந்த அம்மாக்கள்தான். கண்ணீரோடு மண்ணை அள்ளி வீசி அரசாங்கத்தைத் திட்டியபடி, எல்லா போராட்டங்களிலும் காணப்படுவார்கள்.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் நீதிக்கான போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பது இந்த அம்மாக்கள்தான். கட்சிகளோ குடிமக்கள் சமூகங்களோ அல்ல. கடந்த 14 ஆண்டுகளாக வவுனியாவிலும் முல்லை தீவிலும் இரண்டு குடில்களில் மிகச் சில அம்மாக்கள் இருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய போராட்டத்தை மக்கள் மயப்படுத்த அவர்களுக்கு தெரியவில்லை. மக்களும் அவர்களை நோக்கிச் செல்வது குறைவு. ஆனாலும் அவர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். முழுத் தமிழ் மக்களுக்குமான போராட்டத்தின் உணர்ச்சிக் கூர் முனையாக அவர்களே காணப்படுகிறார்கள். அவர்கள் மத்தியில் கணிசமானவர்கள் மூப்பினாலும் களைப்பினாலும் ஏமாற்றத்தினாலும் நோய்களினாலும் இறந்து போய்விட்டார்கள். எனினும் விடாது போராடுகிறார்கள்.

அவர்களுடைய கண்ணீருக்குத் தமிழ் அரசியலில் ஒரு மகத்தான சக்தி உண்டு. கடந்த 14 ஆண்டு கால நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் உணர்ச்சிகரமான ஈட்டி முனையாக அவர்களே காணப்படுகிறார்கள்.

அதனால்தான் அவர்களை கையாள்வதற்கு கட்சிகளும் முயற்சிக்கின்றன் சிவில் அமைப்புகளும் முயற்சிக்கின்றன்புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும், தனி நபர்களும் முயற்சிக்கிறார்கள். அதனால்தான் அரசாங்கம் ஒரு முறை அவர்களை அவர்கள் பயணம் செய்த பேருந்துக்குள் அடைத்து வைத்து வெளியேறவிடாமல் தடுத்தது அவர்களை முரட்டுத்தனமாகக் கையாண்டது.

அதனால்தான் அமெரிக்க தூதுவர் அவர்களை சந்தித்து அவர்களோடு படமெடுத்து அதைத் தனது டுவிட்டர் பக்கத்தில் பிரசுரிக்கிறார். அமெரிக்கத் தூதர் மட்டுமல்ல, இலங்கைக்கு வரும் மேற்கத்திய ராஜதந்திரிகள், ஐநாவின் முக்கியஸ்தர்கள் போன்றோர் அந்த அம்மாக்களைச் சந்திக்காமல் செல்வது குறைவு. ஐநா கூட்டத் தொடரில் ஈழத் தமிழர்களுக்கான கண்ணீர் சாட்சியங்கள் அவர்கள்தான்.

அந்த அம்மாக்களின் சங்கங்கள் அரசியல் தெளிவுடைய மக்கள் இயக்கங்களால் அல்லது கட்சிகளால் வழிநடத்தப்படவில்லை. அந்த அம்மாக்களின் கண்ணீர்தான் அவர்களுடைய பலம். ஆனால் கண்ணீருக்கு அரசியல் தெளிவு இருக்க வேண்டும் என்று இல்லை. இது அந்த அமைப்புகளில் காணப்படும் பிரதான பலவீனம்.

அடுத்த பலவீனம், அவர்களுக்கு உதவி புரியும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தனி நபர்களும். அவர்கள்தான் உதவி புரிகிறார்கள் அவர்கள் தான் தொலை இயக்கியால் இந்த அமைப்புகளை கட்டுப்படுத்தவும் முயல்கின்றார்கள். மூன்றுக்கும் குறையாத புலம்பெயர்ந்த தரப்புக்கள் இந்த அம்மாக்களைத் தத்தெடுக்க முயற்சிப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய உதவிகள் இல்லை என்றால் கடந்த 14 ஆண்டுகளாக இந்த அம்மாக்கள் தொடர்ச்சியாகப் போராடியிருக்க முடியாது. அவர்களுடைய உதவிகள் இல்லையென்றால் இந்த அம்மாக்கள் ஐநா போன்ற உலக அவைகளுக்குச் சென்று தமது கண்ணீரைச் சாட்சியமாகக் கொடுத்திருக்க முடியாது. ஆனால் அவ்வாறு உதவி செய்யும் அமைப்புகளும் தனி நபர்களுமே இந்த அம்மாக்கள் பிரிந்திருப்பதற்கு ஒருவிதத்தில் காரணம். கட்சிகளும் காரணந்தான்.

அவ்வாறு பிரித்துக் கையாளும் முயற்சிகளின் விளைவாக ஒரு முழு நிறைவான ஐக்கியம் இந்த அம்மாக்களின் சங்கங்களுக்கிடையே இன்றுவரை ஏற்பட முடியவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்கள் பேரவை பலமாக இருந்த காலகட்டத்தில் இந்த அம்மாக்களின் சங்கங்களை ஒற்றுமைப்படுத்த முயற்சித்தது. முடியவில்லை. சில குடிமக்கள் சமூகங்கள் முயற்சித்தன. முடியவில்லை. எனினும், வெளிநாட்டு தூதுவர்களுடனான சந்திப்புகளின் போது ஒரு குடிமக்கள் சமூகம் இந்த அம்மாக்களுக்கு உதவுவதுண்டு. ஆனால் எந்த ஒரு குடிமக்கள் சமூகத்தாலும் இந்த அம்மாக்களின் சங்கங்களை கட்டுக்கோப்பான ஐக்கிய அமைப்பாக திரட்டியெடுக்க முடியவில்லை.

அதற்கு பெருமளவுக்கு காரணம் புலம்பெயர்ந்த தரப்புகளில் இருந்து கிடைக்கும் உதவிகள் தான். வவுனியாவில் ஏற்பட்ட மோதல்களின் பின்னணியிலும் புலம்பெயர்ந்த நபர்கள் சிலர் உண்டு என்று அம்மாக்கள் குற்றம் சாட்டுகிறார்கள். வவுனியா மோதலுக்குக் காரணம் கொள்கை முரண்பாடு அல்ல. கொள்கை ரீதியாக அந்த அம்மாக்களுக்கிடையே முரண்பாடுகள் கிடையாது. அந்த முரண்பாடுகளின் தோற்றுவாய் சில புலம்பெயர்ந்த தமிழர்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தமிழ்த் தேசியப் பரப்புக்குள் ஏற்பட்ட ஒரு முரண்பாடு. அகமுரண்பாடு. இதனை பகை முரண்பாடு ஆக்காமல் நேச முரண்பாடாக அணுகியிருந்திருக்க வேண்டும். அல்லது அது பகை முரண்பாடாக மாறுவதை தடுத்து இந்த அம்மாக்களை ஒரு கட்சியோ சிவில் அமைப்போ ஐக்கிய படுத்தியிருந்திருக்க வேண்டும். ஆனால் தங்களுக்கு இடையே ஐக்கியபட முடியாத கட்சிகளும், கட்சிகளை ஐக்கியப்படுத்த முடியாத குடிமக்கள் சமூகங்களும் இந்த வயோதிப அம்மாக்களை எப்படி ஐக்கியப்படுத்தும்?

தமிழ்த் தேசிய அரசியலானது அக முரண்பாடுகளைக் கையாளும் பக்குவம் குறைந்தது என்பதற்கு ஆகப்பிந்திய உதாரணம் இது. மற்றொரு உதாரணம், அண்மையில் இடம்பெற்றது. அம்மாக்கள் சண்டை போடுவதற்கு சில நாட்களுக்கு முன் நடந்தது.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சுமந்திரன் ஓர் ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில், சம்பந்தர் ஓய்வு பெற வேண்டும் என்று கேட்டிருந்தார். முதுமை காரணமாக சம்பந்தர் இயலாதவர் ஆகிவிட்டார் என்பதனால் அவர் ஓய்வு பெற வேண்டும் என்று சுமந்திரன் அந்த நேர்காணலில் கூறியிருக்கிறார். கட்சியின் மிக மூத்த தலைவரைப்பற்றி அடுத்த நிலைத் தலைவர் ஒருவர் அவ்வாறு பகிரங்கமாகக் கூறுவது எதைக் காட்டுகிறது? அது ஓர் உட்கட்சிப் பிரச்சினை. அதை ஏன் அவர் பகிரங்கமாக கூற வேண்டி வந்தது?

ஏற்கனவே கூட்டமைப்பாக இருந்து படிப்படியாக உடைந்துடைந்து வந்து இப்பொழுது தமிழரசுக் கட்சியாகச் சுருங்கிப் போய்விட்டது. இபொழுது அக்கட்சி தனக்குள்ளேயும் மோதத் தொடங்கி விட்டதா? தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்று போட்டிதான் அதற்கு காரணம். அது எல்லா கட்சிகளுக்குள்ளும் ஏற்படும் ஜனநாயகப் போட்டி. அதில் சுமந்திரனும் ஸ்ரீதரனும் போட்டியிடக் கூடும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. சி.வி.கே. சிவஞானத்துக்கும் விருப்பம் உண்டு. ஆனால் மாவையும் சம்பந்தரும் தேர்தலை வைக்கிறார்கள் இல்லை. அரசாங்கம் தேர்தல்களை வைக்கவில்லை என்று கேட்கும் ஒரு கட்சி, தன்னுடைய தலைமைக்கான தேர்தலை ஒத்திவைத்து வருகிறது. அதன் விளைவாக கட்சியின் அடுத்த நிலை தலைவர் ஒருவர் உட்கட்சி விவகாரத்தை பொதுவெளியில் வைத்துப் பேசியிருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியலின் சீரழிவை மேற்கண்ட இரண்டு உதாரணங்களும் நமக்குக் காட்டுகின்றன. தங்களுக்கிடையே தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை பொது வெளிக்குக் கொண்டு வந்து, தங்களையும் கீழ்மைப்படுத்தி, தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தையும் பலமிழக்கச் செய்யக்கூடியவைகளாக மேற்படி சம்பவங்கள் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பலமான தேசிய இயக்கம் இல்லாத வெற்றிடத்தில்தான் இவ்வாறான மோதல்கள் ஏற்படுகின்றன. மூத்த, பாரம்பரியம் மிக்க ஒரு கட்சியும் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை பாதிக்கப்பட்ட முதிய அம்மாக்களும் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை. கட்சிகள் எவ்வழி; மக்களும் அவ்வழி.

## வீணாவின் கவிக்கணை

நீ
யார் என்பதை
நிருபிக்க
வீண் வாதாட்டம்
தேவையில்லை,
விடாமுயற்சியும்
தன்னம்பிக்கையும்
இருந்தால்,
காலமும் நேரமும்
உன்னைப்பற்றி
அடுத்தவர் புகழ்வதை
கேட்கவைக்கும்.

# கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஏற்பாட்டில் படைப்பாளிகளையும் அறிஞர்களையும் கௌரவிக்கும் விழா சிறப்பாக நடைபெற்றது

கனடிய செய்திகள்
Canadian News

கனடாவில் கடந்த 30 ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கிய வண்ணம் தமிழ் இலக்கியம் மற்றும் படைப்பிலக்கியத்தின் கூறுகளாக விளங்கும் கவிதை சிறுகதை ஆகிய துறைகளில் கருத்தரங்குகளையும் போட்டிகளையும் நடத்தி வரும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஏற்பாட்டில் படைப்பாளிகளையும் அறிஞர்களையும் கௌரவிக்கும் விழாவின் தொடர்ச்சியாக இந்த வருடத்திற்குரிய விருதுகள் வழங்கும் விழா கடந்த 28-10-2023 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின்






















தற்போதைய தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில். தலைவர் அகணி சுரேஸ் தனது தலைமையுரையில் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய இயக்குனர் சபையின் அனைத்து உறுப்பினர்களும் வழங்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் தனது தலைமைப் பதவியை நேர்த்தியாகத் தொடர்வதற்கு பக்க பலமாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

எழுத்தாளர் இணையத்தின் கடந்து வந்த பாதை என்று கருப்பொருளின் கீழ் உரையாற்றிய துணைச் செயலாளரும் இணையத்தின் ஆரம்பச் செயலாளராக பணியாற்றியவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம். கனடாவில் தமிழ் எழுத்தாளர் இணையத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற முனைப்போடு செயற்பட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து தாயகத்தின் எழுத்தாளர்களாக தங்கள் பணியை ஆரம்பித்து இன்றுவரை அதைத் தொடர்ந்து ஆற்றிவரும் அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

கனடாவில் தற்போது வாழ்ந்த வண்ணம் தமிழ்ப் பணியையும் இலக்கியப் பணியையும் இணைந்தே ஆற்றிவரும் பத்து எழுத்துலகச் சிற்பிகளுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பெற்றன.

பேராசிரியர்கள் கலாநிதி இ. பாலசுந்தரம். பேராசிரியர் கலாநிதி நாகராஜ ஐயர் சுப்பிரமணியன். முனைவர் பால சிவகடாட்சம். முனைவர் செல்வநாயகி "ஸ்ரீதாஸ்", எழுத்தாளர் திரு. தங்கராசா சிவபாலு. எழுத்தாளர் திரு. சின்னையா சிவனேசன். எழுத்தாளர் திரு. பாலா குமாரசாமி (தேவகாந்தன்), எழுத்தாளர் திரு. "சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன். கலைஞர் எழுத்தாளர் "சோக்கல்லோ சண்முகம்" திரு. தாமோதரம்பிள்ளை சண்முகநாதன். எழுத்தாளர் "வீணைமைந்தன்" தெய்வேந்திரன் சண்முகராஜா ஆகிய பத்து படைப்புலகம் கலையுலகம் சார்ந்தவர்களுக்குவிருதுகள் வழங்கப்பெற்றன.

நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் கலந்து சிறப்பித்த இந்த விழாவில் தமிழ் பேசும் அரசியல் தலைவர்களான எம்பிபி மற்றும் துணையமைச்சர் விஜேய் தணிகாசலம் மற்றும் நகரசபைக் கவுன்சிலர் யுனைற்றா நாதன் ஆகியோரும் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்து உரையாற்றினர்.

மேற்படி விருதுகள் வழங்கும் விழா வெற்றிகரமாக நடைபெற கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய இயக்குனர் சபை உறுப்பினர்களான தலைவர் - அகணி சரேஸ். செயலாளர் கமலவதனா சுந்தா. அருட்கவி ஞானகணேசன் - பொருளாளர். துணைத் தலைவர் குரு அரவிந்தன். துணைச் செயலாளர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் செயற்குழு உறுப்பினர்கள் திருமதி. வாசுகி நகுலராஜா மற்றும் திருவாளர்கள் செ. ஜெயானந்தசோதி கணபதி ரவீந்திரன், ரவீந்திரநாதன் கனகசபை. இராச்குமார் குணரட்ணம். அனுரா வென்சிலாஸ். ஆகியோரும் மேலும்பல தொண்டர்களும் தங்கள் நேரத்தையும் பல்வேறு வகையான உதவிகளையும் அர்ப்பணித்திருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக எவ்வித தடையும் தொய்வும் இன்றி நகர்ந்து சென்ற இந்த விருது விழாவில் கலந்து கொண்ட அனைவரும் மிகவும் மகிழ்ச்சியோடு இறுதிவரை அமர்ந்திருந்து அனைத்து நிகழ்வுகளை ரசித்தும் விருது பெற்றவர்களைப் பாராட்டியும் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியில் மதிய உணவும் அனைவருக்கும் வழங்கப்பெற்றது.

**- ஸ்காபுறோவிலிருந்து சத்தியன்**

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம், காக்கைதீவு மற்றும் சாவற்கட்டு கடற்றொழிலாளர்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது



இரண்டு தரப்பினருக்கும் இடையில் அண்மைக்காலமாக நிலவிவந்த தொழில்சார் முரண்பாடுகளை தீர்த்து வைக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

காக்கைதீவில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் இறங்குதுறை மற்றும் மீன் விற்பனை சந்தை போன்றவற்றை பகிர்ந்து கொள்வதில் முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் சுமூகமான தீர்விற்கு சம்மந்தப்பட்ட இரண்டு தரப்புக் கடற்றொழிலாளர்களும் சம்மதம் தெரிவித்த நிலையிலேயே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர், மானிப்பாய் பிதேச சபை செயலாளர், கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஜெ.சுதாகர், காக்கைதீவு மற்றும் சாவற்கட்டு கடற்றொழிலாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



# மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(02-11-2023)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு "வாசிப்பை நேசிப்போம் புத்தகங்களை நண்பர்கள் ஆக்குவோம்" எனும் தொனிப்பொருளில் வியாழக்கிழமை (2) புத்தக கண்காட்சியும் விற்பனையும் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி. அரவிந்தராஜ் தலைமையில் இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் இருந்து பாடசாலை மாணவர்கள் ,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நடைபாவணியாக பாடசாலையை வந்தடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து பாடசாலை முன்றலில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஏற்பாட்டில் வீதி நாடகம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் புத்தகக் கண்காட்சி இடம்பெற்றது.

இப்புத்தக கண்காட்சி பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் பிரதேச செயலக பணியாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கண்காட்சியில் பல புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதோடு விற்பனையும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# மன்னாரில் நீண்ட கால போதைப் பொருள் கடத்தல் சந்தேகநபர் போதைப் பொருளுடன் கைது



- மன்னார் நிருபர் (02-11-2023)

மன்னாரில் நீண்ட காலமாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் மன்னார் தாராபுரம் கிராமத்துக்கு அருகாமையில் புதன்கிழமை (01) இரவு 9 மணியளவில் நடைபெற்றதாக போலீசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது இச் சந்தேக நபர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் இருந்து தாராபுரத்திற்கு இப் போதைப் பொருளை கொண்டு வந்த வேளையில் இந்த நபர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

5150 போதைப்பொருள் மாத்திரைகள் உடனே 30 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இப் போதைப்பொருள் மாத்திரைகள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டு வந்துள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் மாத்திரைகளையும் மேலதிக விசாரணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் வருகை தர உள்ள தூது குழு கடல் அட்டை விரிவாக்கத்திற்கும் தாயக பகுதிகளை கண்காணிக்கவும் வருவது ஆபத்தான விடயம்



- சட்டத்தரணி சுகாஷ்

யாழ்ப்பாணத்தில் கடல் அட்டை பண்ணை விரிவாக்கத்துக்கும் தமிழர் தாயக பகுதிகளை கண்காணிப்பதற்கும் தூதுக்குழு ஒன்று வருகை தர உள்ளதாக அறியக் கிடைப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகர்' தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பூகோள போட்டி காரணமாக யாழ்ப்பாணம் வருகை தர உள்ள தூது குழு கடல் அட்டை விரிவாக்கத்திற்கும் தாயக பகுதிகளை கண்காணிக்கவும் வருவது ஆபத்தான விடயம்.

இலங்கை கடலால் சூழப்பட்ட தீவாக காணப்படுகின்ற நிலையில் எமது கடல் வளம் வெளிநாட்டு சக்திகளுக்கு தாரைவார்க்கப்பட்டு கொண்டிருக்கிறது.

ஆட்சியாளர்கள் சீனாவிடம் இருந்து மீன்கள் இறக்குமதி செய்வதற்கான உடன்படிக்கையை செய்துள்ள நிலையில் எமது கடல் வளமும் சீனாவுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

எமது கடல் வளத்தை எமது மீனவர்கள் பயன்படுத்த முடியாத நிலையில் எதிர்காலத்தில் எமது மீனவர்களும் சீனாவின் மீன்களை உண்ண வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

பூகோள ரீதியாக ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை இந்தியாவும் வெளிநாடுகளும் தலையிட்டு விரைவாக வழங்க வேண்டும்.

ஆகவே பூகோள ரீதியாக ஏற்பட்டுள்ள சீனாவின் ஆதிக்கத்தை தடுப்பதற்கு, தமிழர் பிரச்சனைக்கு தீர்வு வழங்காவிட்டால் அயல் நாடான இந்தியாவின் இறையாண்மைக்கும் பங்கம் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் நினைவேந்தல்!



விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்களது 16ம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண தலைமையகத்தில் இன்று இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி, ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பொது செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், த.தே.ம. முன்னணியின் மகளிர் அணித்தலைவி வாசுகி சுதாகரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# துறைசார் நிபுணர்களின் வெளியேற்றம், இந்த நாட்டின் அழிவுக்கான ஆரம்பமே – சிறீதரன் எம்.பி



அரசியல், பொருளாதார ரீதியாக உறுதித்தன்மையற்றிருக்கும் இந்த நாடு, மீட்சியற்ற நிலையில் அழிவைநோக்கிச் சென்று கொண்டிருப்பதைத்தான், நாளாந்தம் நாட்டைவிட்டு வெளியேறும் துறைசார் நிபுணர்கள், வல்லுனர்கள் மற்றும் புத்திஜீவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு பறைசாற்றி நிற்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற 0yslans நிறுவனத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

oyslans நிறுவனத்தின் நிறுவுநரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான தம்பிஜயா பாலகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நல்லை ஆதீனத்தின் பிரதமகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்மந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆளுநரின் செயலாளர் பொன்னம்பலம் வாகீசன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கணணித் துறைத்தலைவர் S. சுதாகர், இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலைய உதவி இயக்குநர் மு. கந்தவேள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் யாழ்ப்பாண நிலைய இயக்குநர் A.K. கோகுலன், தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் யாழ் மாவட்ட முகாமையாளர் R. திருமுருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய சிறீதரன் எம்.பி, ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டுள்ள போதும், இலங்கையின் வடக்கு, கிழக்கில் உலகத்தரம் வாய்ந்த மென்பொருள் உற்பத்தி மற்றும் விற்பனையில் கோலோச்சி வரும் oyslans நிறுவனம் ஏராளமான இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு எனும் வரப்பிரசாதத்தை வழங்கிவரும் நிறுவனமாகவும் முன்னிலை வகிக்கிறது. இத்தகைய தொழில்நுட்ப வாய்ப்புகளை எமது பிள்ளைகள் முறையாகப் பயன்படுத்தி, தமது துறைசார் அறிவையும் வல்லமையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.



# எதிர்கால உலகை வெல்ல, பாடசாலைகளின் கல்விப் புலம் புதிய பரிமாணம் பெறவேண்டும் – சிறீதரன் எம்.பி

- நடராசா லோகதயாளன்

பேரிடர் காலங்களையும், உலக ஒழுங்கையும் இலகுவில் எதிர்கொள்ளக் கூடிய எதிர்கால சமூகத்தின் உருவாக்கம் ஒன்றிற்காக, மாணவர்களை முதலீடாகக் கொண்ட உற்பத்தியாளர்களான ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விப்புலம் சார்ந்தோர், கல்விக் கொள்கைகளிலும் சிந்தனைகளிலும் புதிய அணுகுமுறைகளைகளைக் கைக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில், கிளிநொச்சி - தர்மபுரம் இல.01 அ.த.க பாடசாலையில் நடைபெற்ற 65ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அவரது உரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது.

மாணவர்களின் ஆரம்பக் கல்விப் பருவத்திலேயே, அவர்களது ஆளுமை விருத்திக்கான அத்தனை களங்களும் திறக்கப்பட வேண்டும் என்பதற்கு இன்றைய இந்த நிகழ்வு மிகச் சிறந்த உதாரணம். உயர்தர மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு சற்றும் குறைவில்லாத வகையில் இந்த ஆரம்பப்பாடசாலையின் நிகழ்வு மிகநேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் தரம் உயர்ந்து நிற்பதற்கு பாடசாலை அதிபரின் ஆளுமையும், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கூட்டிணைவும் தான் காரணம். இத்தகைய புறச்சூழலில் வளரும் குழந்தைகள்தான் ஆளுமையும் தலைமைத்துவமும் மிகுந்த குழந்தைகளாக உருவாகுவார்கள்.

உலகியல் அறிவோ, கூருணர்வுப் பார்வையோ, எதிர்காலம் பற்றிய தெளிவோ இல்லாது புத்தகப்பூச்சிகளாக வளர்க்கப்படும் பிள்ளைகள், உரிய வழிகாட்டல்கள் இன்மையால், பல்கலைக்கழக கற்கைநெறிகளைத் தெரிவுசெய்வதில்கூட தவறிழைக்கிறார்கள்.

குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களிலும், கிளிநொச்சி மற்றும் திருகோணமலை வளாகங்களிலும் ஒவ்வொரு துறைகளிலும் பல்வேறு கற்கைநெறித் தெரிவுகள் உள்ளபோதும், வட, கிழக்கிலுள்ள தமிழ் மாணவர்கள் தத்தம் துறைசார்ந்த முதன்மைக் கற்கைநெறிகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்கின்றனர். இதனால் ஏனைய கற்கைநெறிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் தவறவிடப்படுகின்றன.

இது தொடர்பிலான தெளிவையும், வழிகாட்டலையும் எமது மாணவர்களுக்கு வழங்க வேண்டிய தேவை உள்ளது. சமநேரத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலபாடத்தில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தியையேனும் பெற்றுக்கொள்ள மாணவர்களும், அவர்களை வழிப்படுத்துகின்ற ஆசிரியர்களும் முயற்சிக்க வேண்டும். இதன்மூலம் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் - என்றார்.

பாடசாலை அதிபர் பரமநாதன் தவநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக உயிரியல் மருத்துவ விஞ்ஞானி திருமதி. துர்க்கா ஜெயரட்ணம் அவர்களும், கெளரவ விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச நிருவாக கிராம அலுவலர் சண்முகம் சந்திரன், ஓய்வுநிலை கிராம அலுவலர் சி. பரமதாஸ் ஆகியோர் உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# "கோணேஸ்வரத்தை பெருங்கோயிலாக புனரமைப்புச் செய்ய இந்திய அரசு உதவும்"

- நடராசா லோகதயாளன்

இலங்கையின் ஐந்து ஈஸ்வரத் திருத்தலங்களில் ஒன்றான திருக்கோனேஸ்வரத்தை பெருங்கோயிலாக புனரமைப்புச் செய்ய இந்திய அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்று, அந்நாட்டின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு மூன்று நாட்கள் பயணமாக வந்துள்ள இந்திய நிதியமைச்சர் கிழக்கு மாகாணத்தின் தலைநகருக்குச் சென்று அங்கு திருக்கோனேஸ்வரம் கோவிலில் வழிபட்டார். பின்னர் அந்நகரில் இந்தியாவின் முன்னணி அரச வங்கியாக "பாரத ஸ்டேட் வங்கியின்" கிளை ஒன்றையும் அவர் திறந்துவைத்தார்.

திருக்கேதீஸ்வரத்தைப் புனமைத்துத் தந்தமை போல பாடல் பெற்ற மற்றைய ஸ்தலமான திருக்கோணேஸ்வரத்தையும் பெருங்கோயிலாகப் புனரமைக்கும் திட்டம் முன்வைக்கப்படுமானால் அதனை இந்தியா சாதகமாகப் பரிசீலித்து அதற்கு உதவும் என்று வியாழக்கிழமை (2) முற்பகல் திருக்கோணேஸ்வரரின் புனித பூமியில் வைத்து இந்த உறுதிமொழியை இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வழங்கினார்.

திருக்கோனேஸ்வரம் சென்ற போது, ஆலய நிர்வாகிகள் அவரை வரவேற்று உரையாடினர். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் அப்போது ஆலய நிர்வாகிகள் சார்பில் ஒரு கோரிக்கையை முன்வைத்தார்.

"போர்த்துகேயர்களால் அழிக்கப்பட்டு, ஒல்லாந்தரால் சூறையாடப்பட்ட திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை இன்று ஓரளவு பேணிப் பாதுகாக்கின்றோம். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயத்தையும் மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கருங்கற்களால், பெருங்கோயிலாக புனரமைத்து தர இந்தியா முழு உதவி வழங்க வேண்டும்" என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது. ஆலய நிர்வாகத் தலைவர் துசியந்தன் உட்பட பலரும் அந்த உரையாடலின் போது உடனிருந்தனர்.


இந்த கோரிக்கையைச் செவிமடுத்த இந்திய நிதி அமைச்சர், மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கோணேஸ்வரத்தையும் புனரமைக்க உதவ முடியும் என்று தெரிவித்தார்.



"அதற்கான முன்னேற்பாடுகள், முறைப்படியான கோரிக்கைகள், அனுமதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிர்மலா சீதாராமன் அம்மையார் உற்சாகத்தோடு தெரிவித்தமை எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது" - என ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


விழித்தெழு பெண்ணே
'விழித்தெழு பெண்ணே' சர்வதேச பெண்கள் அமைப்பு
கனடா
பெருமையுடன் வழங்கும்
எமது தாய் மண்ணின் வீணை இசையின் அடையாளம்
என்.எஸ்.வாகீசனின்
வீணை இன்னிசை மாலை
November 3rd 2023 | 6pm Onwards
அரவிந்தன்
Chinese Cultural Centre of Greater Toronto
5183 Sheppard Avenue East, Toronto, Ontario, Canada.
தொடர்புகளுக்கு : +1 (416) 677 5511
Mega Tunes


VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
TOLL FREE: 1 888 674 7770 | LOCAL: 905 769 1509 | VIBRANTHOSPITALITYGROUP.com
Sugshe Finance Canada Inc.
Sugshi Group of Companies
Ganesan Sugumar
Tel: 416 363 2624
220 Duncan Mills Rd. Unit #83, North York, ON. M3B 3J5
Family Law
Real Estate Law
Immigration Law
Estate, Wills & Power of Attorney
Business Law
Dilani Gunarajah
Barrister & Solicitor
A PREMIER REAL ESTATE PROFESSIONAL
TRUST. INTEGRITY. EXPERIENCE.
JEYA JEYAKANTHAN
REAL ESTATE BROKER
647 309 3091
JRB universal inc
R.R.Rajkumar
647-289-6164
CHRISTEEN SEEVARATNAM
416 258 6759
SERVING THE TAMIL COMMUNITY OF GREATER TORONTO
New RANGANAS JEWEL HOUSE
647-702-2150
647 947 2864
Canada's No 1 Gold House
PACE LAW
Poorany & Desmond Sornabala
647-968-7059
Areas of Service:
WGID Inc
AMMA PAWN BROKER
அம்மா நகை அடைவு பிடிப்போர்
CASH FOR GOLD
416-757-0034
416-994-3861
Majestic City
The Biggest South Asian Indoor Mall in North America.
விழா சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்
Leasing Opportunity
Crish Sivakolunthu (Project Manager)
647 218 3698 or 416 291 3555
Businessman
R.Raamkumar
Director
647 404 5337
Designs 2 Prints Ltd
Design Solutions For Any Media
உதயன்
ஈழநாடு
east FM 102.7
Tamil Mirror
ஐயா 4U
செந்தாமரை
GTA Video Entertainment
Easy 24 News
யுகம் radio
தமிழ் www.tamil.com
Ravi Atchuthan Photography
Tamilsguide
Krishna Live Telecast
தமிழர் தகவல்
Tamil Events Photos

# எம்மை விட்டுப்பிரிந்த தெய்வத்தின்
# 16ம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்ணில்:**
**26-01-1929**



**விண்ணில்:**
**04-11- 2007**

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்டு கனடாவில் வசித்து வந்தவருமான

## அமரர் சத்தியசீலன் செல்லத்துரை

அவர்களின் 16ம் ஆண்டு நினைவாஞ்சலி.
(முன்னாள் முறைமுக அதிகாரசபை ஊழியர், கொழும்பு)

பதினாறு ஆண்டு காலம் எப்படியோ ஓடியது
எதுவும் பேசாமல் எமைவிட்டுப் பிரிந்து
காலனோடு கைகோர்த்துச் சென்றீர்கள்
கலங்கிய இதயங்களை எமக்கு தந்துவிட்டு..

என்றும் நீங்கள் எம்மோடு வாழ்வீர்கள் என்று
எப்போதும் எண்ணியிருந்தோம் இறுதியில் ஏமாந்தோம்
நீங்கள் மறைந்ததனால் நாங்கள் கருகிய புற்களானோம்
கலங்கிய நீரோடையானோம். இயங்காத இயந்திரமானோம்
இலைகள் உதிர்ந்த மரங்கள் ஆனோம்
எமக்காய் வாழ்ந்தவரே உம் வாழ்வைத் தொலைத்தீரோ
எத்தனையோ ஆசைகளை இடையில் துறந்தவர் நீர்
அர்ப்பணிப்பு என்பதற்கு அடையாளம் நீங்கள் தான்
அன்பரே உங்கள் அன்பு எமக்குத் தேவை
அருகில் இருத்தலும் எமக்கும் ஆறுதலைத் தரும்
நம்பியிருந்தோம் அது நிறைவேறவில்லை
நற்றாற்றில் கவிழ்ந்த படகு போல் எங்கள்
இதயங்கள் துன்பத்தில் ஆழ்ந்து ஆழ்ந்து வெடிக்கின்றன.
என்றென்றும் நெகிழ வைக்கும் நின் பணி
தலைமுறைக்கும் தொடரட்டும்.



**உங்கள் பிரிவால் துயருறும்**
**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்கைள், பெறாமக்கள் மற்றும் உற்றார், உறவினர்**

# 31ம் நாள் நினைவாஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு: 03-07-1945
இறப்பு: 05-10-2023



## அமரத்துவமாது
## திருமதி. திலகவதி ஞானசபாபதி
(சங்கானை-கனடா)

**"பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்"**

ஈழமணித்திருநாட்டின் வடபால் திகழும் யாழ்ப்பான நகரின் மேற்குத் திசையில் அமைந்துள்ள கல்வியழகும், கலையழகும், கலந்துறையும் சங்கானை என்னும் ஊரில் ஊர்மெச்ச வாழ்ந்த உத்தமராம் முத்துகுமாரசாமி அன்னலட்சுமி தம்பதியினர் செய்தவத்தால் இத்தரையில் வந்துதித்த இனிய மகள் தன் குலம் வாழ வந்துதித்த அன்பு மகளுக்கு திலகவதி என்னும் திருநாமம் சூட்டி அன்புடன் வளர்களானார்கள். இவருடன் பிறந்த இனிய சகோதர, சகோதரிகளான விரதசாரணி, சத்தியவதி, குணசீலன், அற்புதராணி மற்றும் கருணாகரன் எனும் அறுசுவை உணவைபோல அருங்குணங்கள் கொண்ட அறுவரை பிள்ளைகளாய் பெற்றெடுத்து ஊர் மெச்ச பிள்ளைகளை உத்தமர்களாக வளர்த்து காலமெல்லாம் கணுக்குள் வைத்து காத்தார்கள்.

சின்ன வயதில் செல்லமகள் திலகவதி தன் ஆரம்பக் கல்வியை பண்டத்தரிப்பு மகளிர் கலூரியில் கற்கத்தொடங்கினார். கல்வியில் மட்டுமன்றி தையல் கலையிலும் சிறந்து விளங்கினார். அதுவுமன்றி ஆலயங்கள் தோறும் சென்று பண்ணோடு பஜனைகள் தேவாரங்கள் பாடி பலரையும் மகிழ்வித்தார். வளர் பிறைபோல வளர்ந்து வந்த செல்லமகளுக்கு காலம் அறிந்து பயிர் செய்யும் கமக்காரனை போல பருவமறிந்து பெற்றோர்கள் இல்வாழ்க்கையில் இணையவைக்க பண்பின் உறைவிடமாய், பணிவின் பெருவடிவாய் திகழ்ந்த பாலச்சந்திரன் பாக்கியலட்சுமி தம்பதியினரின் மூன்றாவது மகனாய், மார்கழி மாதம் 11 திகதி 1977ம் ஆண்டு வளம் சிறக்க, குலம் துலங்க வந்துதித்த குனக்குன்றாம் ஞானசபாபதி தம்மை அன்புமகள் திலகவதியின் இல்வாழ்க்கையில் இணையவைத்தார்கள்.

இல்வாழ்க்கை என்னும் இன்பச் சோலையில் இருவரும் பெற்ற இன்பத்தின் பயனாய் மூத்த மகனாய் வந்துதித்த முத்தான மகனுக்கு கோகுலதீபன் எனும் நாமம் சூ ட்டி நலமோடு வளர்த்து, முறையே பிரியாழினியையும், காந்தருபன் எனும் முக்கனிகள் போல பிள்ளைகள் மூவரை பேரெடுத்து கல்வியறிவில் கலங்கரை விளக்குகளாய் மறவர்களை மதிக்கும் மாண்புடைய மக்களாய் வளர்த்தார்கள்.

இக்கால கடத்தில் திருமகள் திலகவதி Montessori ஆசிரியையாக ஞானவைரவர் ஆலயபாடசாலையில் பணிபுரிந்தார். அன்புக்குழந்தைகள் பலருக்கு அறிவுக்கண் திறந்து வைத்தார். காலங்கள் செல்ல நாட்டின் அசாதாரணமான சூழ்நிலையில் தன் கணவர், பிள்ளைகளுடன் 1992ம் ஆண்டு பங்குனி மாதம் கவினுறு தேசமாம் கனடாவுக்கு வந்து அமைதியாக சிறப்போடு வாழ்ந்து வந்தார்.

தங்கள் மூத்த மகன் கோகுலதீபனுக்கு ரோகினி என்பவரையும், பிரியாழினிக்கு சுரேகரன் என்பவரையும், காந்தரூபனுக்கு அன்றியா என்பவரையும் மணவாழ்க்கையில் இணையவைத்து மனமகிழ்வோடும் மனநிறைவோடும் வாழ்ந்து வந்தார்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் - தன்மகனைச் (மக்களை) சான்றோன் எனக்கேட்ட தாய்" என்ற வள்ளுவனின் வாய் மொழிக்கேற்ப தன் மக்களாலும் மருமகளாலும், பெருமை பெற்று வாழ்ந்த மங்கையர் திலகமாய் வாழ்ந்தார் இவர். அன்னாருக்கு அஷ்வின் அஷ்ஷிகா தனுஷன் ஹாசினிநந்தானியல் மற்றும் நரியா ஆகிய பேரன்புகொண்ட பேரப்பிள்ளைகளுடன் பெரிதும் மனமுவந்து பிரியமுடன் பெருமகிழ்வுடன் வாழ்ந்து வந்தார் சிறார்களுடன் மட்டுமன்றி பெரியவர்களுடனும் பிரியமுடன் நடந்து கொண்டார்.

செஞ்சிலுவை சங்கத்தில் இணைந்து சிலகாலம் பணியாற்றினார். இங்குள்ள மூத்தோர் சங்கங்களில் இணைந்து, பல்வேறு சுற்றுலா பயணங்கள் மேற்கொண்டு அத்தனைபோரையும் அன்பால் அரவணைத்து அங்கத்தவர்களோடு அத்தனை மகிழ்வுடன் வாழ்ந்திருந்தார்.

அத்துடன் இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, இந்தோனேசிய, சிங்கப்பூர், மலேசியா எனப் பல்வேறு நாடுகளுக்கும் பறந்து பறந்து சென்று மிகமகிழ்வோடு இறைபணியை தன் கண்ணெனக் கருதி தன் வாழ்வின் பெரும் பகுதியை இறைபணிக்கே அர்ப்பணித்து பல்வேறு பணிகள் ஆற்றி மகிழ்ந்து வந்தார்.

அதுவுமன்றி செஸ் விளையாட்டில் சிறந்து விளங்கியதோடு, தன் பேரப்பிள்ளைகளுக்கும் ஆசிரியராக இருந்து அறிவூட்டி வழி நடத்தி தான் அறிந்த ஏனைய உள்ளக விளையாடுக்களிலும் சிறந்து விளங்கினார்.

பண்பும், பணிவும், பாசமும், நேசமும் கொண்ட அம்மையார் தன் கண்மூடும் காலம் வரை கைப்பிடித்த நாயகனாம் ஞானி அவர்களின் கைப்பற்றி இணையில்லாத இல்லத்தரசியாய் இல்வாழ்வில் சிறந்து விளங்கினார்.

அன்னாரின் மறைவு பற்றிய செய்தியை அறிந்து உடனடியாக எமது இல்லத்திற்கு நேரடியாக வருகை தந்து தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மேலும் பல்வேறு வழிகளின் தொடர்பு கொண்டு அனுதாபங்களைத் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் உணவு மற்றும் பானங்களை ஏற்பாடு செய்தவர்களுக்கும் நன்றி.

அத்துடன் எமது அன்னையின் இறுதிக்கிரியைகளின் போது உடனிருந்தவர்களுக்கும், அவரது பூதவுடல் வைக்கப்பட்டிருந்த மண்டபத்திற்கு வருகை தந்து தங்கள் அஞ்சலிகளைத் தெரிவித்தவர்களுக்கும், தொடர்ந்து தகனக்கிரியை நடைபெற்ற இடத்திற்கும் வந்து எம்மோடு கூடவே இருந்து எம்மைத் தேற்றியவர்களுக்கும், இன்னும் பல்வேறு வழிகளில் எமக்கு ஆறுதல் அளித்த நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

அத்துடன் எதிர்வரும் *05-11-2023* ஞாயிற்றுக்கிழமையன்று மதியம் *11.00* தொடக்கம் பிற்பகல் *2.00* மணிவரை 635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ஸ்காபுறோ ஐயப்பன் ஆலய கீழ் மண்டபத்தில் நடைபெறவுள்ள எமது அன்புக்குரிய திலகவதி ஞானசபாபதி அவர்களி *31*ம் நாள் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**தீபன்: (647) 293-6854**
**பிரியா: (647) 291-9993**
**ரூபன்: (647) 330-6565**


TM
தமிழ் மிரர்
Tamil Mirror
Awards Gala 2023.
NOVEMBER
5
SUNDAY
4.00 PM
18
YEARS
ANNIVERSARY
CELEBRATION
DSN
The Golden Voice
T. Ramalingam
Motivational Speaker
Tamil Nadu
Deshan Styler
South African Music Sensation
Chinese Cultural Centre 5183 Sheppard Ave East Call: 416-697-0126


Home Renovations
Coverall Group Inc.
* Residential
* Commercial
* Building Permits
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160

கனடிய செய்திகள்
Canadian News

# ஸ்காபுறோ நகரங்களை இணைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் Sheppard Subway East Extension தொடர்பாக மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் விடுக்கும் அறிவித்தல்




அன்பான அயலவர்களே! மற்றும் நண்பர்களே!,

உங்களுக்கு நான் ஏற்கெனவே வழங்கிய மூன்றாவது வாக்குறுதி நிறைவேறிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். பேர்ச்மவுண்டில் ஒரு புதிய மருத்துவமனையைக் கட்டுவதற்கும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் Bridletowne சமூக மற்றும் சுகாதார மையத்தைக் கட்டுவதற்கும் அதனிலும் மேலாக, ஷெப்பர்ட் சுரங்கப்பாதை கிழக்கு விரிவாக்கத்திற்கான ஆரம்ப திட்டமிடல் பணிகளைத் தொடங்குவதற்கு போக்குவரத்து அமைச்சர் மற்றும் போக்குவரத்து இணை அமைச்சர் ஆகியோரின் பச்சைக் கொடி எங்களுக்கு இப்போது கிடைத்துள்ளது. இதன் மூலம் மெக்கோவன் தரிப்பு நிலையத்துடன் கூடிய டான் மில்ஸ் நிலையம் மற்றும் கிழக்கே எதிர்கால ஸ்கார்பரோ சுரங்கப்பாதை விரிவாக்கம் ஆகியன இதற்குள் அடங்கும்.

எனது ஜூன் 1, 2023 கேள்விக்கு, இணை அமைச்சர் மாண்புமிகு. ஸ்டான் சோ, சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது பின்வருமாறு தெரிவித்தார்: "ஷெப்பர்ட் சுரங்கப்பாதை நீட்டிப்புக்கான ஆரம்ப வேலைத் திட்டத்தை உருவாக்க அமைச்சர் மல்ரோனி அவர்களும் நானும் சமீபத்தில் அதிகாரப்பூர்வ வழிகாட்டுதலை வழங்கினோம். அதை விரிவாகக் கூறுகின்றேன், சபாநாயகர் அவர்களே!." ஷெப்பர்ட் பாதையை கிழக்கு நோக்கி டான் மில்ஸ் நிலையத்தில் அதன் தற்போதைய முனையத்திலிருந்து எதிர்கால ஸ்கார்பரோ சுரங்கப்பாதை நீடிப்பு வரை தொடர்வதை ஆராயுமாறு அதிகாரிகளிடம் நாம் கேட்டுள்ளோம், இது அந்த உறுப்பினரின் சமூகத்திற்கு சேவை செய்யும். (ஜூன் 1, 2023 அன்று மாண்புமிகு அமைச்சர் ரேமண்ட் சோவுக்கும் எனக்கும் இடையேயான கேள்வி கால உரையை இந்த செய்திமடலின் மற்றொரு பகுதியில் நீங்கள் படிக்கலாம்.)



அதன்படி, Metrolinx நிறுவனமானது மூன்று சமூக ஆலோசனைக் கூட்டங்களைத் தொடங்கி, கிழக்கு மற்றும் மேற்காக ஷெப்பர்ட் அவென்யூ வழியாக சுரங்கப்பாதையை நீடிக்க சமூகத்தின் உள்ளீட்டைக் கோருகிறது. பாதை சீரமைப்புகள், தர ரீதியான முன்னுரிமைகள், சேமிப்பக வசதி தேவைகள் மற்றும் சாத்தியமான நீடிப்புக்கான தொழில்நுட்பத்தின் முக்கியத்துவங்கள் ஆகியவை இதில் அடங்கவுள்ளன.

ஷெப்பர்ட் நீடிப்பு திட்டம், மெட்ரோலிங்க் நிறுவனத்தின் திட்ட திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு செயல்முறையின் முதல் கட்டத்தில் உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேற்படி திட்டமான உயர் மட்டத்தில் ஒரு சாத்தியமான திட்டத்தை மதிப்பாய்வு செய்கிறது, அது ஒரு பிரச்சனை மற்றும்/ அல்லது வாய்ப்பை எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதை மதிப்பிடுகிறது. மேலும் சுத்திகரிப்பு மற்றும் வடிவமைப்பிற்கான விருப்பத்திற்குரிய அம்சத்தையும் இது தேர்ந்தெடுக்கிறது. ஆலோசனையின் போது சமூக உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் கருத்துக்கள் ஆகியன திட்ட திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு செயல்முறை சார்ந்த பரிந்துரையின் ஒரு முக்கிய அங்கமாகும். ஷெப்பர்ட் அவென்யூ நடைபாதையில் மக்கள் எவ்வாறு பயணிக்கிறார்கள் மற்றும் எதிர்காலத்தில் புதிய விரைவான போக்குவரத்துத் தேவைகளிலிருந்து அவர்கள் எவ்வாறு பயனடைவார்கள் என்பதை நாங்கள் கேட்க விரும்புகிறோம், இதன் மூலம் சமூகம் மற்றும் எதிர்கால பயணிகளுக்கான வசதிகளை அதிகப்படுத்துவோம்.

இவற்றுக்கான ஆய்வுப் பணிகள் பெரும்பாலும் கிழக்கு நோக்கிய பாதையில் கவனம் செலுத்தும் அதே வேளையில், ஷெப்பர்ட்-யங்க் நிலையத்திலிருந்து அலன் பாதையில் உள்ள ஷெப்பர்ட் மேற்கு தரிப்பு நிலையம் வரை சாத்தியமான மேற்குப் பகுதி நீடிப்பு குறித்து விசாரணை நடத்த நிறுவன அதிகாரிகளை நாங்கள் பணித்துள்ளோம்.







இந்த சாத்தியமான கிழக்கு-மேற்கு விரிவாக்கமானது ஒரு புத்தம் புதிய வடகிழக்கு போக்குவரத்து இணைப்பை உருவாக்கும் -- ஸ்கார்பரோ மற்றும் நோர்த் யோர்க் முழுவதும் பயணிக்கும் பயணிகளுக்கு இந்தத் திட்டம் பயனுள்ளதாகவே அமையும்.

ஷெப்பர்ட் நீட்டிப்பான இந்த பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சி மற்றும் புதிய வேலைகளை உருவாக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

## Agincourt மற்றும் Milliken GO போக்குவரத்து நிலையங்கள்

ஷெப்பர்ட் சுரங்கப்பாதைக்கு கூடுதலாக, அஜின்கோர்ட் GO நிலையத்தில் போக்குவரத்து அமைச்சர் பிரப்மீத் சர்க்காரியா, போக்குவரத்து இணை அமைச்சர் டோட் மெக்கார்த்தி மற்றும் நாடாளுமன்ற செயலாளர் விஜய் தணிகாசலம் ஆகியோருடன் இணைந்து அஜின்கோர்ட்டில் முக்கிய உள்கட்டமைப்பு மேம்பாடுகள் மற்றும் மேம்கென்கோர்ட் மேம்பாடுகளை அன்று அறிவித்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன். GO செயற்திட்டம் முழுவதும் அதிக பயணங்களை அடிக்கடி வழங்குவதற்கான எங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக Stouffville லைனில் உள்ள நிலையங்கள். இரண்டு GO நிலையங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ள மேலதிக பாதை மற்றும் தளங்கள், புதிய பாதசாரிகளுக்கான சுரங்கங்கள் மற்றும் நவீன வசதிகளுடன் புத்தம் புதிய நிலைய கட்டிடங்கள் ஆகியவை இந்தத்திட்டங்களில் அடங்கும்.



Milliken மற்றும் Agincourt GO நிலையங்கள் தற்போதைய மற்றும் எதிர்கால பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய ஸ்ரோவில் நகரத்திற்கான பாதையில் திறனை உருவாக்கி, ரொறன்ரோ நகரத்தில் உள்ள Unionville GO ஸ்டேஷன் மற்றும் யூனியன் ஸ்டேஷன் இடையே ஒவ்வொரு 15 நிமிடத்திற்கும் இருவழியாக, நாள் முழுவதும் GO ரயில் சேவைகளை அதிகரிக்கும் வாய்ப்புக்கள் உண்டு.

ஒன்ராறியோவின் போக்குவரத்துத் தேவைகள் மற்றும் இன்றைய தேவைகளுக்காக கடினமான உள்கட்டமைப்பைக் கட்டியெழுப்புதல் மற்றும் நாளைய அடுத்த தலைமுறைத் திட்டங்களைத் திட்டமிடுதல் போன்ற அபரிமிதமான வளர்ச்சியுடன் வேகத்தைத் தக்கவைத்துக்கொள்வதன் அவசியத்தை எங்கள் அரசாங்கம் புரிந்துகொள்கிறது... மேலும் இதில் ஷெப்பர்ட் லைன் நீடிப்பும் அடங்கும்.

அன்பான அயலவர்களே!,

இறுதியாக, பல ஆண்டுகளாக தோல்வியடைந்த வாக்குறுதிகள், முடிவில்லா விவாதங்கள் மற்றும் தேவையற்ற வாக்குவாதங்களுக்குப் பிறகு, ஷெப்பர்ட் சுரங்கப்பாதையை நனவாகுவதற்கு ஒரு படி நெருங்கிவருகின்றது என்பது நன்கு வெளிச்சமாக உள்ளது. ஷெப்பர்ட் கிழக்கு விரிவாக்கம் எமது கைகளுக்கு வருவதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். இந்த கோடை காலப்பகுதியில் Bridletowne சமூகம் மற்றும் சுகாதார மையத்தின் அடித்தளம் மற்றும் தற்போதைய தளத்திற்கு அடுத்ததாக புதிய Birchmount மருத்துவமனையைக் கட்டுவதற்கு ஒரு பில்லியன் டாலர்களுக்கு மேல் ஒதுக்கப்பட்ட பிறகு, இப்போது Sheppard புகையிர சுரங்கப் பாதையானது கட்டப்பட்டு வருகின்றது.

ஸ்கார்பரோவில் உள்ள பயணிகளும், ரொறன்ரோ நகரத்தில் வசிக்கும் மக்களைப் போலவே நம்பகமான பொதுப் போக்குவரத்திற்கான அணுகலுக்கு தகுதியானவர்கள். எங்கள் பயணிகளுக்கு பாதுகாப்பான மற்றும் வேகமான மற்றும் வசதியான பயணத் தேவைகளை வழங்குவதே எனது இறுதியான இலக்கு என்பதையும் அறியத்தருகின்றேன்.



அதனால்தான், Scarborough Agincourt மற்றும் Scarborough ஆகிய இடங்களில் முக்கியமான முதலீடுகளை நான் பரிந்துரைக்கிறேன், தேவையான போக்குவரத்து மற்றும் பிற உள்கட்டமைப்புகள் நமது வளர்ந்து வரும் மக்கள்தொகையின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளன.

உங்களுக்கு சேவை செய்வதும் உங்கள் சார்பாக வாதிடுவதும் எனக்கு பெருமையும் பாக்கியமும் ஆகும். எல்லாவற்றிற்கும் மேலாக, நான் கடந்த 33 ஆண்டுகளாக இந்த பெரிய பிராந்தியத்தில் வசித்து வருகிறேன், உங்களைப் பாதிக்கும் எதுவாக இருந்தாலும் அது என் குடும்பத்தையும் என்னையும் பாதிக்கும் என்பதையும் நான் உங்களுக்கு அறியத்தருகின்றேன்.

சமூக ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறும் திகதிகள் மற்றும் இடங்கள்:

Chinese Cultural Centre of Greater Toronto:
5183 Sheppard Ave. East, Scarborough, ON M1B 5Z5
Tuesday. November 7, 6:00 p.m. – 8:00 p.m.

Parkway Forest Community Centre:
55 Forest Manor Rd, North York, ON M2J 1G3
Wednesday. November 15, 6:00 p.m.– 8:00 p.m.

Toronto Public Library, North York Central Branch:
5120 Yonge St. North York, ON M2N 5N9
Thursday. November 16, 6:00 p.m. – 8:00p.m.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாகாண தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்திற்கு Ratnam Foundation – UK அமைப்பினால் Portable PA Amplifier அன்பளிப்பு



வவுனியா வடக்கு மரக்காரம்பளையில் அமைந்துள்ள வடமாகாண தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்திற்கு (Provincial Information Technology and Distance Learning Hub) Ratnam Foundation – UK அமைப்பின் ஸ்தாபகர் வைத்திய கலாநிதி இ. நித்தியானந்தன் அவர்களால் இவ் ஒலி அமைப்பு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதனை இவ் அமைப்பின் சார்பில் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. சு. கிருஸ்ணகுமார் அவர்கள் இந் நிலையத்தின் முகாமையாளர் கலாநிதி மா. தயாகரன் அவர்களிடம் கையளித்தார்.

இதன் போது இந் நிலையத்தில் நடைபெறும் செயலமர்வுகள், பயிற்சிபட்டறைகள், கருத்தரங்குகள், வதிவிட பயிற்சி நெறிகள் என்பவற்றிற்கு இவ் உபகரணப்பயன்பாடு அதிஉட்ச பயன்பாட்டை கொண்டிருக்கும் எனவும் இதற்கான தனது நீண்ட நாள் கோரிக்கையினை பூர்த்தி செய்த வைத்திய கலாநிதி இ. நித்தியானந்தன் அவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றிகளை கலாநிதி மா. தயாகரன் அவர்கள் தெரிவித்து கொண்டார்.




இந் நிலையம் வதிவிடப் பயிற்சிநெறிக்கான பயிலுனர் தங்குமிட வசதிகள், தகவல் தொழினுட்ப கணனி கூடங்கள், போசன கூட வசதிகள் உள்ளடங்கலாக இயற்கை வனப்பு மிக்க அமைதியான சூழல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பிட்டிய தேரரை மட்டு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு அழைத்து கேளுங்கள்

## - குழு தவிசாளர் ராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எம்பியிடம் மனோ கணேசன்

மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்தின தேரர், "தென்னிலங்கை தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன்" என்று நடுத்தெருவில் கூச்சல் எழுப்பியமைக்கு எதிராக சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறேன். சுமனரத்தின தேரர், அவர் தனது தாயின் கல்லறை உடைக்கப்பட்டதாக, பகிரங்கமாக இனவாத, வன்முறை கருத்துகளை கூறி, மட்டு மாநகரசபை ஆணையாளர் மீது குற்றம் சாட்டி உள்ளார்.

ஆகவே அடுத்து நடைபெற உள்ள உங்களது மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு, அம்பிட்டிய சுமனரத்தின தேரருக்கு அதிகாரபூர்வமாக, அழைப்பு விடுத்து, அவரது தரப்பையும் கேட்டு, அதில் ஏதும் உண்மை உள்ளதா, இல்லையா என்ற விபரங்களை முழு நாட்டுக்கும் தெரியப்படுத்துங்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தவிசாளர், ராஜாங்க அமைச்சர் பிள்ளையான் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் நேரடியாக தாம் இன்று உரையாடியதாக கூறியுள்ள மனோ கணேசன் எம்பி இதுபற்றி மேலும் கூறியதாவது,



"ஐசிசிபிஆர் என்ற சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தின் 3 (1) உறுப்புரையில், எந்தவொரு நபராலும் யுத்தத்தைத் தூண்டவோ, வேறுபடுத்தும் விதத்தில் எதிர்வாதம் புரியவோ, அல்லது வன்முறைகளில் ஈடுபடுவதோ, ஒன்று திரளுவதோ, இன, மத குரோதங்களை முன்னெடுப்பதோ கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் அடிப்படையில் பலர் கைது செய்யப்பட்டு சிறைவாசங்களுக்கும், வழக்குகளுக்கும் முகம கொடுக்கின்றனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை
දමිළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රී ලංකාව
Tamil Progressive Alliance - SriLanka

ஆனால், பல்லாண்டுகளாக மேலாக பொது வெளியில் இனவாத கருத்துகளை கூறியும், வன்முறைளில் ஈடுபட்டும் வரும் அம்பிட்டிய சுமனரத்தின தேரர் மீது இச்சட்டம் இன்னமும் பாயவில்லை. இச்சட்டத்திலிருந்து இவருக்கு இனிமேல் விலக்கு வழங்க முடியாது. இனி இது முடிவுக்கு வர வேண்டும். இவரது பாரதூரமான இனவாத கருத்துகளுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் மூலம் நடவடிக்கை எடுப்பார் என நான் நம்புகிறேன்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் என்னிடம் உரையாடி உள்ளார். அதேபோல், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி. சிறிகாந்தாவுடன் நான் உரையாடினேன். தனது தாயின் கல்லறை உடைக்கப்பட்டதாக, தேரர் பகிரங்கமாக கூறியுள்ளமை தொடர்பாக உண்மையை கண்டறியுமாறு அவருக்கு அறிவுறுத்தியுள்ளேன். இதுவே முறைப்படி செய்யப்பட வேண்டிய காரியம் என நினைக்கிறேன்.

தனது இனவாத கருத்துகள் தொடர்பில் தேரர் மீது ஐசிசிபிஆர் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அது வேறு வி'யம். அது சட்டம், ஒழுங்கு அமைச்சரின் பொறுப்பாகும்.

தேரரது தாயின் கல்லறை உடைக்கப்பட்டிருந்தாலும்கூட, அது தொடர்பில் முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, தமிழர்களை குறிப்பாக தென்னிலங்கை தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன், என தேரர் கூற முடியாது. இதை இனிமேல் எம்மால் அனுமதிக்க முடியாது. தான் ஏதும் பிரச்சினையை எதிர்கொண்டால், அதற்கு தீர்வை தேட, முறைப்படியான மாற்று வழி இருப்பது தேரருக்கு விளங்க வேண்டும்".

இவ்வாறு கூறியுள்ளார் மனோ கணேசன் எம்பி.

# மலையகம் 200 கண்காட்சியினை கல்முனையில் 2023 நவம்பர் 02ம், 03ம் திகதிகளில் நடத்த தீர்மானம்



(31-10-2023)

இலங்கையில் வாழும் ஏனைய மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள், உதவிகள், அபிவிருத்திகளை போன்று மலையக தமிழ் மக்களுக்கும் சமமாக கிடைக்க வேண்டும். காரணம் இலங்கையின் தேசிய வருமானத்திற்கு மிக முக்கிய பங்கினை வழங்குகின்றார்கள். இதனை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். இதற்கான ஒரு ஆதரவு நிகழ்வாக மலையகம் 200 கண்காட்சியினை கிழக்கு மாகாணத்திற்குறிய நிகழ்வாக கல்முனையில் 2023 நவம்பர 02ம், 03ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இக் கண்காட்சியினை சமூக அபிவிருத்தி நிறுவகம் (ஐளுனு) மற்றும் அம்பாறை மாவட்ட சிவில் சமூக அமைப்புகள் ஒன்றினைந்த உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒன்றியம் (TRF) ஆகியன இணைந்து நடத்துகின்றது என அதன் அங்கத்துவ பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மலையகம் 200 கண்காட்சி தொடர்பில் அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் திங்கட்கிழமை (30) மாலை நடாத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்த கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

மேலும் தங்களது கருத்தில் தெரிவித்ததாவது, இலங்கையில் மலையக மக்களின் வாழ்வியல் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டியுள்ளது.

மலையகத் தமிழரின் 200 வருடகால வாழ்வியல் பார்க்கும்போது அவர்கள் இலங்கையில் வாழும் ஏனைய மக்களை விட மிகவும் வாழ்வியல் வரலாற்றினை பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் இலங்கையின் சமூக, பொருளாதார். கலை, கலாச்சார, அரசியல் விடபங்களில் மிக முக்கியமான ஒரு பிரிவினராக இருந்தாலும் இவ் உரிமைகளை அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. இதனையே மலையகம் 200 தெளிவுபடுத்துகின்றது.

இலங்கையில் வாழும் ஏனைய மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள், உதவிகள், அபிவிருத்திகளை போன்று மலையக தமிழ் மக்களுக்கும் சமமாக கிடைக்க வேண்டும். காரணம் இலங்கையின் தேசிய வருமானத்திற்கு மிக முக்கிய பங்கினை வழங்குகின்றார்கள். இதனை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். இதற்கான ஒரு ஆதரவு நிகழ்வாக மலையகம் 200 கண்காட்சியினை கிழக்கு மாகாணத்திற்குறிய நிகழ்வாக கல்முனையில் 2023 நவம்பர 02ம், 03ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இக் கண்காட்சியினை சமூக அபிவிருத்தி நிறுவகம் (ஐளுனு) மற்றும் அம்பாறை மாவட்ட சிவில் சமூக அமைப்புகள் ஒன்றினைந்த உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒன்றியம் (TRF) ஆகியன இணைந்து நடத்துகின்றது.

இக் கணகாட்சி நிகழ்வில் மலையகத் தமிழரின் வாழ்வியல் வரணற்று ஆவணங்கள், பொருளாதார. கலை, கலாச்சார, அரசியல் மற்றும் சமூகவியல் தொடர்பான விடயங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இந் நிகழ்வானது மலையக தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றினை பிரதிபலி நிகழ்வாக அமையவுள்ளன. இந் நிகழ்வுக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்தின மக்களும் தவறாது கலந்து கொண்டு அவர்களின் வாழ்வியல் வரலாற்று விடயங்களை அறிந்து தங்களது ஆதரவினையும், ஒத்துழைப்பு களையும் வழங்குமாறு வேண்டுகிறோம்.

இது தவிர மலையக மக்களின் பொருளாதார வாழ்வியல் விடயங்கள் கூட தற்போது ஆராயப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

மலையகத்தில் தோட்டங்களில் பெண்களே அதிகமாக தொழில் செய்கின்றார்கள். இவர்கள் பால் நிலை சார்ந்த பல பிரச்சினைகளையும் சொல்ல முடியாத துயரங்களையும் அனுபவிக்கின்றனர். இவர்களின் பிரச்சினைகள் ஏனையவர்களைப் போல் அதிகமாகப் பேசப்படுவதில்லை இவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இப் பெண்களின் உழைப்பு தொழில் சங்கங்களினாலும், கம்பனிகளினாலும் சுரண்டப்படுவதுடன் பெண் என்பதால் உழைப்பிற்கான ஊதியம் பாராபட்சமாகவே வழங்கப்படுகின்றது. இந்த ஊதியம் பாராபட்சம் இன்றி சமமாக வழங்கப் பட வேண்டும்

இவர்களின் வறுமை நிலை காரணமாக வாழ்கை முறையானது பின் தஙங்கிய நிலைக்கு தள்ளப்படுள்ளது. Eg: பாடசாலை செல்லும் பெண் பிள்ளைகளை இடை நிறுத்தி விட்டு நகர்புரங்களுக்கு வீட்டு வேலைக்காக அனுப்புகின்றார்கள் அங்கு பல்வேறு வகையான துஸ்பிரயோகங்களுக்கும். வன்முறைகளுக்கும் ஆளாக்கப்படுவதுடன் சடலங்களாகவும் மீட்கப்படும் சம்பவங்களும் கடந்த காலங்களில் அதிகம் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு பாதிக்கப்படும் பிள்ளைகளின் பாதிப்புகள் தொடர்பாக முறையான விசாரஜைகள். நடாத்தப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். சிறுவர் தொழில் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும், தோட்டப் பகுதிகளிலுள் லயம் வாழ்கை முறைனது பல்வேறுபட்ட பிரச்சினைகளையும், வன்முறைகளையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்திவருகின்றது.

இது மாற்றியமைக்கப்பட வேண்டும். இம் மக்களின் அடக்குமுறை வாழ்க்கை மாற்றப்பட்டு அரசாங்கம் தனி தனியான காணிகளையும், வீடுகளையும் வழங்க வேண்டும். இதுவே அம்மக்களின் அடிப்டை தேவையாகவும் உள்ளது. அதே போன்று அவர்களுக்கான சுகாதார, மருத்துவ சேவைகளும், கல்வி அபிவிருத்திகளும் முறையாக கிடைப்பதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்தி கொடுப்பது மிக மிக அவசியமாகும். போதிய சுகாதார வைத்திய வசதிகள் இல்லாத காரணத்தால் சுப்பினி தாய்மார்கள், நோயாழிகள் உயிர் இழப்புக்களையும் எதிர்கொள்கின்றனர். எனவே இம் மக்களின் சமூக பொருளாதார, கலாச்சார உரிமைகள், அடிப்படை வசதிகள் மற்றும் மனித உரிமைகலும் உறுதிப்படுத்தப்பட்ட வேண்டும். அதற்காக நாம் சிவில் அமைப்புகள் என்றதன் அடிப்படையில் கூட்டக இணைந்து கிழக்கு மாகாணத்திலிருந்து எம்மால் முடியுமான அழுத்தங்களையும், ஆதரவினையும் வழங்க திட்டமிட்டுள்ளோம் என குறிப்பிட்டனர்.

# யூதர் — அரேபியர் இடையிலான பகையைத் தொடக்கி வைத்தவர்கள் ஆபிரகாமின் முதல் மனைவி சாராவும் அவரது இரண்டாவது மனைவி ஆகாரும் ஆவர்! — கனடா நக்கீரன்

இஸ்ரேல் இராணுவத்துக்கும் கமாஸ் ஆயுதக் குழுவுக்கும் இடையிலான போர் 24 நாட்கள் கடந்தும் நீடிக்கிறது. கடந்த 2021 மே 10 அன்று தொடங்கிய இஸ்ரேல் - பாலத்தீனப் போர் 11 நாட்கள் மட்டும் நீடித்தது. இஸ்ரேல் விமானப்படை, காசா பகுதியில் நடத்திவரும் இடைவிடாத குண்டு மழை பொழிந்து வருகிறது. கடைசியாக கிடைத்த செய்தியில் காசாவில் உள்ள ஒரு ஏதிலி முகாம் மீது இஸ்ரேல் விமானப்படைம் குண்டு வீசியுள்ளது. இந்தக் குண்டு வீச்சுக்களால் காசாவில் பலத்த உயிர், உடமை இழப்புக்கள் ஏற்பட்டுவருகின்றன. இலட்சக்கணக்கானோர் உணவும் நீரும் கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.




காசா பகுதி என்பது இஸ்ரேல் மற்றும் மத்திய தரைக்கடலுக்கு இடையில் இருக்கும் ஒரு குறுகிய நிலப்பகுதியாகும். காசா மூன்று புறம் நிலத்தாலும் ஒரு ஒரு புறம் கடலாலும் சூழப்பட்டது. காசாவின் வடக்கிலும் கிழக்கிலும் இஸ்ரேல் உள்ளது. காசாவின் சிறிய தெற்கு எல்லையில் எகிப்து உள்ளது. மேற்கில் மத்திய தரைக்கடல் உள்ளது. அதன் பரப்பளவு 41 கிமீ நீளமும், 10 கிமீ அகலமும் மட்டுமே. அதாவது 410 ச.கிமீ ஆகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் 1,250 ச.கிமீ பரப்பளவோடு ஒப்பிடுகையில் மூன்றில் ஒரு (33.6 விழுக்காடு). மக்கள் தொகையை எடுத்துக் கொண்டால் காசாவில் 22 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். உலகின் மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள பகுதிகளில் காஸாவும் ஒன்று. அதாவது ஒரு ச.கிமீ க்கு 524 பேர் வாழ்கிறார்கள். காசாவின் வடக்கு பகுதியில் உள்ள காசா நகரமே மிக அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதியாகும். காஸா நகரத்தில் ஒரு ச.கிமீ இல் 9683 பேர் வசிக்கின்றனர். குண்டுகள் எங்கு விழுந்தாலும் மக்கள் சாகவே செய்வார்கள்.

இப்படி மோதிக்கொள்ளும் அரேபியர்களும் யூதர்களும் யார்? ஏன் மூர்க்கத்தனமாக மோதிக் கொள்கிறார்கள்? வரலாற்றின் அடிப்படையில் அரேபியர்களும் யூதர்களும் யார்? இவர்கள் ஒரு தந்தைக்கும் அவரது இரண்டு மனைவிகளுக்கும் பிறந்த குழந்தைகளின் சந்ததியாவர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேலை ஆண்ட ஆப்பிரகாம் மன்னரது முதல் மனைவி இராணி சாராவுக்கும், அரண்மனையில் அடிமையாக இருந்த ஆகார் என்ற எகிப்து நாட்டு இரண்டாவது மனைவிக்கும் இடையில் தோன்றிய சக்களத்தி சண்டையே இன்றுவரை தொடர்கிறது. விதுலியத்தின் தொடக்க நூலான ஆதியாகமம் சொல்லும் அந்தப் பழைய வரலாற்றுப் பக்கங்களை சிறிது புரட்டிப் பார்ப்போம்.

ஆபிரகாம் என பெயரிடப்பட்ட ஆபிராம் இஸ்ரயேல் மக்களின் முதுபெரும் தந்தையர் மூவரில் முதலாமவர் ஆவார். ஆபிரகாம் என்ற பெயருக்கு எண்ணற்ற மக்களின் தந்தை என்பது பொருள். இவருடைய வாழ்க்கை பற்றி ஆபிரகாமிய சமயங்களின் புனித நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. யூதம், கிறித்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களில் விசுவாசத்திற்கு ஓர் உதாரணமாக இவர் திகழ்கிறார். இவர் கிறிஸ்தவம், இஸ்லாம், யூத மதங்களின் முக்கிய தீர்க்கதரிசியாகவும் கொள்ளப்படுகிறார். இவரது வாழ்க்கை பற்றிய குறிப்புகள் விவிலியத்தின் தொடக்க நூல் மற்றும் திருக்குர்ஆன் என்பவற்றில் காணப்படுகின்றன.

நோவாவின் பத்தாம் வழிமரபினரான தேராகு எழுபது வயதாக இருந்தபொழுது அவருக்கு ஆபிரகாம், நாகோர், ஆரான் ஆகியோர் பிறந்தனர். ஆரான் தான் பிறந்த நாட்டில் ஊர் என்ற கல்தேயர் நகரில் தன் தந்தை தேராகிற்கு முன்பே இறந்தார். ஆபிரகாமும், நா-கோரும் பெண் கொண்டனர். ஆபிரகாமின் மனைவி பெயர் சாராய். நாகோரின் மனைவி பெயர் மில்கா. சாராய் குழந்தைப்பேறு இல்லாமல் மலடியாய் இருந்தார். தேராகு தம் மகன் ஆபிராமையும், தம் மகன் ஆரானின் புதல்வன் லோத்தையும், தம் மருமகளும் தம் மகன் ஆபிரகாமின் மனைவியுமான சாராயையும் அழைத்துக் கொண்டு ஊர் என்ற கல்தேயர் நகரை விட்டுக் கானான் நாட்டை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். காரான் என்ற இடத்திற்கு வந்ததும் அங்கேயே அவர்கள் தங்கி வாழலாயினர். தேராகு இருநூற்று ஐந்து வயதாக இருந்தபொழுது காரானில் இறந்தார்.

ஆண்டவர் ஆபிராமை நோக்கி அவரின் நாட்டிலிருந்தும் இனத்தவரிடமிருந்தும் புறப்பட்டு தான் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்லக் கட்டளையிட்டார். அவ்வாறுசெய்தால் ஆண்டவர் அவரைக் பெரிய இனமாக்கவும் அவருக்கு ஆசி வழங்கவும் வாக்களித்தார். ஆண்டவர் ஆபிரகாமுக்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார். அவருடன் லோத்தும் சென்றார். ஆபிராம் ஆரானைவிட்டுச் சென்றபொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து. ஆபிரகாம் தம் மனைவி சாராவையும் தம் சகோதரனின் மகன் லோத்தையும் உடனழைத்துச் சென்றார். அவர்கள் ஆரானில் சேர்த்திருந்த செல்வத்துடனும், வைத்திருந்த ஆட்களுடனும் கானான் நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று அந்நாட்டைச் சென்றடைந்தனர். ஆபிரகாம் கானான் நாட்டில் நுழைந்து செக்கேமில் இருந்த கருவாலி மரத்தை அடைந்தார். அங்கே "கானானியா வாழ்ந்து வந்தனா". கடவுள் ஆபிராமுக்கு முன் தோன்றி "உன் வழிமரபினா"க்கு இந்நாட்டைக் கொடுப்பேன்" என்றார். எனவே அங்கே ஒரு பலிபீடம் எழுப்பி ஆண்டவரது திருப்பெயரை ஆப்பிரகாம் தொழுதார்.

யூதம், கிறித்தவம், இஸ்லாம் ஆகிய முக்கிய சமயங்களின் புனித நூல்களில் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தினால், இவை ஆபிரகாமிய சமயங்கள் என அழைக்கப்படுகின்றன. பழைய ஏற்பாட்டிலும் திருக்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளபடி, ஆபிரகாம் கடவுளால் தெரிவு செய்யப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டவர் ஆவர். இவருக்குக் கடவுள் மகத்தானவற்றை கொடுப்பதாக வாக்குறுதியளித்தார். கிறிஸ்தவர்கள் ஆபிரகாமை "விசுவாசத்தின் தந்தை" என அழைகிறார்கள். ஆபிராமுக்கு கேத்துராள் என்ற மனைவி மூலம் தோன்றிய வம்சத்தில் வந்த ஒருவரே பஹாய் சமயத்தை உருவாக்கியவர் என்பது அதன் நம்பிக்கை ஆகும்.


விவிலியத்தின்படி ஆபிரகாமின் காலம் கி.மு. 2000 களில் எனக் கணிக்கப்படுகிறது. கடவுள் ஆபிரகாமுக்கு 99 வயதாக இருந்தபோது அவருடன் உடன்படிக்கை செய்தார். ஆபிரகாமிடம் அவர் யூதத் தேசத்தின் தந்தையாக இருப்பார் என்றும், பரலோகத்தில் நட்சத்திரங்களைவிட பலவான்கள் பரம்பரையாக இருப்பதாகவும் அவர் கூறினார். ஆண்டவரின் வாக்கு ஆபிராமுக்கு ஒரு காட்சி வழியாக வந்து வானத்து விண்மீன்களைப் போல அவரின் வழிமரபினர் இருப்பர் என்றும் அவர் குடியிருக்கும் நாட்டை உரிமைச்
சொத்தாக அளிக்கவும் வாக்களித்து ஆபிராமுடன் கடவுள் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். எகிப்திலுள்ள ஆற்றிலிருந்து யூப்பிரத்தீசு **(Euphrates)** பேராறுவரை உள்ள கேனியர், கெனிசியர், கத்மோனியர், இத்தியர், பெரிசியர்,
இரபாவியர், எமோரியர், கானானியர், கிர்காசியர், எபூசியர் ஆகியோர் வாழும் இந்நாட்டை ஆபிராமின் வழிமரபினர்க்கு வழங்குவதாகவும் கடவுள் வாக்களித்தார்.

ஆபிராமின் மனைவி சாராய்க்கு மகப்பேறு இல்லாததால் தனது எகிப்திய அடிமைப்பெண் ஆகாரைத் ஆபிரகாமுக்கு இரண்டாவது மனைவியாகத் திருமணம் செய்து வைத்தார். அவர் ஆகாருடன் உறவு கொண்டபின் அவள் கருவுற்றாள். ஆகார் தனது எண்பத்தாறாவது வயதில் ஆபிராகாமுக்கு மகன் ஒருவனைப் பெற்றெடுத்தாள். ஆகார் பெற்ற தம் மகனுக்கு ஆபிராம் இஸ்மயேல் என்று பெயரிட்டார்.

இது இவ்வாறிருக்க பயணிகள் போல மாறுவேடத்தில் வந்த மூன்று பரலோக மனிதர்கள் ஆபிரகாமுக்கு முன் தோன்றினார்கள். ஆபிரகாமுக்கு அவருடைய மனைவி ஒரு மகனைப் பெறுவார் என்று வாக்குறுதியளித்தனர். தாய்மை பற்றிய தனது கனவு நிறைவேறும் என அவள் நம்பியிருந்தாள். சாரா ஒரு குழந்தை பெற 90 ஆண்டுகள் காத்திருந்தார். சாரா மிகவும் வயதானவராக இருந்தபோதிலும், அவள் கர்ப்பவதியாகி அவரது முதிர்ந்த வயதில் ஒரு மகனைப் பெற்றாள். அவர்கள் அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டனர்.

ஆகார் தான் கருவுற்றிருப்பதைக் கண்டதும் சாராவை ஏளனத்துடன் நோக்கினாள். இப்போது சாரா ஒரு குழந்தையைப் பெற்ற பின்னர் ஆகாரை ஏளனத்தோடு பார்த்தாள். அவளைக் கொடுமைப்படுத்தினார். சாரா, ஆபிரகாமிடத்தில் ஆகாரையும் இஸ்மயேலையும் அரண்மனையில் இருந்து வெளியேற்றுமாறு கேட்டுக்கொண்டாள் (ஆதியாகமம் 21:11-21). காரணம் இஸ்மயேல் அடிமையின் மகன். ஈசாக்கு ஆபிரகாமுடைய நேரடி வாரிசு. இஸ்மயேல் தனது தம்பியான ஈசாக்வோடு விளையாடுவதை சாரா தடுத்தாள். இதுவும் இஸ்மயேலுடைய இதயத்திலே ஈசாக்குக்கு விரோதமான கசப்பை உண்டாக்கிற்று.

ஆகார் தனது மகன் இஸ்மயில் சகிதம் சாராயிடமிருந்து தப்பி ஓடினாள். ஆண்டவரின் தூதர் அவளைப் பாலைநிலத்தில் இருந்த ஒரு நீரூற்றுக்கு அருகில் கண்டார். அவர் ஆகாருக்கு ஆறுதல் கூறி அரண்மனைக்குத் திரும்பிப்போகப் பணித்தார். ஆகார் கற்பமுற்று இருந்த காலத்தில் கடவுளுடைய தூதன் அவருக்கு பின்வரும் உறுதிமொ-ழியைக் கொடுத்திருந்தார்:



"இக்குழந்தை அரபு தேசங்களுக்குத் தந்தையாவார். மேலும் கர்த்தருடைய தூதன், "ஆகார் நீ இப்போது கர்ப்பமாக இருக்கிறாய். உனக்கு ஒரு மகன் பிறப்பான். அவனுக்கு இஸ்மவேல் என்று பெயரிடு. ஏனென்றால் நீ மோசமாக நடத்தப்பட்டதை கர்த்தர் அறிந்திருக்கிறார். உன் மகன் உனக்கு உதவுவான்."

இந்த தீர்க்கதரிசனம் இன்று நிறைவேறியுள்ளது. இன்று உலகில் 22 நாடுகள் அராபியர்களுக்கு சொந்தமான நாடுகளாகக் காணப்படுகின்றன. அங்கே 240 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். தொடக்கத்திலிருந்தே, அரபு நாடுகள் தங்கள் எதிரிகளை அடக்க ஆக்கிரமிப்பையும் வன்முறையையும் நம்பிவருகின்றன. தேவன் ஆகார் மீது இரக்கம் கொண்டு, இஸ்மலேயையும் ஒரு பெரிய தேசத்துக்கு மன்னன் ஆக்குவேன் என்று பிரகடனம் செய்தார். அது நிறைவேறியிருக்கிறது. அதே நேரம் தேவனுடைய தீர்க்கதரிசனம் தெளிவாக இருந்தது: அவர் ஈசாக்குடன் ஆன தனது உடன்படிக்கையை நிறுவுவார் (ஆதியாகமம் 17:21).

புனித பூமியில் வாழ்ந்த அரேபியர்களும் யூதர்களும் முதலாம் உலகப் போரின் இறுதி வரை ஓட்டோமான் பேரரசால் ஆளப்பட்டனர். இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்ற நாடுகளில் ஒன்றான இங்கிலாந்து அந்தப் பிரதேசத்தைப் பொறுப்பேற்றது. இக்காலகட்டத்தில், அய்ரோப்பாவிலிருந்து அப்போதைய கட்டாய **(mandatory)** பாலஸ்தீனம் என்று அழைக்கப்பட்ட பகுதிக்கு யூத குடியேற்றம் வெகுவாகவும் வேகமாகவும் அதிகரித்தது. குறிப்பாக 1930 களில் யூதர்கள் மீதான நாசிகளின் இனப் படுகொலை காரணமாக யூதர்கள் ஜெர்மன் நாட்டை விட்டு வெளியேறினார்கள். யூத குடியேற்றத்திற்கான எதிர்ப்பு மற்றும் அரேபியர்களிடையே வளர்ந்து வந்த தேசியவாதம் ஆகியவை 1930 களின் பிற்பகுதியில் ஒரு கிளர்ச்சிக்கு வழிவகுத்தன. அரபு - யூத வன்முறையைத் தடுக்கும் முயற்சியில், 1937 ஆம் ஆண்டில் பிரிட்டி' ஆணையம் பாலஸ்தீனத்தை ஒரு அரபு, ஒரு யூதர் என இரண்டு நாடுகளாகப் பிரிக்கப் பரிந்துரைத்தது. அய்க்கிய நாடுகள் சபை 1947 ஆம் ஆண்டில் வேறுபட்ட பிரிவினைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. அரேபியர்கள் இரண்டு திட்டங்களையும் நிராகரித்தனர். இது 1948 மே 14 இல் வெளியிட்ட இஸ்ரேலின் சுதந்திரப் பிரகடனம் முதல் அரபு - இஸ்ரேலிய போருக்கு வழிவகுத்தது. இஸ்ரேல் மீது ஒரே நேரத்தில் எகிப்து, சிரியா, இராக், லெபனன், ஜோடான் மேற்கொண்ட படையெடுப்பு முறியடிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் அய்ந்து இலட்சம் அரேபியர்கள் ஏதிலிகளாகப் பட்டனர். அதன் பின்னர் இஸ்ரேலுக்கும் அராபுநாடுகளுக்கும் இடையில் பின்வரும் போர்கள் இடம்பெற்றன.

1956 சூயஸ் நெருக்கடி: இஸ்ரேல், பிரான்ஸ் மற்றும் அய்க்கிய இராச்சியம் இடையே ஒரு பக்கமும், எகிப்து மறுபுறமும் இடையே ஒரு இராணுவ மோதல்.
1967 ஆறு நாள் போர்: இஸ்ரேல் மற்றும் எகிப்து, ஜோர்டான் மற்றும் சிரியா இடையே நடந்த போர் .
1973 யோம் கிப்பூர் போர்: இஸ்ரேலுக்கும் எகிப்து மற்றும் சிரியா தலைமையிலான அரபு நாடுகளின் கூட்டணிக்கும் இடையே நடந்த போர் .
1982 லெபனான் போர்: இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையிலான மோதல் .
2006 லெபனான் போர்: லெபனானில் இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான மோதல் .
2008-2009 காசா போர்: காசா முனையில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான மோதல் .
2014 காசா போர்: காசா பகுதியில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான மற்றொரு மோதல்.

.ஆபிரகாம் 175 ஆண்டுகள் வாழ்ந்து இறந்து போனார். அவரின் புதல்வர்களாகிய ஈசாக்கும் இஸ்மயேலும் மம்ரே நகருக்குக் கிழக்கே இத்தியனான சோவாரின் மகன் எப்ரோனுடைய நிலத்தில் இருந்த மக்பேலா குகையில் அவரது மனைவி சாராயோடு அடக்கம் செய்தனர்.

யூதர்களுக்கும் அரேபியர்களுக்கும் இடையிலான வெறுப்பும் அவநம்பிக்கையும் பகையும் இன்றுவரை நீடிக்கிறது. அதனைத் தொடக்கி வைத்தவர்கள் ஆபிரகாமின் முதல் மனைவி சாராவும் அவரது இரண்டாவது மனைவி அடிமைப் பெண் ஆகாரும் ஆவர்.

The Grand Opening Opening Ceremony of Vettyvel Law Professional Corporation

கனடிய செய்திகள் Canadian News

# Vettyvel Law Professional Corporation சட்ட நிறுவனம் தனது புதிய அலுவலகத்தை Scarborough வில் திறந்து வைத்தது



The Grand Opening Opening Ceremony of Vettyvel Law Professional Corporation, owned by Lawyer Rishani, took place on last Friday (27-10-2023) and this office is located at 2225 Markham Rd Unit 203, Scarborough, ON M1B 2W4
Phone:
(416) 261-1544.

Well known Senior Lawyer, Mr. Kailasanathan was invited as the Guest and Cut the ribbon.

Many invitees, including MP and a Federal Minister Mr. Gary Anadasangree was also there to greet Selva Vettyvel and Rishani.

--------------------

Vettyvel Law Professional Corporation என்னும் பெயருடன் மேற்படி சட்ட நிறுவனம் தனது புதிய அலுவலகத்தை கடந்த 27ம் திகதி வெள்ளிக்கிழமை 2225 Markham Rd Unit 203, Scarborough, ON M1B 2W4 என்னும் விலாசத்தில் திறந்து வைத்தது.

நிறுவனத்தின் சட்டத்தரணி திருமதி. றிசானி அவர்களின் அழைப்பின் பேரில் நூற்றுக்கணக்கானவர்கள் திறப்பு விழாவில் கலந்து சிறப்பித்தார்கள்.

சிரேஸ்ட சட்டத்தரணி கைலாசநாதன் அவர்கள் நாடாவை வெட்டி புதிய அலுவலகத்தை திறந்து வைத்தார். எமது பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்களும் அங்கு சமூகமளித்து உரிமையாளர்களை பாராட்டினார்.


கனடா உதயன் சார்பில் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கமும் அங்கு கலந்து கொண்டார்.

**படமும் செய்தியும்: சத்தியன்**





# கனடாவில் நடைபெறவுள்ள பி. விக்னேஸ்வரன் அவர்கள் எழுதிவெளியிட்டுள்ள "நினைவு நல்லது" என்னும் அதிக பக்கங்கள் கொண்ட நூலின் வெளியீட்டு விழா




இலங்கையில் அரச ஒலிபரப்பு மற்றும் ஒளி பரப்பு நிறுவனங்களில் பணியாற்றி அவை மூலம் பெற்ற அனுபவம் மற்றும் பயிற்சி ஆகியவற்றை தொடர்ச்சியாக கனடாவில் இயங்கிவரும் தொலைகாட்சி மற்றும் வானொலி நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி வெற்றி கண்ட பி. விக்னேஸ்வரன் அவர்கள் எழுதிவெளியிட்டுள்ள "நினைவு நல்லது" என்னும் அதிக பக்கங்கள் கொண்ட நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 04-11-2023 அன்று கனடாவில் நடைபெறவுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இந்த நூலின் வெளியீட்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழா பற்றிய செய்தியும் படங்களும் கனடா உதயன் பத்திரிகையின் அச்சுப் பதிப்"பிலும் இணையப் பதிப்பிலும் பிரசுரமாகி இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்காபுறோவில் நடைபெறும் வெளியீட்டு விழா ப்றறிய விபரங்களை இங்கு காணப்படும் விளம்பர அறிவித்தலில் பார்க்கவும்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# அரசியலில் ஈடுபடுகின்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையினால் ஒதுக்கீடுகளும் குறைவாகவே காணப்படுகிறது

## மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ



(31-10-2023)

அரசியலில் ஈடுபடுகின்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையினால் ஒதுக்கீடுகளும் குறைவாகவே காணப்படுகிறது.எனவே பெண்கள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்காது விட்டால் துணிந்து கேட்பதற்கு அவர்கள் வலுவூட்டப்பட்ட வேண்டியவர்களாக உள்ளனர் என மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

"பெண்களை அரசியலில் வலுவூட்டுவதற்கான செயலமர்வு" திங்கள் (30) மற்றும் செவ்வாய் (31) ஆகிய இரு தினங்கள் மன்னார் மாவட்டச் செயலக ஜெய்க்கா மண்டபத்தில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

குறித்த கருத்தமர்வில் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னால் உறுப்பினர்கள், உள்ளடங்கலாக அரசியலில் ஈடுபடுகின்ற பெண்களும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த கருத்தமர்வை வவுனியா பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர். புஸ்பகாந்தன் முன்னெடுத்தார்.

இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெண்களாகிய நீங்கள் எங்களின் சொத்துக்கள். ஏன் என்றால் நீங்கள் எந்த கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி நீங்கள் அனைவரும் எமது மாவட்டச் சொத்துக்கள். நீங்கள் அனைத்து விடையங்களையும் கையாளப் போகின்றவர்கள், கையாளுகின்றவர்கள்.

எனவே எங்களின் செயற்பாடுகளை நாங்கள் மதிக்கிறோம். அதன் அடிப்படையில் பெண்களாகிய உங்களை அரசியல் ரீதியில் வலுவூட்டும் வகையில் இந்த இரு நாள் செயலமர்வை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) முன்னெடுத்துள்ளது.

இந்த நாட்டின் அதிக எண்ணிக்கையான வாக்காளர்களாக பெண்களே உள்ளனர். ஆனால் அரசியலில் பெண்களுக்கான ஒதுக்கீடு 50 வீதம் என குறிப்பிடப்பட்டுள்ளமை வெறும் பேச்சிலும், எழுத்திலும் உள்ளது.

இந்த நாட்டின் எல்லா செயற்பாடுகளுக்குமான தூண்களாக பெண்களே உள்ளனர். எனவே பெண்களுக்கான 50 வீத ஒதுக்கீட்டை அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பெண்கள் இந்த நாட்டிலும் வெளிநாடுகளிலும் அனைத்து துரைகளிலும் உள்ளனர். இந்த நாட்டின் அபிவிருத்திக்காகவும், பொருளாதாரத்திற்கும் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகும்.எனவே பெண்களை அரசியல் ரீதியில் வலுவூட்ட தொடர்ந்தும் செயல்பட வேண்டும்.

அரசியலில் ஈடுபடுகின்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையினால் ஒதுக்கீடுகளும் குறைவாகவே காணப்படுகிறது.

எனவே பெண்கள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்காது விட்டால் துணிந்து கேட்பதற்கு அவர்கள் வலுவூட்டப்பட்ட வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.







# மன்னாரின் இயற்கை வளங்கள் விற்பனை: 70ஆயிரம் மக்களின் நிலை என்ன – மீனவ சமாசச் செயலாளர் கேள்வி

மன்னாரின் இயற்கை வளங்கள் ஒவ்வொன்றாக விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் மாவட்டத்தின் 70 ஆயிரம் மக்களின் எதிர்கால நிலை தொடர்பில் அரசியல்வாதிகள் அக்கறையின்றி செயல்படுவதாக மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் ஆலம் குற்றம் சாட்டுகின்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தில் இடம் பெற்ற மீனவ சங்கங்களின் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களான சூரிய சக்தி, கடல்வளம், நிலம் என்பன அபிவிருத்தி என்ற போர்வையில் அந்நிய நாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எமது மன்னார் மாவட்டம் கடல் மட்டத்திலிருந்து கீழ் இறங்கிக் காணப்படுவதால் கடல் அரிப்பின் காரணமாக சில வேளைகளில் எமது மாவட்டம் வரைபடத்திலிருந்து காணாமல் போகக்கூடிய அபாயம் ஏற்படலாம்.

ஏனெனில் அபிவிருத்தி என்ற போர்வையில் மிகப்பெரிய காற்றாலை திட்டம் ஒன்றை அதானி குழுமம் மேற்கொண்டு வருகின்ற நிலையில் அதற்காக நிலத்தில் பாரிய துளைகள் இடப்படவுள்ளது.

அது மட்டுமல்லாது தற்போது புதிய கடற்தொழில் சட்டம் என்ற போர்வையில் வெளிநாட்டு படகுகளை எமது பிரதேசத்தில் கடத்தொழில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

இதன் காரணமாக எமது மாவட்டத்தில் உள்ள 70 ஆயிரம் குடும்பங்களில் 90 விதமான குடும்பங்கள் கடற்தொழிலையே நம்பி வாழ்கின்ற நிலையில் அவர்களின் நிலை தொடர்பில் அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும்.

வடக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச வேண்டிய இடத்தில் பேசாமல் இருப்பது தேவையற்ற விடயங்களில் இனவாதத்தை பேசுவதும் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்காது.

ஆகவே மன்னார் மாவட்டத்தின் நிலை தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அக்கறையோடு செயல்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கடும் எதிர்ப்பையடுத்து சட்டத்தரணி சுவஸ்திகாவின் கருத்தரங்கு நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கடும் எதிர்ப்பையடுத்து சர்சைக்குரிய சட்டத்தரணி சுவஸ்திகாவின் கருத்தரங்கு நிறுத்தப்பட்டது.

செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் தலைவர் கோசலை மதன் ஏற்பாட்டில் சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் வளவாளராக பங்குபற்றும் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடுசெய்யப்பட்டது.

இந் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கடுமையான எதிர்ப்பினையடுத்து குறித்த கருத்தரங்கு நிறுத்தப்பட்டது.

அண்மையில் நிகழ்வு ஒன்றில் பங்குபற்றிய சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பாசிச அமைப்பு என தெரிவித்திருந்தார்.

இவரது கருத்திற்கு பல்வேறு தரப்புகளும் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர் இந் நிலையில் இன்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் சட்டத்தரணி சுவஸ்திகா பங்கு பற்றும் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்திய நிலையில் குறித்த நிகழ்வு நிறுத்தப்பட்டுள்ளது.

# மன்னாரில் பெண்கள் மத்தியில் சுய தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் ஐஸிங் கேக் உற்பத்தி பயிற்சி



(26-03-2023)

மன்னார் பிரதேசத்தில் உள்ள பெண்கள் மத்தியில் சுய தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பெண்களுக்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டிலும், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் ஐசிங் கேக் மற்றும் ஏனைய வகை கேக் உற்பத்தி பயிற்சி திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரண்டு நாட்கள் மன்னார் மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.



மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த தொழில் பயிற்சியில் கைத்தொழில் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர் ஜே.எம்.ஏ. லெம்பேட், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள், தீவக பெண்கள் வலையமைப்பின் பிரதிநிதிகள் உள்ளடங்களாக தெரிவு செய்யப்பட்ட பெண்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது தொழிசார் கேக் உற்பத்திகள் அலங்கார கேக் உற்பத்திகள் மற்றும் அவற்றை காட்சிப்படுத்துவது தொடர்பிலும் பயிற்சி வழங்கப்பட்ட தோடு இறுதியில் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டது.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராட்டம்

இலங்கை செய்திகள் Sri Lanka News



- மன்னார் நிருபர் (1-11-2023)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து புதன்கிழமை (1) காலை 6.30 மணி முதல் மதியம் 12 மணி வரை பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதார ஊழியர்கள் தமக்கு வாரத்தில் 5 நாள் வேலை யை வழங்க வேண்டும், மேலதிக நேர கொடுப்பணவை வரையறை இன்றி வழங்க வேண்டும்,மின்சார கட்டண அதிகரிப்பை ரத்து செய், மருந்து தட்டுப்பாட்டை உடனடியாக ரத்து செய் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் முன்னெடுத்தனர்.

சுகாதார தொழிற்சங்கங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தினால் தூர இடங்களில் இருந்து வைத்திய சேவைக்கு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வை விரைவாக வழங்காது விட்டால் அனைத்து அவசர சேவைகளையும் பகிஷ்கரித்து போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.





# சுகாதாரச் சேவை தொழிற்சங்கம் சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம்!


சுகாதார ஊழியர்கள் இன்று (01.11.2023) சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை கிளிநொச்சி வைத்தியசாலை முன்பாக மேற்கொண்டு இருந்தனர்.

சம்பளம் 2016 இன் பின் அதிகரிக்கப்படவில்லை என்பதோடு, கிழமையில் ஐந்து நாட்கள் வேலை உள்ளிட்ட பல அம்ச கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு 2023.11.01 ஆம் திகதி மு.ப 7.00 தொடக்கம் பி.ப 12.00 வரை சுகாதார சேவை தொழிற் சங்க கூட்டணியாக போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.



# இலங்கையின் அபிவிருத்திக்கு கைகொடுப்பதாக உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு!





வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் கடந்த திங்கட்கிழமை (2023.10.30) உலகவங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அன்னா பிஜெர்டே மற்றும் அவரது குழுவையும் பெண்கள், சிறுவர்கள் துறை சார்ந்த தலைவர்களையும் சந்தித்திருந்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள் வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தியதுடன், வடமாகாணத்தில் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பதைக் கண்டறிவதில் பெரும் சவால்களை எதிர்கொள்வதாகவும், கல்வி, சுயதொழில் உட்கட்டமைப்பு மற்றும் சிறுவர், பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் வடக்கு மாகாணத்திற்கு ஆதரவளிக்குமாறும் உலக வங்கி பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இவற்றைக் கேட்டறிந்த உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து தாம் மிகவும் கவனத்தில் கொள்வதாகவும் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களுக்கு தாம் கைகொடுப்பதாகவும் கூறியிருந்தார்.

வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும் எனவும் உலகவங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இந்த கலந்துரையாடலில் தெரிவித்தார்.

இதன்படி, எதிர்காலத்தில் வடமாகாண மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவை வழங்கும் என உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் உறுதியளித்தார்.

(ஆளுநர் ஊடகப் பிரிவில் இருந்து தற்போது கிடைத்த செய்தி)



# நயினாதீவு ராஜமஹா விகாரையில் கண்டி பெரஹரா

வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு ராஜமஹா விகாரையில் 31-10-2023 கண்டி பெரஹரா ஊர்வலம் சிறப்பாக இடம்பெற்றது.

இவ் கண்டிப் பெரஹரா ஊர்வலமானது நயினாதீவு அம்மன் ஆலய பின்புற வீதியில் இருந்து ஆரம்பமாகி அங்கிருந்து நயினாதீவு ராஜமஹா விகாரைவரை சென்று நிறைவடைந்தது.

இதில் கண்டிய நடனம், மயில்லாட்டம், ஒயில்லாட்டம், ஆதிவாசிகள் நடனம், இந்திய கதகளி நடனம், காவடியாட்டம், கோலாட்டம், குறவர் ஆட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுடனான ஊர்வலம் இதன்போது இடம்பெற்றது.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண கடற்படைத்தளபதி ஜெனரல் ரீ.எம்.ஏ.ஏ தென்னக்கோன் கலந்துகொண்டார். அவர் நயினாதீவு ராஜ மஹா விகாரை இடம்பெற்ற பிரித் பாராயண சமய நிகழ்விலும் கலந்துகொண்டார்.

இவ் பிரித்பாராயண சமய நிகழ்வினை வணக்கத்திற்குரிய நவதகல பதுமகித்தி நாயக்க தேரர் நிகழ்த்தினர்.

இதில் கடற்படையினர்கள், இராணுவத்தினர்கள், பௌத்தகுருமார்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.







# கிழக்கிற்கு வருகை தந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்!

(01-11-2023)

கிழக்கு மாகாணத்திற்கு 01-11-2023 அன்று இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வருகை தந்துள்ளார்.

திருகோணமலை விமான தளத்தில் நிர்மலா சீதாராமன் அவர்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பிரதம செயலாளர் R.M.P.S ரத்நாயக்க, ஆளுநர் செயலாளர் L.P மதநாயக்க, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் L.L அணில் விஜயஶ்ரீ, அரச அதிபர் மற்றும் சுற்றுலா பணியக தவிசாளர் மதன் ஆகியோர் வரவேற்றனர்.

மேலும் ஆளுநரின் ஏற்பாட்டில் நிர்மலா சீதா 2ம் திகதி அன்று திருக்கோணேச்சரம் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்வதுடன், மேலும் பல முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்க உள்ளார்.

# ஊடகவியலாளர் திலீப் அமுதனிடம் பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் விசாரணை



2020 ஆண்டு உதயன் பத்திரிகையில் வெளியான செய்திகள் மற்றும் ஒளிப்படம் தொடர்பாக உதயன் பத்திரிகை செய்தி ஆசிரியர்களில் ஒருவரான கு.டிலீப்அமுதனிடம் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி உதயன் பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் தொடர்பான செய்தியும், ஒளிப்படமும் வெளியாகியிருந்தது.

அது தொடர்பாகவும், அன்றைய தினம் வெளியாகியிருந்த தமிழ்த் தேசியக் கட்சி மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு அழைப்பு விடுத்திருந்த செய்தி தொடர்பாகவுமே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு காலை 9 மணி முதல் மதியம் 1.30 மணிவரைவாக்குமூலம் பெறப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் பிறந்தநாள் செய்தி மற்றும் ஒளிப்படம் தொடர்பாக அதேவேளை, யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி: பற்களை ஆய்வு செய்து வயதை கண்டறிய தீர்மானம்

- நடராசா லோகதயாளன்




**கொ**க்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் உரிமையாளர்களின் வயதை கண்டறியும் முதற்கட்ட பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சடலங்களை அகழ்ந்து எடுப்பதற்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, மனித புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட பற்களை ஓ-சயல ஆய்வு செய்து அடிப்படையில் வயது நிர்ணயம் செய்யப்படவுள்ளதாக தெரிவித்தார்.

“தற்போது மீட்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மாவட்ட வைத்தியசாலையின் உடற்கூறாய்வு நிலையத்தில் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக நாங்கள் அவற்றின் பற்களை எக்ஸ்ரே எடுத்து அவர்களின் வயதை அனுமானிக்க உத்தேசித்துள்ளோம். மேலும் இந்த பரிசோதனைகளுக்காக பேராதனை பல்கலைக்கழத்தைச் சேர்ந்த பல் சிகிச்சைப் பிரிவு பேராசிரியர் ஒருவரின் உதவியை நாடியுள்ளோம். இனிவரும் காலங்களில் எக்ஸ்ரே எடுத்து முடிந்த பின்னர் அவர்கள் வந்து நேரடியாக இந்த எலும்புக்கூட்டுத் தொகுதியை பரிசோதிக்கும்போது நாங்களும் கூடவே இருந்து எங்களுடன் தொடர்புடைய விடயங்களை கையாள்வோம்.”

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளை நவம்பர் 20ஆம் திகதியிலிருந்து மீள ஆரம்பிக்க ஒக்டோபர் 30ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. எதிர்கால அகழ்வு பணிகளுக்காக சுமார் 25 இலட்சம் ரூபாய் நிதி எஞ்சியுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் தொடர்பில் எவ்வாறான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது? என, முல்லைத்தீவு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ, அனைத்து எலும்புக்கூடுகளையும் அகழ்ந்து எடுத்ததன் பின்னர் அதுத் தொடர்பில் ஆராய்ந்து, இதுத் தொடர்பிலான தீர்மானத்தை வெளியிடவுள்ளதாக குறிப்பிட்டார்.

“இதுத் தொடர்பிலான முடிவுகளை பொறுத்தவரையில் இவ்வாறான சிறு சிறு பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே மீட்கப்பட்ட எலும்புபக்கூடுகளின் எக்ஸ்ரேக்கள் எடுக்கப்பட்டுவிட்டன. நாங்கள் கிடங்கில் உள்ள எலும்புக்கூடுகளை முழுமையாக எடுப்போம், அதன் பின்னர் ஆராய்ந்து முடிவுகளை சொல்வதாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை ஆரம்பத்தில் சொன்னால் சில சிக்கல் எழலாம், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அவர்களின் சட்டத்தரணிகள் கிடங்கில் உள்ள அனைத்து எலும்புக்கூடுகளையும் எடுப்போம் எடுத்த பின்னர் எஞ்சிய பணிகளை மேற்கொள்வோம் என கூறியிருக்கின்றார்கள்.”

செப்டெம்பர் 15ஆம் திகதி அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக முடிவடைந்ததோடு, கிடைத்த ஆதாரங்களை ஆய்வு செய்வதற்காக அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக புதைகுழியை அகழ்ந்தெடுக்கும் விசாரணையில் முன்னோடியாக செயற்படும் தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ குறிப்பிட்டிருந்தார்.

“கிடைத்த ஆதாரங்களை முறையாக ஆய்வு செய்வதற்காக இந்த 2 மாத காலத்திற்கு இது நிறுத்தப்பட்டுள்ளது. முதற்கட்ட அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட இடத்தில் இருந்து மீட்கப்பட்ட ஆதாரங்கள் மற்றும் ஏனைய பொருட்களை ஆராய்ந்து உண்மைகளை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் அறிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர், இந்த அகழ்வு மற்றும் விசாரணையை தொடரலாமா வேண்டாமா என நீதிமன்றம் தீர்மானிக்கும் வரை வரை காத்திருக்கிறோம். என்ன தீர்மானம் எடுக்கப்படும் என்பதுதான் விடயம்.”

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் புதைகுழியை அகழ்ந்தெடுக்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது நாட்களின் பின்னர் 17 எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன. அந்த எலும்புக்கூடுகள் விடுதலைப் புலி உறுப்பினர்களுடையது என சந்தேகிக்கப்படும் சில ஆதாரங்களும் கிடைத்துள்ளன.

கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் இருந்து கொக்கிளாய் நோக்கி 200 மீற்றர் தொலைவில் நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாயை பதிக்க நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த வேளையில் தற்செயலாக மனித உடல் பாகங்களும் ஆடைகளின் பாகங்களும் இந்த வருடம் ஜூன் 29ஆம் திகதி மாலை கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ERAA PLAZA
5928 FINCH AVE EAST
SCARBOROUGH, M1B5P8
(647) 295-9299

value mobile

NEW TO CANADA?
COME SEE US TODAY FOR AMAZING DEALS ON PHONE & PLANS!

5G
ROGERS INFINITE

$42
PLUS TAX PER MONTH

தமிழில் உரையாடி உங்களுக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

30GB DATA

UNLIMITED CANADA-WIDE WITH US CALLING
UNLIMITED CANADA & US TEXT & VIDEO MESSAGING
BRING YOUR OWN DEVICE OR GET A PHONE FROM US

# இலங்கையிலிருந்து கனடா வந்துள்ள பன்முகப் பெண் ஆளுமை உமாச்சந்திரா பிரகாஷ்



உமாச்சந்திரா பிரகாஷ் என்னும் பெயர் இலங்கைத் தீவெங்கும் நன்கு அறியப்பெற்ற ஒரு பன்முகப் பெண் ஆளுமையாக விளங்கும் ஒன்றாகும். எழுத்துலகம். ஊடகம். சமூகப்பணி மற்றும் அரசியல் மற்றும் பெண் தலைமைத்துவம் ஆகிய பிரிவுகளில் துலங்கிவரும் வரும் ஒரு தலைமைத்துவப் பண்பு கொண்ட பிரமுகராகவும் இவர் விளங்கி வருகின்றார். இவர் தற்போது கலை இலக்கிய மற்றும் சமூகம் நட்பு ஆகியவை சார்ந்த பயணம் ஒன்றை மேற்கொண்டு கனடா வந்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மட்டுவில் என்னும் சிறிய கிராமத்தில் பிறந்த உமாச்சந்திரா பிரகாஷ். ஆரம்பக் கல்வியை மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலையிலும் உயர்தரக் கல்வியை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் கற்றார். வட பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக 1996 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, தலைநகர் கொழும்பில் இவமர் வாழ நேரிட்டது. ஊடகத்துறையில் டிப்ளோமாக் கற்கை நெறியைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்த பின்னரம். தற்போது கொழும்புப் பல்கலைக்கழகத்தில் "சட்டமும் ஆட்சியும்" பாடநெறியைக் கற்று வருகின்றார்.

2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 வரை சக்தி வானொலி, வீரசேகரி பத்திரிகை, சக்தி தொலைக்காட்சி - நியூஸ்பெர்ஸ்ட் ஆகிய ஊடகங்களில் பணியாற்றியுள்ளார். ஊடகத்துறையில் இணையம், சஞ்சிகை, பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகிய பல துறைகளிலும் பணியாற்றுவதற்கு தனக்கு வாய்ப்புக் கிடைத்தது தொடர்பாக மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

2018 ஆம் ஆண்டு இலங்கையில் நல்லாட்சி அரசாங்கம் என்ற நாமத்தோடு அறிமுகம் செய்யப்பெற்ற ஆட்சிக் காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு என்ற சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர், கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் பாமன்கடை மேற்கு வட்டாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக போட்டியிட்டார். வட்டார ரீதியில் அவரால் தேர்தலில் வெற்றி பெற முடியாவிட்டாலும், கொழும்புத் தெற்கு தேர்தல் தொகுதியில் கட்சி சார்பாக அதிகூடிய வாக்குகளைப் பெற்ற காரணத்தினாலும், பெண்களுக்கான 2 பெண்களுக்கான 25 சதவீதம் ஒதுக்கீடு காரணமாகவும் முன்னாள் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கொழும்பு மாநகர சபைக்கு விகிதாசார முறையில் நியமிக்கப்பெற்றார். அதனைத் தொடர்ந்து கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராகவும் மேல் மாகாண முதலமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.



கடந்த ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் வழிகாட்டலில் சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு ஆதரவைக் கொடுத்த காரணத்தில், 2020 ஆண்டு கொழும்பு மாநகர சபை உறுப்புரிமையை இழக்க நேரிட்டாலும், 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டதுடன், ஐக்கிய மக்கள் சக்தி 13,564 வாக்குகளை இவரால் பெற முடிந்தது. ஆயினும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை வெற்றி கொள்ள முடியவில்லை. ஆனால் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் தனது ஒருங்கிணைப்புச் செயலாளராக உமாச்சந்திரா பிரகா' அவர்களை நியமித்தார். அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளராகவும் (தமிழ்), பிரதிச் செயலாளராகவும், ஐக்கிய பெண்கள் அணியின் உப தலைவர்களில் ஒருவராகவும் நியமிக்கப்பெற்றார். மேலும் வட மாகாண ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தனது பாடசாலைக் காலத்தில் அதிபர் மற்றும் ஆசிரியர்களால் சிறந்த தலைமைத்துவப் பண்புகளுடன் வளர்த்தெடுக்கப்பெற்ற உமாச்சந்திரா பிரகாஷ். அத்துடன் யாழ்ப்பாணத்தில் யுத்த காலத்தில் வாழ்ந்த அனுபவமும் சிறந்த தலைமைத்துவப் பயிற்சிகளை தனக்குக் கொடுத்திருக்கின்றது. யுத்த காலமானது, இருப்பதைக் கொண்டு வாழ்க்கையை எப்படி வெற்றிகரமாக மாற்றுவது என்ற பாடத்தையும், அனுபவத்தையும் தனக்கு கொடுத்திருக்கின்றது என்று பெருமையுடன் பகிர்ந்து கொள்கின்றார். ஊடகத்துறையில் தான் பணியாற்றிய இரண்டு நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர்கள் திரு. ஆர். இராஜமகேந்திரன் மற்றும் திரு. குமார் நடேசன் ஆகியோர் தனது திறமையை அடையாளம் கண்டு அங்கீகரித்தார்கள் எனவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்.

யுத்தம் நிறைவடைந்த 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணம், வரலாற்றுத்துறையின் தலைவர் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் மற்றம் கலைக்கேசரி ஆசிரியை திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை ஆகியோர்களின் வழிகாட்டல்களுடன், வீரகேசகரி நிறுவனமும் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த "யாழ்ப்பாண வாழ்வியல்" என்னும் கண்காட்சியில் தனது பங்களிப்பும் இருந்தது என்றும் மேலும் பெட்டகம், நல்லூர் கந்தசுவாமி பெருங்கோயில், யாழ்ப்பாணத்தைத் தேடி மற்றும் அணிகலன் ஆகிய தனது ஆய்வு நூல்களின் உருவாக்கத்திற்கு அரசாங்கத்தில் வழங்கப்படும் "கலைச்சுடர்" தேசிய விருது இலக்கியத்துறைக்காக தனக்குக் கிடைத்தது என்றும் தன் இனத்தின் தேடலுக்கான சிறந்த அங்கீகாரமாக அதைக் கருதுவதாகவும் உமாச்சந்திரா பிரகாஷ் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார்.

2018 ஆம் ஆண்டு அரசியல் பணி தொடங்கிய காலப்பகுதியில் இருந்து, பெண்களின் சுயதொழில் முன்னேற்ற செயற்பாடுகளை தலைநகரை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுத்திருப்பதாகவும் மேல் மாகாண சபை மற்றும் கொழும்பு மாநகர சபை ஆகியவற்றின், நிதி ஒதுக்கீடுகள் ஊடாக குறித்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடிந்தது எனவும். 2020 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர், இரான் விக்ரமரத்ன அவர்களுடைய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஊடாக பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் இதனால் தான் வடபகுதியில் பெண் தலைமைத்துவம் கொண்ட பல குடும்பங்களுக்கு உதவி முடிந்தது எனவும் தெவித்துள்ளார்.

மேலும் ஐக்கிய மக்கள் சக்திகட்சியினுடைய பிரதிச் செயலாளராக வட மாகாணத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும். வட மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் சிறுநீரக டயலிஸ் இயந்திரங்களை எதிர்க்கட்சித் தலைவர் ஊடாக வழங்க ஏற்பாடுகளை செய்து அதில் வெற்றி கண்டதாகவும் வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு ஸ்மாட் வகுப்பறைகள் மற்றும் பஸ் வண்டிகளை வழங்கி வரும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் அண்மையில் தனது அழைப்பின் பேரில் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் விஜயம் செய்து பஸ் வண்டி ஒன்றை அன்பளிப்புச் செய்ததாகவும் பன்முகப் பெண் ஆளுமை உமாச்சந்திரா பிரகாஷ் எம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

மேலும். வட மாகாணத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாவும். குறிப்பாக பெண்களை மையப்படுத்திய வேலைத்திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவதாகவும். அத்துடன் அரசியலுக்கு அப்பால் எமது தமிழ் இனத்தின் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையோடு இணைந்து வரலாறு, கலை, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் போன்ற விடயங்களில் பங்களிப்பு வழங்கி வருவதாகவும் உணர்வு பூர்வமான கருத்துக்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

மேலும். இலங்கையில் நிலவும் அரசியல் சூழ்நிலை தொடர்பான எமது கேள்விகளுக்கு பதிலளிக்கையில் "உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீடு என்பதை ஆண்கள் ஒரு விபத்தாகவே கருதுகின்றார்கள். பெண்களைப் பொறுத்தவரையில் அதிர்ஷ்ட வாய்ப்பாகும். ஏனெனில் பெண்கள் அரசியலுக்குள் வருவதென்றால் குடும்ப அரசியல் பின்னணி இருக்க வேண்டும் அல்லது பிரபலமான பாடசாலைகளில் கல்வி கற்றிருக்க வேண்டும், ஆங்கிலத்தில் புலமை பெற்றிருக்க வேண்டும், பண வசதி வாய்ப்புக்கள் அதிகமாக இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள். மத்தியதரக் குடும்ப பெண்கள் அல்லது சாமானிய பெண்கள் அரசியலுக்கு வருவதில்லை அவ்வாறு வந்தாலும் வாய்ப்புக்கள் இல்லை என்பது பொதுவான கருத்தாகும். அவ்வாறான சந்தரப்பத்தில் 25 சதவீத இட ஒதுக்கீடு எமக்கான அரசியல் வரப்பிரசாதம் ஆகும்" என்று மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார் உமாச்சந்திரா பிரகாஷ் அவர்கள்.

தொடர்ந்து உமாச்சந்திரா பிரகாஷ் அவர்கள் எமது கேள்விகளுக்கு பதிலளிக்கையில் "அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்ற பெண்கள் காட்டும் குறைவான ஆர்வம், இலங்கையின் தற்போதைய அரசியல் முறைமையில் காணப்படும் வன்முறை கலாச்சாரம் மற்றும் ஊழல் போன்ற எதிர்மறையான குணாம்சங்கள், அரசியல் கலாசாரத்தின் மாற்றங்கள், விசேடமாக மக்கள் மத்தியில் அரசியல் மற்றும் அரசியல்வாதிகள் மீது காணப்படும் நம்பிக்கையின்மை, சமூக உணர்வு மற்றும் ஒழுக்கச் சீரழிவுகள், விகிதாசார பிரதிநிதித்துவ முறையால் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள், அரசியல் கட்சிக்குள் காணப்படும் குறைவான உள்ளக ஜனநாயகம், பெண்களுக்கு வேட்பு மனுக்களை பெற்றுக்கொடுப்பதில் காட்டும் குறைவான ஆர்வம், தேர்தல் மோசடிகள் போன்ற காரணிகளை அடிப்படை அரசியல் தடைகளாக நான் அடையாளப்படுத்த விரும்புகிறேன் எனவும் கூறிய அவர் தொடர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது பின்வருமாறு தொடர்ந்தார்.


"நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னர் அரசியல் தொடர்பான எந்தவொரு பயிற்சியோ அனுபவமோ எனக்கு இல்லை. கொழும்பு மாநகர சபை உறுப்பினரான பின்னர் அரச, அரச சார்பற்ற மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி செயலமர்வுகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அவ்வாறான பயிற்சி செயலமர்வுகள் எனது அரசியல் பயணத்தில் சிறந்த வழிகாட்டியாக இருந்ததுடன், எனது அரசியல் வெற்றிக்கும் காரணமாகவும் அமைந்தன.

எனது அரசியலைப் பொறுத்தவரையில், எமது இனத்தின் உரிமை சார்ந்த அரசியலாகவே உள்ளது. எமது இனத்தின் உரிமைகளை ஜனநாயக வழிமுறை ரீதியான அரசியல் ஊடாக வென்றெடுக்க வேண்டும். அரசியலுக்கு வரக்கூடிய பெண்களைக் கருவேப்பிலையாக பயன்படுத்தும் கட்சிகளைத் தூக்கி எறிய வேண்டும். தேர்தல் காலத்தில் மாத்திரம் பெண்களைப் பயன்படுத்தி, வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சிப்பவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்" என்றார் உமாச்சந்திரா பிரகாஷ் அவர்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ ஆட்சி மாற்றத்திற்கு எதிராக போராடியமைக்காக ஹிருணிக்கா பிரேமச்சந்திர அவர்களுடன் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டவர். குறித்த வழக்கு இன்னமும் நடந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எமது சந்திப்பின் இறுதிக் பகுதியாக நாம் முன்வைத்த அரசியல் தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த உமாச்சந்திரா பிரகாஷ் அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்.

"எதிர்வரும் 2025 பாராளுமன்றத் தேர்தலை மையப்படுத்தி பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறேன். அதற்காக மக்களுக்கு தேவையான நலன்புரித் திட்டங்களை முன்னெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கின்றேன். ஆனாலும் மக்கள் மத்தியில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். மக்கள் தனிப்பட்ட சலுகைகளை எதிர்பார்க்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். பாராளுமன்ற கட்டமைப்பு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்களில் உள்ள வளங்களை மிகச்சரியான முறையில் எப்படி மக்கள் நலனுக்காக பயன்படுத்த வேண்டும் என்பதை அரசியல்வாதிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். மக்களுக்கு ஏற்பட கூடிய நிர்வாக ரீதியான சிக்கல்களைத் தீர்த்து வைக்க வேண்டும். இலஞ்சம், ஊழல் இல்லாத வெளிப்படைத்தன்மையான ஆட்சி உருவாக்கப்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். வானம் வசப்படும் என்ற நம்பிக்கையில் அரசியலில் தொடர்ந்து பயணிக்கிறேன்" என்றார் என்று எமது கலந்துரையாடலை நிறைவுக்கு கொண்டு வந்தார் பன்முகப் பெண் ஆளுமையாக விளங்கும் உமாச்சந்திரா பிரகாஷ்.



**- கனடா ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**

இங்கே பதிவு செய்யப்படும் பதிவு ஓர் காதல் கதை. இது 1985-1990 ம் இடையிலான காலகட்டத்தை சார்ந்த ஓர் கற்பனைக் கதை. இச்சிறு கதையின் மூலம் பெற்றோரிற்கான அருமையான தகவல் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இத்தகவல் எக்காலத்திற்கும் பொருத்தமானதே. இதனை ஓர் நாடக ரூபத்தில் தருகிறேன். ஆரம்பத்தில் சிறுது சலிப்பாக இருந்தாலும் போகப்போக சுவாரஸ்யமாக இருக்கும். இதோ நீங்கள் ஆவலுடன் காத்திருக்கும்,

# "நின்னை சரணடைந்தேன்"

*(சென்ற வார தொடர்ச்சி...)*

**கதாபாத்திரம்:**

| | |
|---|---|
| கதாநாயகன் | - கணேஷ் |
| கதாநாயகி | - மதுமிதா |
| கணேஷின் தந்தை | - சரவணமுத்து |
| தாயார் | - தருமவதி |
| மதுமிதாவின் தந்தை | - வேலாயுதம் |
| தாயார் | - சுசீலா |
| மதுமிதாவின் நண்பிகள் | - தாரணி, வாசுகி |
| மதுமிதாவின் வில்லி | - பொன்மதி |
| அதிபர் | - மிஸ் சோமசுந்தரம் |
| கனடா மாப்பிள்ளை | - பிரபா |

---------------
**காட்சி - 6**
---------------

வாசுகியும் தாராணியும் மது வீட்டுக்குச் செல்கிறார்கள் .....வாசலில் நின்று மதுவைக் கூப்பிடுகிறார்கள்.

தாரணி: மதுமிதா மதுமிதா..... தாரணி வந்திருக்கிறேன். (மது வெளியே வருகிறாள்)

தாரணி: மது உனக்கொரு முக்கியமான விசையத்தோடை வந்திருக்கிறம்.

மது: அது என்ன அப்படி முக்கியமான விஷயம்? ஏதாவது வநளவ அயசமள வந்திருக்கோ?

தாரணி: ஐயோ, எந்த நேரமும் உனக்கு படிப்பு கதைதான். அதில்லை மது, வேறை ஒரு முக்கியமான விஷயம்.

மது: சரி சொல்லித்தொலை, என்னது?

தாரணி: அந்த....அந்த...அந்த.....பெடியன், அந்த பெடியன்.

மது: யார்? என்ன? எந்தப்பெடியன்? சொல்லு சொல்லு.

தாரணி: அந்த வழியில ஒவொரு நாளும் காத்தோக்கொண்டு நிக்கிற பெடியன் உனக்கு கடிதம் ஒண்டு குடுக்கச்சொல்லி தந்தவன். நான் அப்பவே உனக்கு சொன்னனாந்தானே....தம்பி எதோ காரணம் இல்லாமல் இந்த வழியில தினம் நிக்க மாட்டார் எண்டு.

மது: என்ரை கடவுளே, உன்மையாகவா? நீ பொய் சொல்லுற!

தாரணி: இதைப்பிடி, இப்ப நம்பிறியா??

[தாரணி letter ஐ மதுவிடம் கொடுக்கிறாள்...மது letter ஐ பிரித்து படிக்கிறாள்...]

"அன்பின் மதுவுக்கு,

அன்புடன் நான் எழுதும் காதல் ஒவியம். என் விழியில் விழுந்த நாள் முதல் என்னை நான் மறந்தேன். உன் நினைவினால் உண்ணாமல், உறங்காமல் தினம் தவிக்கிறேன். இனி நீ இல்லையேல் நான் இல்லை. உன்னை நான் நெருங்குகிறேன், நேசிக்கிறேன். என் உயிர்க்காதலியே என்னை நீ நேசிப்பாயா?? அன்புடன் உன் பதிலுக்காக காத்திருக்கும்,"

கணேஷ்.

[மது திகைத்துப்போய் நிற்கிறாள்!]

தாரணி: மது நல்ல பதில் சொல்லடி, பாவம் அவன், மது தனக்கு வேணும் எண்டு எங்களுக்கு முன்னால அழுதிட்டான்.

மது: இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுற? எனக்கு heart படபட எண்டு அடிக்குது. வீட்டில அம்மா அப்பா அறிஞ்சா tuition class க்கு விடமாட்டினம். சரி நீங்கள் போங்கோ, நாளைக்கு சந்திப்பம்.

[இரு பக்கத்தினரும் விடைபெறுகின்றனர்.]

இப்படியாக நாட்கள் கடந்து செல்கின்றன. கல்வியா?? காதலா?? என்ற போராட்டம் மதுவை மாறி மாறி விரட்டிக்கொண்டிருந்தது. கல்வியில் தீவிர அக்கறை கொண்டிருந்தும் மதுமிதா கணேஷை முற்றாக நிராகரிக்க இயலாது குழம்பி நின்றாள். ஏன் என்றால் அவள் இளகிய மனம் கொண்டவள். அதனால் கணேஷை மதுவால் தூக்கி எறிய முடியவில்லை. இப்படி மதுவின் நிலை ஒருபக்கம் இருக்க, இன்னொருபக்கம் கணேஷ் மதுவை நினைத்து நினைத்து உருகி உருகி தவிக்கிறான்.

கணேஷின் நிலைப்பாட்டை அவதானித்த தாராணியும் வாசுகியும் மதுவுக்கு யாவற்றையும் தெரியப்படுத்துகிறார்கள். அனைத்தையும் கேள்வியுற்ற மது பெற்றோரையும் பொருட் படுத்தாது ஓர் முடுவுக்கு வருகிறாள். மது நண்பிகளின் உதவியுடன் கணேஷைச் சந்திக்க நேருகிறது.

[மதுவும் கணேஷும் ஒருவரை ஒருவர் நோக்கி நடக்கிறார்கள்...].

---------------
**காட்சி - 7**
---------------

கணேஷ்: மது, என்னால என்ரை கண்ணையே நம்ப முடியல! எனக்கு முன்னால என்ரை மதுவா நிக்கிறது? எப்படி மது? எப்படி? என்ரை காதலை இவ்வளவு சீக்கிரம் எப்படி மது உங்களால ஏற்றுக்கொள்ள முடிந்தது? Thanks மது thanks. நான் இப்படி எப்பவுமே சந்தோஷமா இருந்ததில்லை. ஆனால் இண்டைக்கு எதோ சொர்க்கத்தில் இருக்கிறமாதிரி இருக்கு. என்ரை மது எனக்கு கிடைச்சிட்டா. மது என்னடா ஏதாச்சும் சொல்லுங்களேன்?? (இவ்வாறு மதுவும் கணேஷும் சல்லாபித்திக்கொண்டிருக்கையில்...)

[அவ்வழியே பொன்மதி வருகிறாள். இவள்தான் மதுவின் வில்லி. கணேஷ் வீட்டுக்கு அயல் வீடு. பொன்மதிக்கு மதுவுடன் கடும் போட்டி. காரணம் அவள் பெற்றோர். எப்போதும் மதுவையும் பொன்மதியையும் கல்வியில் ஒப்பிட்டு பார்ப்பார்கள். இப்போ என்னதான் நடக்கப்போகிறது என்று இருந்துதான் பார்ப்போமே!]

பொன்மதி: (தனக்குள்....) இது எப்ப துடக்கம் நடக்குது?? கணேஷ் பிள்ளையார் மதுமிதாவைப் பற்றி கேட்டபோதே எனக்கு தெரியும். ஆனால் நான் நினைச்சன் இது ஒருதலைக்காதல் எண்டு. ஏனெண்டால் மதுமிதா படிப்பு படிப்பு எண்டு திரியிற பொம்பிளை. எப்படிச் சம்மதித்தாளோ தெரியல. பொறு பொறு school இல principal க்கு சொல்லாமல் விடமாட்டன். என்ரை ஆத்திரம் எல்லாம் இதை வைச்சுத்தான் தீர்க்கப்போறன். என்னை விட நீ அதிகம் படிக்க கூடாது. எதுக்கும் இப்ப இந்த கதையை வெளியில விடக்கூடாது. எல்லாம் exam முடியட்டும். Results வந்தவுடனைதான் சொல்ல வேணும். மவளே நீ என்னைவிட நல்ல marks எடுக்கக் கூடாது. எடுத்தியோ அதோகதிதான் மதுமிதா! உன்னால வீட்டில நான் படும் பாடு.

[பொன்மதி மதுமிதா கணேஷ் மூவரும் அவ்விடம் விட்டு நகருகின்றனர்.]

[அடுத்த வாரம் school இல exam. மதுவும் பொன்மதியும் கடுமையாகப் படிக்கிறார்கள்.]

மது: கடவுளே நான் exam நல்லபடியாச்செய்து நல்ல results எடுக்க வேணும்.

பொன்மதி: எப்படியாவது மதுவை நான் முந்த வேணும்.

[முதல் பாடம் அயவாள. ஒரே tention! பரீடசை முடிந்து இருவரும் results கு காத்திருந்தனர். ஒருவாறு பரீட்சை முடிவும் வந்தது. சொல்லியா தெரிய வேண்டும்...வழமைபோல் மதுவுக்கு நல்ல results. பொன்மதிக்கோ கவலையும் கோவமும் தன்னை அறியாமலேயே வந்து விட்டது. அவள் மதுமிதாவின் காதல் விவகாரத்தை principal இடம் சொல்ல தீர்மானித்தாள். இந்த இடத்தில்தான் மதுவின் வாழ்க்கையில் இடி விழ ஆரம்பிக்கிறது. இங்கே என்னதான் நடக்கப் போகிறது என்று பார்ப்போமே!]

***(தொடரும்...)***

**நன்றி!**

**அன்புடன் திருமகள் ரமேஷ்**

-----------------------------------------------

# நுணாவில் தந்த நூதனக் கவிஞன்

-----------------------------

*கவிஞர் கந்தவனம் என்ற கனவான்*
*நுணாவில் தந்த நூதனக் கவிஞன்*
*விநாயகர் மகனாய் நுணாவிலில் விளைந்தவர்*
*புவியியல் பட்டத்தை இந்தியாவில் பெற்றே*
*இலங்கையில் ஆசிரியராய் இங்கிதமாய்ப் பணியாற்றி*
*மாணவர்கள் பலரை மாணிக்கமாய் மாற்றியவர்*
*அருணோதயாக் கல்லூரியில் அதிபராய் மிளிர்ந்தவர்*
*குரும்பசிட்டி தந்த குணவதியாம் தவமணியை*
*விருப்போடு கைப்பிடித்து வாழ்வாங்கு வாழ்ந்துமே!*
*தங்கம்போல் செல்வங்கள் இருவருக்குத் தந்தையாகி*
*குடும்பத்தின் தலைவனாய்க் குன்றின்மேல் நிற்பவர்*
*கவிஞர்களை தாயகத்தில் கவனமாக உருவாக்கி*
*கவியரங்கம் பலவற்றைக் கருத்தோடு நடாத்தியவர்*
*அயலூார் கட்டுவனில் அரங்கேறிய கவியரங்கில்*
*அவர்வாயால் நான்கேட்ட அழகுக் கவிதை*
*"கலியாண வீட்டிலும் வெடி வெடிப்பர்*
*செத்த வீட்டிலும் வெடி வெடிப்பர்*
*வள்ளம் இறக்கவும் வெடி வெடிப்பர்*
*வயதுக்கு வந்தாலும் வெடி வெடிப்பர"*
*கவிஞர் கழகமொன்றைக் கனடாவில் கருவாக்கி*
*அலெக்ஸாண்டர் ஆசானுடன் இணைந்து உருவாக்கி*
*கவிஞர் பலரைக் கச்சிதமாய் உருவாக்கியவர்*
*நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை உருவாக்கி*
*கவிதை இலக்கணத்தைக் களங்கமின்றித் தந்தவர்*
*ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆளுமை மிக்கவர்*
*கனடாவின் தேசியகீதத்தைக் கருத்துக் குறையாமல்*
*கன்னித் தமிழில் கவியாக்கித் தந்தவர்*
*கீதவாணி வானொலியில் கிழமை தோறும்*
*காதலாகப் பேசும் கடமைவீரன் போல் ஜோசேப்புடன்*
*கடந்த பலவாண்டாய்க் கவியரங்கம் நடாத்தியே!*
*கவிஞர் பலரை கவிபாட ஊக்குவித்தவர்*
*கவிஞர் கழகத்தைப் போசகராய்க் காப்பவர்*
*வயதும் வட்டுக்குப்போய் வருத்தங்கள் வருத்தினாலும்*
*வாலிப மிடுக்கோடு வலம் வந்தவர்*
*அன்னாரின் தொண்ணூறாவது அகவைத் திருநாளில்*
*அவர்வாழ அகமகிழ்ந்து ஆண்டவனை ஆராதிப்போம்.*

-----------------------------

***ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்***
*416) 844-7453*

***குறிப்பு: தொண்ணூறாவது பிறந்ததினத்தில் 28-10-2023 படிக்கப்பட்டது***

# சுதந்திர போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டும்: அண்ணாமலை

இந்திய செய்திகள்

தமிழகத்தின் நலனுக்காக, மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர் சங்கரய்யா. சுதந்திர போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டும் என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது, "தமிழகத்தின் நலனுக்காக, மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டவர் சங்கரய்யா. சுதந்திர போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டும். ஆளுநருக்கு அனுப்பபட்டிருக்கும் கோப்புகளை பற்றி எங்களுக்கு தெரியாது.



எங்களுடைய நிலைப்பாடு, சங்கரய்யா அவர்களுக்கு நிச்சயமாக டாக்டர் கவுரவ பட்டம் கொடுக்க வேண்டும் என்பதுதான். அவருக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்குவதற்கு ஒப்புதல் வழங்காதது ஏன் என ஆளுநர் மாளிகைதான் விளக்கமளிக்க வேண்டும். சங்கரய்யாவுடன் வேறுயாருக்காவது, பரிந்துரைத்து பட்டியல் அளிக்கப்பட்டதா எனத் தெரியவில்லை.தமிழகத்திலும் சாதிக் கொடுமை.. நெல்லையில் நடந்திருப்பது மிகப்பெரிய கொடூரம். சாதி வன்கொடுமைகள் தமிழகத்தில் இன்னும் நடப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்கேயோ, ஏதோ ஒரு இடத்தில் ஒரு சமுதாயமாக நாம் தவறு செய்கின்றோமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. கல்வி ரீதியாக தவறு செய்கின்றோமோ, ஆரம்பக் கல்வியில் கோட்டை விடுகின்றோமோ, மாணவச் செல்வங்களுக்கு பள்ளிக்கூடத்தில் சாதி என்ற நச்சு விதை வளர்வதற்கு சில இடங்களில் நாமே காரணமாக இருக்கின்றோமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது.

மேலும் சாதியை வைத்து அரசியல் செய்கின்ற நிறைய கட்சிகள், அதை சாதிய சமுதாயத்திற்குள் புகுத்தி இருக்கின்றார்களா என்ற அச்சம் இருக்கிறது. வளராத மாநிலங்களில் இன்னும் சாதிக்கொடுமை எப்படி இருக்கிறது, அதேபோன்று தமிழகத்திலும் சாதிக் கொடுமை இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. அனைவரும் சேர்ந்து சாதியை ஒழிக்க வேண்டும். மனிஷ் சிசோடியா கைது செய்யப்பட்டதை பொருத்தவரை, உரிய ஆவணங்களோடுதான் அவர் கைது செய்யப்பட்டு இருக்கிறார். இந்தியா கூட்டணிக்கு எந்த ஒரு சிங்கிள் பாய்ண்ட் அஜெண்டாவும் கிடையாது. அப்படியே இருந்தால் அது மோடி எதிர்ப்புதான் . இந்தியா கூட்டணி வலுவாக இல்லை என்பது உண்மை தான். அதோடு இந்தக் கூட்டணி நீடிக்கவும் வாய்ப்பில்லை.மாற்று அரசியல் வேண்டும்: யார் அரசியலுக்கு வந்தாலும் வரவேற்பேன் என்று முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

மக்களை மேம்படுத்துவதற்கு யார் வந்தாலும் வாங்க. நான் இதைப் பண்ண போறேன். இந்த மாதிரி பண்ன போறேன் என்று மக்களுக்கு ஒரு கொள்கையைக் கொடுங்க. மக்கள் தேர்வு செய்யட்டும். அரசியலுக்கு யாரும் வருவதற்கு யாருமே தடையாக இருக்கக் கூடாது. மக்களுக்கு சாய்ஸ் இருக்க வேண்டும். 3 கட்சி இருப்பதற்கு 6 கட்சி இருந்தால் இன்னும் சிறப்புதான்.மக்கள் தேர்வு செய்வாரக்ள். குறிப்பாக அதுவும் புதியவர்கள் அரசியலுக்கு வரும் போதுதான் சிஸ்டம் மாறும். பழையவர்களே 30 வருடம் 40 வருடம் இருக்கிறார்கள். அதனால்தான் நீரோடை போல ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். விஜய் உள்பட நிறைய புதியவர்கள் அரசியலுக்கு வரட்டும். அவர்கள் எல்லோரும் மாற்று அரசியலை முன்வைக்கட்டும். தமிழக மக்கள் யாரை முடிவு செய்கிறார்களோ அதை ஏற்றுக்கொள்ளலாம்" என்றார்.

# பட்டியலின மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான சூழலை தமிழக அரசு உருவாக்க வேண்டும்: நெல்லை சம்பவத்தில் ராமதாஸ் கருத்து

நெல்லையில் பட்டியலின இளைஞர்களின் ஆடைகளைக் களைந்தும், அவர்கள் மீது சிறுநீர் கழித்தும் நிகழ்த்தப்பட்ட வன்கொடுமை தாக்குதலுக்கு பாமக நிறுவனர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.இது குறித்து இன்று அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "நெல்லை மாவட்டம் தச்சநல்லூர் அருகே பொது இடத்தில் சிறுநீர் கழித்ததற்காக பட்டியலின இளைஞர்கள் இருவரைப் பிடித்து கண்மூடித்தனமாக தாக்கிய கும்பல், அவர்களின் ஆடைகளை களைந்து, அவர்கள் மீது சிறுநீர் கழித்து வன்கொடுமை செய்திருக்கிறது.

அவர்கள் வைத்திருந்த பற்று அட்டையை பறித்து அதிலிருந்து ரூ.5000 பணத்தை கொள்ளையடித்திருக்கிறது. பாதிக்கப்பட்ட இரு இளைஞர்களும் அவர்களிடமிருந்து தப்பி, ஆடைகள் இன்றி வீடு திரும்பியுள்ளனர். பட்டியலின இளைஞர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தக் கொடுமை கடுமையாக கண்டிக்கத்தக்கது.இரு சக்கர ஊர்தியில் வந்த பட்டியலின இளைஞர்களை தடுத்து நிறுத்திய 6 பேர் கொண்ட கும்பல், முதலில் அவர்களின் சாதி குறித்து விசாரித்திருக்கிறது. அவர்கள் பட்டியலினத்தவர்கள் என்று தெரிய வந்த பிறகே அவர்களை தாக்கி வன்கொடுமையில் ஈடுபட்டிருக்கின்றனர். அந்த வகையில் இது சாதிய நோக்கத்துடன் நடத்தப்பட்ட தாக்குதல் என்பது உறுதியாகிறது.இதில் தொடர்புடைய குற்றவாளிகள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றாலும் கூட, இதன் பின்னணியில் வேறு எவரேனும் இருக்கிறார்களா? என்பதை விசாரித்து அவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் அரசு பள்ளி ஒன்றில், பிற மாணவர்களால் தமக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமை குறித்து ஆசிரியர்களிடம் புகார் தெரிவித்ததற்காக சின்னதுரை என்ற மாணவரை ஒரு கும்பல் வீடு புகுந்து அரிவாளால் வெட்டியது.

அந்தக் கொடிய நிகழ்வு நடந்து இரு மாதங்கள் கூட நிறைவடையாத நிலையில், அதே மாவட்டத்தில் மீண்டும் ஒரு கொடிய சாதிய வன்கொடுமை நிகழ்ந்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்கு காரணமானவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.வேங்கைவயலில் பட்டியலின மக்கள் பயன்படுத்தும் நீர்த் தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவுகள் கலக்கப்பட்ட வழக்கில் இதுவரை எவர் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அரசுத் தரப்பில் செய்யப்படும் இத்தகைய தாமதங்கள் தான் பட்டியலின மக்கள் மீது தாக்குதல் நடத்தத் துடிக்கும் சக்திகளுக்கு துணிவை வழங்குகிறது.

எனவே, வேங்கைவயல் கொடுமை குறித்த வழக்கு உள்ளிட்ட பட்டியலின மக்கள் தாக்கப்பட்ட அனைத்து வழக்குகளின் விசாரணையை விரைவு படுத்துவதுடன், பட்டியலின மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான சூழலை தமிழக அரசு உருவாக்க வேண்டும்." என ராமதாஸ் கூறியுள்ளார்.

# "நீங்கள் மன்னர்கள்; நான் உங்கள் தளபதி... ஆணையிடுங்கள்!" 'லியோ' விழாவில் விஜய் பேச்சு



கடந்த மாதம் வெள்ளித்திரையில் வெளியானது நடிகர் விஜய் நடிப்பில் உருவான 'லியோ' திரைப்படம். இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கிய இந்த படம் பாக்ஸ் ஆஃபிஸில் வசூலை அள்ளி வருகிறது. இந்த படத்தின் வெற்றி விழா சென்னையில் நடைபெற்றது. இதில் படக்குழுவினர் பங்கேற்றனர். அந்த வகையில் நடிகர் விஜய் இதில் பேசியது:"என் நெஞ்சில் குடியிருக்கும் நண்பா... நண்பி. இவ்ளோ நாள் நான் தான் உங்கள என் நெஞ்சுக்குள்ள வச்சுருகேன்னு நினைச்சேன். இப்போது தான் உங்கள் இதயத்தில் எனக்கு ஒரு பெரிய இடத்தைக் கொடுத்து உள்ளீர்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்.

என்னோட தோலை செருப்பாக தேய்த்து கொடுத்தாலும் உங்கள் அன்புக்கு ஈடாகாது. நான் உங்களுக்கு என்றும் உண்மையாக இருப்பேன். சமீப காலமாக சமூக வலைதளங்களில் உங்களது கோபம் அதிகமாக உள்ளது. ஏன்? இவ்வளவு கோபம் உடம்புக்கு நல்லதில்லை. அதெல்லாம் வேண்டாம் நண்பா. நாம் யார் மனதையும் புண்படுத்த வேண்டாம். அது நம்முடைய வேலையுமில்லை. நமக்கு நிறைய வேலை இருக்கிறது.ஒரு காட்டுக்கு ரெண்டு பேர் வேட்டைக்கு போறாங்க. அந்த காட்டுல மான், மயில், முயல், இந்த காக்கா, கழுகு. காடுன்னு இருந்தா இதெல்லாம் இருக்கும் தானே. அதுக்கு சொன்னேன் பா. ஒருத்தர் வில் அம்பு எடுத்து போறார். உன்னொருத்தர் ஈட்டி எடுத்து போறார். வில் எடுத்து போனவர் முயல அடிச்சி தூக்கிட்டாரு. ஈட்டி வைத்திருந்தவர் யானைய குறி வெச்சு மிஸ் பண்ணிட்டார்.

ரெண்டும் பேரும் ஊருக்கும் திரும்பி வருவாங்க. இதுல யாருக்கு வெற்றி. அந்த யானைய குறி வைத்தவர் தான் வெற்றி அடஞ்சவர்.ஏன்னா, நம்மால் எதில் எளிதாக வெல்ல முடியுமோ அதை செய்வது வெற்றி அல்ல. எது முடியாதோ அதை செய்வது தான் வெற்றி. முயற்சியாவது செய்ய வேண்டும். பெரிதினும் பெரிது கேள். ஆசைப்பட வேண்டும். அதில் என்ன தப்பு இருக்கு.படத்துல வர பாட்டுல 'விரல் இடுக்குல தீ பற்றணும்னு' எழுதியிருக்காங்க அத பேனா என்று எடுத்துக்கொள்ளலாம். அதேபோல 'பத்தாது பாட்டில்' என்று எழுதியிருக்கிறார்கள். அதை ஏன் சரக்கு என எடுத்துக் கொள்ள வேண்டும். கூல் என்று எடுத்துக் கொள்ளலாம் இல்லையா?. இப்படியான மழுப்பலான கதையெல்லாம் சொல்லி நான் எஸ்கேப் ஆக தேவையில்லை. தயவு செய்து, சினிமாவை சினிமாவாக பாருங்கள்.

பள்ளி கல்லூரி போகிற வழியில் ஒயின் ஷாப் இருக்கு. ரெண்டு ரவுண்டு போட்டுவிட்டா ஸ்கூலுக்கு போகிறார்கள்.ஒரு முறை ஏவிஎம் சரவணன் சார், வடபழனி மெயின் ரோட்டுல கார்ல போனப்போ சிக்னல்ல இருந்த ஒரு அம்மாவுக்கு உதவி செய்திருக்கார. அந்த அம்மா உடனே நீ நல்லா இருப்ப எம்.ஜி.ஆர்ன்னு சொல்லி இருக்காங்க. அந்த காலத்துல யார் அள்ளி கொடுத்தாலும் எம்.ஜி.ஆர் அவர்களா தான் இருக்கும். அப்படின்னு பேர். நாம யாரையும் ஒப்பிட்டு பேசல. நாம அவ்வளவு பெரிய ஆளும் இல்ல. ஆனா, நல்ல விஷயத்த எடுத்துக்கலாம். அந்த வகையில எனக்கு ஒரு குட்டி ஆசை. எதிர்காலத்துல எங்க நல்லது நடந்தாலும் அதை நம்ம பசங்கா தான் பண்ணி இருப்பாங்க. அப்படின்னு ஒரு பேர் எடுக்கணும்னு எனக்கு ஒரு ஆசை.சரி, லியோவுக்கு வருவோம். இயக்குநர் லோகேஷ் கனகராஜை எண்ணி பெருமை கொள்கிறேன்.

'மாநகரம்' நம்மள பாக்க வெச்ச. 'கைதி' எல்லாரையும் பாக்க வெச்ச. 'விக்ரம்' இந்தியாவையே பாக்க வெச்ச. இப்போ லியோ. இன்னும் ஹாலிவுட் மட்டும் தான் பாக்கி இருக்குன்னு நினைக்குறேன். உன்ன நினைக்கும் போது ரொம்ப பெருமையா இருக்கு. 20 வயசுல ஹீரோயின் ஆகுறது பெருசு இல்ல. 20 வருஷமா முன்னணி ஹீரோயினா இருக்குறது தான் பெருசு. நம்ம இளவரசி குந்தவை (திரிஷா) சூப்பர். சஞ்சய் தத் சார், அர்ஜுன் சார், மிஷ்கின், கவுதம் வாசுதேவ் மேனன் சார்னு இந்த படத்துல அங்கமா இருக்குற எல்லாருக்கும் எனது வாழ்த்துகள்.

# ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமணமாலை

கனடாவில் இருந்து இலங்கை போய் பல திருமணங்களை முடித்து மீண்டும் கனடா வந்துள்ள ராம் அலைக்சாண்டர் - எம்மிடம் கனடா UK, France, Swiss பல நாடுகளிலுள்ள மாப்பிள்ளைகளை மணப்பெண்கள் மற்றும் Divorce ஆன ஆண் பெண்களும் இருக்கிறார்கள்.

| இலங்கைப் பெண்கள் | இலங்கை ஆண்கள் |
|---|---|
| • 13.04.1989 NON R.C- HND | 28.07.1986 அஸ்வினி AL |
| • 08.05.1994 Ayurveda Doctor | 26.12.1992 உத்தராடம் Al |
| Divorced, No Child | 07.10.1988 மகம் 2 OL |
| • 31.03.1995 RC AL | 28.04.1987 அச்சுனி Driver |
| • 02.04.1998 சித்திரை Nursing | 25.04.1982 கார்த்திகை 4 Al |
| • 28.12.1993 மிருகசீரிடம் IT | 22.01.1994 கார்த்திகை 4 Al |
| • 16.04.1993 அவிட்டம் AL | 16.09.1994 திருவோணம் AL |
| • 21.04.1997 அத்தம் AL | 07.09.1988 பூசம் AL |
| • 19.03.2002 கார்த்திகை 3 AL | 25.12.1988 RC AL |
| • 28.05.1974 RC | 21.11.1988 திருவாதிரை AL |
| • 30.05.2002 பூராடம் 4 AL | 22.05.1993 ரோகினி AL |
| • 08.08.1994 மகம் Government | 30.06.1987 ஆயில்யம் BA, |
| • 29.10.1995 பூராடம் AL | Government Teacher |
| • 06.06.1996 திருவோணம் AL | 02.11.1983 அத்தம் AL |
| • 06.06.1982 RC AL கேட்டை | 29.12.1984 பூரட்டாதி AL |
| • 28.07.1986 கேட்டை AL | 29.01.1987 உத்தராடம் AL |

கனடா
Canada
தொடர்பு- ராம் அலைக்சாண்டர்
இலங்கை

Whatsapp 0764017529,
0760516514

இலங்கையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் நம்மவர்களுக்கு தொடர்ச்சியாக உப- உணவுப் பொருட்கள் வழங்கும் 'பணிகளைச் செய்து வருகின்றோம். அவ்வாறு தாங்களும் வழங்க விரும்பினால் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

416 771 9856


# கடந்தவையும் கடப்பவையும் - (75)

மறவாது என்பவன் மறுபடி வந்தானோ? - அங்கு
திரிபவரைப் பார்ப்பின் பெருமளவில் வாய்ப்பிருக்கு

கடைகளிலும் வெளியிலும் பெருமளவில் அவர்களும்தான்
நடைபாதை கடைகளிலும் அதிகளவில் - ஆனாலும்

உடப்பின் நண்பன் பல்கலையில் கனகாலம்
சிறப்பிடத்தில் உள்ளதனால் நிச்சயமாய் உடப்பும்தான்

உரிய இடத்தில் இருப்பான் ,அவனுக்கென்ன - தனக்கு
உரிய இடம் தென்கிழக்கில் இருக்கு என்பான் - நல்ல

துரோணரைப் பெற்ற துணிவோடும்
மனதோரம் பட்டதொரு வடுவோடும்

இவற்றையெல்லாம் நினைத்தபடி இருக்கையில்
இடத்தை விட்டு எழுந்தபடி அழைப்பு வர

வழக்கம்போல் பின்தொடரும் படலம்தான் - மறுநாள்
பழக்கப்பட்ட பேச்சோடு ஏறியாச்சு கோவிலுக்கு

கனக்கத்தூரம் முன்னுக்கே இறகிவிட
சுணக்கமின்றி நடக்க பிறப்பிக்கும் கட்டளைக்கு

ஏற்றாற்போல் எடுத்து வைக்கமுடியாத அடி - இங்கு
மாற்றப்பட்ட பழக்கம் வீட்டுக்குள்ளும் செருப்பு

கோயிலுக்கும் கூட போகமுடியா நிலை - கோயில்
வாயில் எப்பவரும் எப்பவரும் என்பதாக

பாதையின் பெயர் கோயில் வீதி - அப்
பாதைக்குள் போனதும் திரும்பியது நினைவு

கம்பன் கோட்டத்திற்கு அண்டையில் அந்த வீடு
கந்தனின் கண்டாமணி கண்ணுறக்கம் கலைக்க

ஐந்துமணிக்கு முதல் எழுந்தே
அள்ளி வார்த்த தண்ணீர் தலையில்

அரைகுறை ஈரமாய் அங்காங்கே வழிய
விரைந்து செருகிக் கட்டினும் அம்சமாய் - மிக

அழகாயும் இருக்கும் சேலையை,ஆளுக்காள் சரிபார்த்து
அவசரமாய் கதவைப்பூட்டி ஓட்டமும் நடையுமாய்

வானைப்பிளக்கும் அரோகராச் சத்தம்
மேலைச் சிலிர்க்க வைக்க - இலேசாக

இருள்படிந்த நேரத்து இதமான காற்றும் - உடல்
வருடும் சுகத்தோடு ஒரு பக்கம் - அளவாய்

எடுத்து இடையில் செருகிய சேலையோடு
அடுத்தடுத்து நின்று அன்றைய சூரியனோடு

போட்டி போட்டு உள்வீதி வெளிவீதி இரண்டிலும்
நேர்த்தியாக அடியழித்தே சுற்றிவந்த அந்த நாட்கள்! - அதை

இன்றைய நிலையொடு ஒப்பிட்டுப் பார்த்தபடி - நண்பிகளோடு
அன்றிருந்த அழகான அவ்வீட்டை இடையிடையே கண் தேட

நடையும் தொடர்ந்தது நேராக...

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# கனடிய அரசாங்கம் (Women and Gender Equality Canada) தேர்ந்தெடுத்துள்ள 11 வெற்றியாளர்களின் எம்மவர் மெலனி ரட்ணம் அவர்களும் ஒருவராகத் திகழ்கின்றார்



2023ம் ஆண்டிற்குரிய பெண்கள் வரலாற்று மாதத்தின் போது, பெண்கள் மற்றும் பாலின சமத்துவத்திற்கான கனடிய அமைப்பு **(WAGE)** வரலாற்றை உருவாக்கும் பெண்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற 11 வெற்றியாளர்களின் பட்டியலை அண்மையில் பெருமையுடன் வெளியிட்டது., இந்த வெற்றியாளர்கள் கடந்த காலங்களில் பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்கு அவர்களின் பங்களிப்புகள் இனிவரும் தலைமுறைகளுக்கு முன் உதாரணமாக விளங்கும் என்ற அடிப்படையில் இந்த 11 பெண்மணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்
றுயுபுநு அமைப்பானது ஒரு துறையாக அதன் 5வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிலையில், இந்த குறிப்பிடத்தக்க பெண்களை முன்னிலைப்படுத்தி அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றது .இந்த 11 வெற்றியாளர்களில் எமது ஈழத் தமிழ்ச் சமூகத்தை தளமாகக் கொண்ட வெற்றியாளர் மெலனி இரட்ணம் அவர்களும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது

இந்த 11 வெற்றியாளர்களும் தங்கள் ஆராய்ச்சியில் முன்னேற்றங்கள், கொள்கை மேம்பாடு, வீட்டுவசதிக்கான அணுகலை மேம்படுத்துதல், பாலின அடிப்படையிலான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அர்ப்பணிப்பு, தொழில் முனைவோர் உந்துதல், நல்லிணக்கத்திற்கான அர்ப்பணிப்பு, மற்றும் தைரியமான தலைமைத்துவம் ஆகியவற்றைக் கொண்டவர்களாக விளங்குகின்றார்கள் எனவும் கனடாவின் றுயுபுநு அமைப்பு அறிவித்துள்ளது
கனடாவில் இயங்கிவரும் அறிவியல் தொழில்நுட்பத்தில் கனடிய பெண்களுக்கான சங்கத்தின் , தலைவராக எமது வெற்றியாளர் மெலனி இரட்ணம் அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.
இந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் கனடியப் பெண்களுக்கான சங்கம் என்னும் அமைப்பானது பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும்,
அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகியவற்றில் உள்ள அமைப்புரீதியான தடைகளை நீக்குவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அமைப்பாக விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது
டாக்டர். மேலனி ரட்ணம் அவர்கள் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் நியூரோபயாலஜி எனப்படும் நரம்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். மூளையில் காணப்படும் நோயெதிர்ப்பு செல்கள், மைக்ரோக்லியா பெருமூளை இஸ்கெமியாவுக்குப் பிறகு வீக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்வதில் அவர் அந்தத் துறையில் தீவிரமாக பங்களித்துள்ளார்.

இந்த விருதை பெற்றுக் கொண்ட மெலனி ரடணம் அவர்கள் வருங்கால சந்ததியினர் மற்றும் முன்னேறத் துடிக்கும் பெண்களுக்கு அறிவுரையாக பின்வரும் விடயத்தைக் கூறுகின்றார்
' நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு வித்தியாசத்தை உருவாக்குங்கள் "உங்கள் கடந்த காலத்தை தழுவி, உங்கள் எதிர்காலம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள், ஏனென்றால் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கிய நமது பகிரப்பட்ட பயணத்தை வடிவமைக்கும் வலிமை அதில் உள்ளது." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் 'கவிச்சரம்' இதழ் வெளியீட்டு விழா!!

காலம் : 05-11-2023 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.30 மணி
இடம்: ஸ்காபரோ சிவிக் சென்ரர்
(Scarborough Civic Centre, 150 Borough Dr, Scarborough, ON M1P 4N7

**தலைமையுரை**
பாவலர் கந்த ஸ்ரீபஞ்சநாதன்
(தலைவர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்)

**வாழ்த்துரைகள்**
செந்தமிழ்ப் பேரொளி, பேராசிரியர், முனைவர், பாலசுந்தரம் இளையதம்பி
(தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலை வளாகம், கனடா)
ஆர். என். லோகேந்திரலிங்கம்
(பிரதம ஆசிரியர் கனடா உதயன் வார இதழ்)
அகில் சாம்பசிவம்
(ஆசிரியர் இலக்கியவெளி இதழ்)

**ஆய்வுரைகள்**
எழுத்தாளர் கவிஞர் இரா. சம்பந்தன்
பாவலர் இராஜ்மீரா இராசையா

**கவிச்சரம் வெளியீட்டுரை**
பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை

**"பாவலர்" விருதாளர்கள்**
கவிஞர் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன்
கவிஞர் சந்திரன் வேலாயுதபிள்ளை
கவிஞர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை
கவிஞர் சர்வாம்பிகை வாசுதேவன்
கவிஞர் சுசுந்தி மார்க்கண்டு

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| கந்த. ஸ்ரீபஞ்சநாதன் | க. குமரகுரு | பவானி தர்மகுலசிங்கம் |
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
| (416-272-5332) | (647-224-8871) | (437-991-6220) |

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

# இவ்வார ராசிபலன்

## 03-11-2023 வெள்ளி தொடக்கம் 09-11-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** ஏற்றமும், மாற்றமும் நிறைந்த வாரம். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. வீண் செலவுகள் தவிர்க்கவும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. ஆரோக்கியம் சீராகும். அபார சம்பத்துக்கள் சேரும். இல்லத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் அதிகரிக்கும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். அரசியல்வாதிகள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். ஒரு சிலருக்குக் கௌரவ பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். திருமண பாக்கியம் கைகூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை பலப்படும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வசூலாகும். பொருளாதாரம் உயரும். தொட்டது துலங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப் பாதையை அடி எடுத்து வைப்பீர்கள். தீர்த்த யாத்திரை உண்டு. வழக்குகள் சாதகமாகும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. புதிய எண்ணங்கள் நிறைவேறும். நிதி பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு குறையும். சுயநலம் கூடும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,X





**ரிஷபம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கும் வாரம். விரும்பிய ஆசையும் விரும்பிய காதலும் நிறைவேறும். பூமியால் லாபம் அடைவீர்கள். பிள்ளைகளால் இருந்து வந்து துன்பம் விலகும். பதவி வாய்ப்பு தேடி வரும். பங்குத்தொழில் பெரிய முன்னேற்றத்தைத் தரும். கட்டிடத் தொழில் முன்னேற்றம் தரும். வருமானத்திற்கேற்ற செலவு ஏற்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். குதூகலமான நிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மையுண்டு. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். மருத்துவச் செலவுகள் ஏற்பட்டு மறையும். பொருளாதாரத்தில் உயர்வு ஏற்படும். ஆக்கப்பூர்வமான எண்ணம் மனதில் உதயமாகும். பணியாட்களின் ஆதரவு அதிக அளவு பெருகும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். அடுத்த வீட்டார்களின் ஆதரவு கிட்டும். பெருமிதத்தோடு காணப்படுவீர்கள். பிள்ளைகள் தேவைகள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஆடை, அணிகலன் சேர்க்கை உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பணவரவு திருப்தி தரும். வணிகத்தொழில் லாபம் தரும். திருஷ்டிகள் விலகும். மற்றவர்களால் மேன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,R




**மிதுனம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். பட்டம் தேடி வரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் ஒன்று தாமதமாகக் கூடிய காலம். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உடல்பொலிவு கூடும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். முன்னேற்றங்கள் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணம் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். ஸ்டேஷ்னரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். வம்ச விருத்தியாகக் கூடிய காலம். கலகலப்பான வாரமாக அமையும். பெண்களுக்கு யோகம் கூடி வரும். உறவினர் உதவி செய்ய முன் வருவர். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். விளையாட்டுத்துறை லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். அரசமரப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி கிடைக்கும். பணமும், தனமும் பக்குவமாக கிடைக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,S




**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் கூடும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மகான்களின் சந்திப்புக் கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மாலை நேரத்தில் இனிப்பான செய்தி வரும். வாசனை திரவியத்தில் ஆர்வம் கொண்டவர் நீங்கள். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும். பெருமையாக நிகழ்வுகளை அருமையாகச் சந்திப்பீர்கள். மன சந்தோஷம் கூடும். உடல்நலம் கவனம் தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வெளிநாட்டுப் பயணம் திருப்தி தரும். பேச்சில் துணிவு ஏற்படும். நிதி நிலைமை சீராகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். தீய எண்ணங்கள் விலகும். கலைத்தொழில் உயர்வு உண்டு. விவசாயம் விளைச்சல் தரும். அனுகூலமானப் போக்கு நிலவும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பிரார்த்தனையால் பலன் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். பணவரவு அதிகரிக்கும். சகோதரியால் நன்மை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் அதிக மதிப்பெண்கள் எடுப்பார்கள். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். சுபகாரியம் கூடி வரும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூகமான தீர்வு வரும். உடல் உபாதை நீங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,W




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**சிம்மம்:** சாதகமான சூழ்நிலை அமையும் வாரம். தொலைதூரப் பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபாரத்தில் மந்த நிலை அகலும். சொந்த தொழிலமையும். கவலைகள் அடியோடு விலகும். யோகப் பலன்கள் கிடைக்கும். கிள்ளிக் கிடைக்கும் யோகத்தால் துள்ளிக் குதிப்பீர்கள். புதிய சொத்துக்கள் சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தனவரவுகள் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். இனிய செய்தியால் மனம் மகிழும். சோதனைகள் விலகி, சாதனையான எண்ணம் நிறைவேறும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. உஷ்ண நோய் ஏற்பட்டு மறையும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. நிதிப்பற்றாக்குறை நீங்கும். கலைத்தொழில் லாபம் தரும். பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமை சேரும் அருமையான காலம். அமைதியாக இருப்பது நல்லது. உடல் உபாதைகள் ஏற்பட்டு மறையும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். போட்டி, பொறாமைகள் விலகும். புத்திரர் வழியில் கவலை ஏற்படலாம். புதிய நட்பை தவிர்க்கவும். பணியில் நிம்மதி குறையும். திடீர் செலவுகள் உண்டாகும். உத்தியோக மாற்றம் உண்டு. காலணிகள் காணாமல் போகும். காதல் எண்ணம் உருவாகும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மறைமுக தொல்லை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,3,4
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Y





**கன்னி:** ஆசைப்பட்ட பொருட்கள் வாங்கும் வாரம். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. கால்நடைகளால் மேன்மை உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. வேண்டாத நபர்கள் விலகிடுவர். விவேகமான காலமாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நண்பரால் பண விரயம் உண்டு. புதிய சிந்தனைகள் உருவாகும். கலையார்வம் கூடும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரியத்தடை அகலும். இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு. போட்டிகள் உருவாகி மறையும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் தேடி வரும். வருமான வரித்தொல்லை உண்டு. பொறியியல் துறை லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். கடன் பிரச்சனை முற்றிலும் தீரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் கூடும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப்பொலிவு கூடும். நேரம் காலம் பார்க்காமல் உழைப்பீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாளைய பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**துலாம்:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரம் லாபம் தரும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். அரசு வழி ஆதாயம் கிட்டும். சகோதரியினால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். எதிரிகள் உதிரியாவார்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். முடியாத வி'யங்களைக் கூட தெளிவாகச் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். கடல் கடந்த பயணம் லாபம் தரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். கமிஷன் தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களின் கல்வியில் உற்சாகம் அடைவார்கள். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் கூடும். வியாபாரம் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,L




**விருச்சிகம்:** வறுமைகள் விலகும் வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். விநோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளின் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மரியாதை உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை திறன் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை குறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் கூடும். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டுவார்கள். அணிகலன் சேர்க்கையுண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். அறிமுகம் இல்லாதவர் மூலம் ஆதாயம் கிடைக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். செல்வமும், புகழும் சேரும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 8,5,9,3
அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,R

(தொடர்ச்சி 33 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(32 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** புதுமைகள் நிறைந்த வாரம். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வேலைப்பளு குறையும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். உடன் பிறப்பால் உதவி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடி வரும். சொத்துச் சேர்க்கை உண்டு. தனித்து நின்று ஜெயித்துக் காட்டுவீர்கள். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். எண்ணிய காரியம் கைக்கூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் கூடும். சுயத்தொழிலில் கவனம் தேவை. பழையக்கடன் வசூலாகும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். வாகனச் செலவு ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். விருப்பமான தொழிலமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**மகரம்:** பயணம் லாபம் தரும் வாரம். பக்கத்து வீட்டுப் பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும். சந்தர்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் பளிச்சிடும். உறவினர் வருகை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவுகள் தடைப்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கண்ணாடித் தொழில் ஏற்றம் தரும். திருப்பங்கள் ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். கனவு பலிதமாகும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டாகும். தொல்லை தந்தவர் விலகிடுவர். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சகோதர வழியில் சகாயம் கிட்டும். நடுத்தரமான நன்மைகள் கிடைக்கும் காலம். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். சேமிப்பு உயரும். விவாத முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் குதூகலம் தாண்டவமாகும். ஆசைகள் பூர்த்தியாகும். பெண்களின் கௌரவம் உயரும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சொல்லில் கவனம் தேவை. ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். இனியச் செய்தியால் மனம் மகிழும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 4,3,2,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:




**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் வாரம். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத் திறமை கூடும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக்கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழ்த்தும் காலம். தாய் வழி உறவால் நன்மைகள் உண்டாகும். வியாபாரத்தில் விரயங்கள் கூடும். கடன் தொல்லை குறையும். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். தொழில் வழி தொல்லை குறையும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொருளாதார வளர்ச்சி பெருகும். மகிழ்வான நிகழ்வுகளை சந்திப்பீர்கள். கலை ஆர்வம் பெருகும். விபரீதப் போக்கு மாறும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பாராட்டுக்கள் தேடி வரும். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். செயல்திறமை வெளிப்படும். வருமானம் உயரும். காதலில் கண்ணியம் கூடும். நெருக்கடிகள் நீங்கும். அரசியலில் புகழ் சேரும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கர்ஜனையோடு வலம் வருவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,J




**மீனம்:** போட்டிகள் உருவாகி மறையும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகத் திருப்பம் ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி உருவாகும். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கக் கூடிய காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் தனவரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படை தேவைகள் நிறைவேறும். ஆரோக்கியம் கூடும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. சுபகாரிய செய்தி வரும். தகுதியோடும், மிகுதியோடும் வலம் வரக்கூடிய ஜெயமான காலம். அனுகூலமான போக்கு நிலவி வரும். மன சந்தோஷம் கூடும். சினத்தைத் தவிர்ப்பது நல்லது. புத்தாடை ஆபரணச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். கடனால் பிரச்சனை வரும். வெற்றிகள் குவியும். ஆன்றோர் வாழ்த்துக் கிட்டும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். சாதனை நிகழும் காலம். உடல் உபாதை தீரும். வேற்று மதத்தினரால் உதவிகள் கிட்டும். மாற்று எண்ணங்கள் உதயமாகும். தோற்றம் பொலிவு கூடும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். உறவினர்கள் பாராட்டுக் கிட்டும். பழைய நட்புத் தொல்லை தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 4,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம் (சிகப்பு), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P

# சர்ச்சைக்குரிய கருத்தை கூறிய சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு எழுதியுள்ள கடிதம்!



"பல்கலைக்கழகத்தில் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையில், நீதித்துறையின் சுதந்திரம் குறித்து பேசுவதற்கு சட்டத்துறை என்னை அழைத்தது ஒரு முரண்பாடான விடயமாகும்." என சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு பகிரங்க கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் "நெருக்கடியான காலங்களில் நீதித்துறை சுதந்திரம்" என்ற விரிவுரை இரத்துச் செய்யப்பட்டது தொடர்பாக கடிதம் ஒன்றை எழுதியபோதே இதனை தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்குள் கருத்துச் சுதந்திரம் தொடர்பாக ஏற்பட்ட ஒரு பாரதூரமான பிரச்சினையை எழுப்பவே நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இந்த பொதுக்கடிதத்தை உரிய முறையில் பரிசீலிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

31 ஒக்டோபர் 2023 அன்று "நெருக்கடியான காலத்தில் நீதித்துறை சுதந்திரம்" என்ற தலைப்பில் சட்டத்துறைத் தலைவரால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நான் பேச அழைக்கப்பட்டேன்.

மூன்று காரணங்களுக்காக நான் உடனடியாக ஒப்புக்கொண்டேன்.

முதலாவதாக, நான் ஒரு சட்டத்தரணியாக இருப்பதோடு தொடர்ந்து நீதிமன்றங்களோடு ஈடுபாட்டில் இருக்கிறேன்.

இரண்டாவதாக, இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களை சந்திப்பதற்கும், கருத்துக்கள், கோட்பாடுகள் பற்றியும் அவை நடைமுறையில் எவ்வாறு வெளிவருகின்றன என்பதைப் பற்றியும் கலந்துரையாடுவதற்கும் ஒரு வாய்ப்பை வழங்கும் என்று நான் எண்ணினேன்.

மூன்றாவது அண்மை காலத்தில் சிங்கள தேசியவாதிகளிடம் இருந்து இனரீதியான அச்சுறுத்தல்களின் பிரகாரம் பதவி விலகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு. சரவணராஜவின் பதவி விலகலுக்குக் காரணாமாக இருந்த இனரீதியான தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்திலும் நான் ஈடுபட்டிருந்தேன்.

ஒக்டோபர் 30 ஆம் திகதி, எனது விரிவுரைக்கு ஒரு நாள் முன்னதாக, நான் பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஆற்றப் போவது தொடர்பில் மாணவர் சங்கம் அதிருப்தியை தெரிவித்திருந்தனர் என்று சட்டத்துறைத் தலைவர் என்னிடம் தெரிவித்தார்.

கடந்த மாதம் நான் ஆற்றிய மற்றுமொரு உரையில் விடுதலைப் புலிகளை ஒரு பாசிச அமைப்பாகக் கட்டமைத்திருந்தேன் என்பதுதான் இந்த அதிருப்திக்கான காரணம் என்று கூறினார். எப்படியிருந்தாலும், விரிவுரை திட்டமிடப்பட்டவாறே இடம்பெறும் என்று அவர் என்னிடம் கூறினார்.

விரிவுரை நடைபெறும் நாளில், பேசுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக, நான் பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் இனி நிகழ்வை நடத்துவது சாத்தியமில்லை என்று சட்டத்துறைத் தலைவர் எனக்கு தெரிவித்தார்.

எனவே பல்கலைக்கழகத்திற்கு வெளியே நிகழ்வை நடத்த கலைப் பீடத்தின் பீடாதிபதி அழைப்பு விடுத்ததாக எனக்கு தெரிவிக்கப்பட்டது. இடத்தை மாற்றுவதற்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்று துறைத் தலைவரிடம் தெரிவித்தேன். நான் பல்கலைக்கழகத்திற்கு வந்ததும், பீடாதிபதியை சந்திக்க விரும்புவதாகவும் நான் கேட்டுக் கொண்டேன்.

பீடாதிபதியை சந்தித்த போது பதில் துணைவேந்தரும் தானும் இந்த நிகழ்வை "ஒத்திவைக்க" முடிவு செய்திருப்பதாகவும், "அசௌகரியத்தை (unpleasant)" தவிர்க்க விரும்பியதால் அவர்களால் இந் நிகழ்வை நடத்த முடியாது என்றும் பீடாதிபதி என்னிடம் தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களிடம் பேசியதாகவும், எதிர்ப்பை வெளிப்படுத்த மாற்று வழிகளை அவர்களுக்கு அளித்ததாகவும் பீடாதிபதி என்னிடம் தெரிவித்தார்.

எனினும் இந்த நிகழ்வு தொடரக் கூடாது என்பதில் விடாப்பிடியாக இருந்தனர் என்றும் மாணவர்கள் "தீவிர உணர்வுகளுடன் (extreme emotions)" செயல்படுவதாகவும், அவர்கள் "முதிர்ச்சியற்ற (immature)" முறையில் நடந்துகொள்ளுவதாகவும் அவர் கூறினார்.

நானும் "அதீத உணர்ச்சிகளின்" கீழ் அறிக்கைகளை வெளியிட்டேன் என்றும், எனது முந்தைய உரையில் விடுதலைப் புலிகளை அந்த வகையில் நான் பரந்த அளவில் வர்ணித்திருக்கக் கூடாது என்றும் அவர் கூறினார். என்னுடன் தனக்குக் கருத்து வேறுபாடு இருந்தாலும் என்னை அழைக்க தான் முடிவு செய்ததாக அவர் கூறினார்.

பதிலுக்கு, ஒரு நிகழ்வைக் கூட நடத்த முடியாத நிலையில், நான் "தீவிரஉணர்ச்சிகளுடன்" பேசினேன் என எனக்கு விரிவுரை செய்யக்கூடிய ஒரு இடத்தில் அவர் இல்லை என்று நான் பீடாதிபதியிடம் கூறினேன்.

இந்த நிகழ்வை இரத்துச் செய்ததன் மூலம் பல்கலைகழக நிர்வாகம் புலிகளின் கருத்துக்கு மாறான கருத்துக்களை பல்கலைகழகத்திற்குள் அனுமதிக்காது என்ற செய்தியை எனக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் அனுப்பியுள்ளதாக நான் மேலும் கூறினேன்.

பல்கலைக்கழகத்தில் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையில், நீதித்துறையின் சுதந்திரம் குறித்து பேசுவதற்கு சட்டத்துறை என்னை அழைத்தது ஒரு முரண்நகை என்று நான் மேலும் கூறினேன்.

நிகழ்வைத் தொடருமாறு நான் பீடாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை விடுத்தேன். ஆனால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

எனது விரிவுரையை இரத்துச் செய்யும் முடிவை பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்ததன் மூலம், பல்கலைக்கழகத்திற்குள் சுதந்திரமான பேச்சு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கு எதிராக ஓர் ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

பரந்தளவில், மாணவர் அமைப்பு மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட பல்கலைக்கழக சமூகம், ஜனநாயக வெளியின் மீதான இந்த அப்பட்டமான பாதிப்புக்கு எதிராக ஒரு கொள்கை ரீதியான நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்றும், இவ்வாறானதொரு சம்பவம் மீண்டும் நடப்பதை அனுமதிக்கமாட்டார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

எனது பங்கிற்கு, பீடாதிபதி உறுதியளித்த அதே விரிவுரைத் தொடருக்கான "ஒத்திவைக்கப்பட்ட" அழைப்பிற்காக நான் காத்திருக்கிறேன்.

இந்த விடயத்தில் தாங்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் எனது கருத்தைப் பேசுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் இடமளிப்பீர்கள் எனவும், வெவ்வேறு கருத்து நிலைப்பாடுகளை உடையவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எந்தத் தடையும் இல்லாமல் உரையாடல்களிலும், விவாதங்களிலும் ஈடுபடுவதற்கான கலாசாரம் ஒன்று நிலவுவதனை உறுதி செய்வீர்கள் எனவும் நம்புகின்றேன் - என்றுள்ளது.

# அன்பின் தொனி - 711

பாஸ்டர் அல்பிரட் சொரூபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

**தேவ வார்த்தை ஜீவவார்த்தை கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்**

என் மகனே, நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமையப்பண்ணும் பொருட்டு, நீஎன் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்தி, ஞானத்தை வாஎன்று கூப் பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறது போல் தேடுவாயா கில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய். கர்த்தர் ஞானத்தைத் தருகிறார், அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ் ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார், உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார். அவர் நியாயத்தின் நெறிகளைத் தற்காத்து, தம்முடைய பரிசுத்தவான்களின் பாதையைக் காப்பாற்றுகிறார். அப்பொழுது நீதியையும், நியாய த்தையும், நிதானத்தையும், சகல நல்வழிகளையும் அறிந்து கொள்ளுவாய். ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்போது, நல் யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாது காக்கும். அதினால் நீதுன்மார்க்கனுடைய வழிக்கும், மாறுபாடுபேசுகிற மனுஷனுக்கும், அந்தகாரவழிகளில் நடக்க நீதி நெறிகளைவிட்டு, தீமை செய்ய மகிழ்ந்து, துன்மார்க்கருடைய மாறுபாடுகளில் களிகூருகிறவர்களுக்கும், மாறுபாடான பாதைகளிலும் கோணலான வழிகளிலும் நடக்கிறவர்களுக்கும் நீதப்புவிக்கப்படுவாய். தன் இளவயதின் நாயகனைவிட்டு, தன் தேவனுடைய உடன்படிக்கையை மறந்து, இச்சகமான வார்த்தைகளைப்பே பசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கும் தப்புவிக்கப்படுவாய். அவளுடைய வீடு மரணத்துக்கும், அவளுடைய பாதைகள் மரித்தோரிடத்திற்கும் சாய்கிறது. ஆவளிடத்தில் போகிறவர்களில் ஒருவரும் திரும்புகிறதில்லை, ஜீவபாதைகளில் வந்து சேருகிறதுமில்லை. ஆதலால் நீ நல்லவாகளின் வழியிலே நடந்து, நீதிமான்களின் பாதைகளைக் காத்துக்கொள்வாயாக. செவ்வையானவர்கள் பூமியிலே வாசம் பண்ணுவார்கள், உத்தமர்கள் அதிலேதங்கியிருப்பார்கள். துன்மார்க்கரோ பூமியிலிருந்து அறுப்புண்டு போவார்கள், துரோகிகள் அதில் இராதபடிக்கு நிர்மூலமாவார்கள். - **நீதிமொழி 2: 1- 22**


கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப் படுத்தினார் என் மகனே, என் போதகத்தை மறவாதே, உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும். கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக. நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள். ஆதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய். உன் சுயபுத்தியி ன்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினை த்துக்கொள், அப்பொழுதுஅவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீ உன்னை ஞானியென்று எண்ணாதே கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டுவிலகு. அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும். உன் பொருளாலும், உன் எல்லாவிளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும் உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்து கொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல, கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார். ஞானத்தைக் கண்டடைகிறமனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனு'னும் பாக்கியவான்கள். அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது. முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப்பெற்றது, நீ இச்சிக்கத்தக்க தொன்றும் அதற்கு நிகரல்ல. அதின் வலது கையில் தீர்க்காயுசும், அதின் இடதுகையில் செல்வமும் கனமும் இருக்கிறது. அதின் வழி கள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம். அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவவிருட்சம், அதைப் பற்றிக் கொள்ளுகிறஎவனும் பாக்கியவான். கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார். அவருடைய ஞானத்தினாலே ஆழங்கள் பிரிந்தது, ஆகாயமும் பனியைப் பெய்கிறது. என் மகனே, இவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக, மெய்ஞ் ஞானத்தையும் நல்லாலோசனையையும் காத்துக்கொள். அவைகள் உன் ஆத்துமாவுக்கு ஜீவனும், உன் கழுத்துக்கு அலங்காரமுமாயிருக்கும். அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய், உன் கால் இடறாது. நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய், நீ படுத்துக்கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும். சடிதியானதிகிலும், துஷ்டர்களின் பாழ்க்கடிப்பும் வரும்போது நீ அஞ்ச வேண்டாம். கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார். நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே. உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி: நீ போய்த்திரும்பவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே. அச்சமின்றி உன்னிடத்தில் வாசம் பண்ணுகிற உன் அயலானுக்கு விரோதமாக தீங்கு நினையாதே. ஒருவன் உனக்குத் தீங்கு செய்யாதிருக்க, காரணமின்றி வழக்காடாதே. இகழ்வோரை அவர் இகழுகிறார், தாழ்மையுள்ளவர்கு கிருபையளிக்கிறார்.

- **நீதிமொழிகள் 3: 1-35**

**தொடரும்...**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1072

## கந்தளாய் சிவன்கோவில் திருகோணமலை

*" கைப்போது மலர்தூவி காதலித்து வானோர்கள்*
*முப்போது முடிசாய்த்து தொழநின்ற முதல்வனை*
*அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி*
*எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே. "*

கந்தளாய் சிவன்கோயிலுக்குச் செல்லும்வீதியில், 1977 ஆம் ஆண்டு கந்தளாய் பட்டினசபையினரால் வடிகால் வெட்டும்போது ஒரு வெண்கலச்சிலையும், பூசைக்குப் பயன் - படுத்தப்படும் மணியும் கண்டெடுக்கப்பட்டது. வெண்கலச்சிலை, நாயன்மார்களுள் ஒருவருடைய சிலையென திரு. கனக தாமோதரம்பிள்ளை என்பவராலும், வேறு சைவ அன்பர்களாலும் அடையாளம் காணப்பட்டது. பின்னர் இச்சிலை தொல்பொருள் காட்சியகத்திற்குக் கையளிக்கப்பட்டது. இச்சிலை மற்றும் பூசைக்குரிய மணி ஆகியன கந்தளாய் சிவன்கோயிலின் பண்டைப் பெருமையை எடுத்துக்காட்டுவனவாகக் காணப்படுகின்றன.

ஆகமரீதியான கோவில்களைச் சோழர்கள், பல இடங்களிலும் அமைத்துள்ளனர். இவர்களால் அமைக்கப்பட்ட கோவில்கள் இன்றும் இலங்கையிலே காணப்படுகின்றன. இவ்வாறான கோவில்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டவை. பதினோராம் நூற்றாண்டிலே சிறப்புப்பெற்று விளங்கிய கந்தளாய் சிவன்கோயிலும் இச்சிறப்புக்களைக் கொண்டதாக அமைந்திருந்ததென்பதற்கு, அன்றாட வழக்கிலுள்ள பெயர்ச்சிறப்பினை ஒரு காரணமாகக் கருதமுடியும். கந்தளாய் சிவன்கோயிலுக்குக் கிழக்குப் பக்கமாக நானூறுமீற்றர் தூரத்திலே தெப்பக்குளம் இருந்திருக்கலாமென நம்பப்படுகின்றது. கந்தளாய்பிரதேசத்திலே குடியேறிய ஆரம்பகுடியேற்றவாசிகளால் இவ்விடம் குளப்பள்ளம் என அழைக்கப்பட்டது. இக்கோவிலைச்சுற்றி தமிழர்களின் குடியிருப்புக்களே அண்மைக்காலம்வரை காணப்பட்டன.

1954ஆம் ஆண்டு இப்பகுதியில் மக்கள் குடியேற்றப் - பட்டார்கள். இம்மக்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட காணிகளைப் பண்படுத்தினார்கள். அப்போது ஒரு செங்கற்பாதை காணப்பட்டுள்ளது. அப்பாதை கோவிலின் தெற்கு மூலையில் இருநூறு மீற்றர் தூரத்திலிருந்து ஆரம்பமாகி, கிழக்குப்பக்கமாகக் கோவிலை நோக்கி அமைந்திருக்கக் கண்டனர். இதனை ஆராய்ந்தோர் இப்பாதை கந்தளாய் சிவன்கோவிலின் தேரோடும் பாதையாக அமைந்திருக்கலாமெனத் தெரிவித்துள்ளனர். இப்பிரதேசத்தில் வெண்கலச்சிலை கிடைத்த இடத்திலேயே விநாயகர் சிலையொன்றும் கண்டெடுக்கப்பட்டது. இச்சிலை பின்னர் எவ்வாறோ மறைக்கப்பட்டுவிட்டது. குடியேற்றத்திற்காகக் கந்தளாய்க்காடுகளை அழித்துத் திருத்தியபோது பல கோவில்களின் சுவடுகள் காணப்பட்டதாகவும் அவை அழிக்கப்பட்டதாகவும் இப்பகுதியில் வாழ்ந்த முதியவர்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறாக தமிழும் சமயமும் ஒருங்கே தழைத்தோங்க அரும்பணி புரிந்த இராசேந்திர சோழமன்னனால் கட்டப்பட்டு அழிந்து போன கந்தளாய் சிவன் கோவில், 1960 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு, 1975 ஆம் ஆண்டு ஆனிமாதம் பத்தொன்பதாந் திகதி குடமுழுக்கு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கோவிலின் கருவறையில் பூமியிலிருந்து வெளிப்பட்ட சிவலிங்கம் நிறுவப்பட்டுள்ளது. மூன்றுகாலமும் நித்தியபூசைகளும், கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்தை நினைவுகூர்ந்து அத்தினத்தில் அலங்காரப்பூசைகளும், விசேட காலப்பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

இவ்வூர் மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட பரிபாலனசபை அமைக்கப்பட்டு, கோவில் பராமரிக்கப்பட்டது. இவ்வாறான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களிலுள்ள ஆலயங்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாறுகளையும் அழிப்பதன்மூலம், தமிழர்களின் தொன்மையை, அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த உண்மையை மறைக்க, ஒரு சாரார் திட்டமிட்டுச் செயற்படுகின்றார்கள். இன்றைய நிலையில் கந்தளாய் போன்ற பிரதேசங்களில் தற்காலத்தில் தமிழ் மக்கள் அருகியே காணப்படுகின்றார்கள். இக்காரணத்தினால் வரலாற்றுப்பெருமைமிக்க ஆலயங்கள் பல பேணுவாரற்ற நிலையில் பற்றைக்காடுகளாக மாறும் நிலை மீண்டும் ஏற்பட்டுள்ளது. ஆயினும் தொடர்ந்தும் இப்பிரதேசங்களிலே அருகி வாழுகின்ற தமிழ்மக்கள் இவ்வாறான ஆலயங்களை பேணிக்காத்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களை வெறும் வழிபாட்டிடங்களாக மட்டும் கொள்ளாது, தமிழர்களின் பாரம்பரியத்தையும், வரலாற்றையும் உள்ளடக்கிய கருவூலங்களாகவும் கருதவேண்டும். தற்காலத்திலே ஆலயங்கள் அழிக்கப்படுகின்றன. சுற்றாடலில் வாழ்ந்து இறைதொண்டு செய்யும் மக்களும், குருக்களும் வலிந்து இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வான காரணங்களினால் பல கோவில்கள் பராமரிப்பின்றி அழிந்துபோகும் நிலை காணப்படுகின்றது. ஈழத்தமிழர்களின் வரலாற்றோடு தொடர்புபட்டுள்ள ஆலயவரலாறுகளைச் சேகரித்து வைப்பதன் மூலம், என்றோ ஒருநாள் மீண்டும் இவ்வாலயங்களுக்குப் புத்துயிர் கொடுப்பதோடு ஈழத்தமிழர்களின் பாரம்பரிய நிலங்களையும் மீட்கமுடியும்.

*" வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே*
*சூழ்க வையக முந்துயர் தீர்கவே. "*

**- வளரும்...**

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · CONSTRUCTION · VACANT LAND




**Contact Me Today**

**NESAN** Subramaniam **416-908-5656**

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1439 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 3, 2023

# ஸ்காபுறோ நகரங்களை இணைக்கும் Sheppard Subway East Extension தொடர்பாக மாகாணப் உறுப்பினர் அரிஸ் பாபிகியன் விடுக்கும் அறிவித்தல்



அன்பான அயலவர்களே! மற்றும் நண்பர்களே!,
உங்களுக்கு நான் ஏற்கெனவே வழங்கிய மூன்றாவது வாக்குறுதி நிறைவேறிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். பேர்ச்மவுண்டில் ஒரு புதிய மருத்துவமனையைக் கட்டுவதற்கும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் **Bridletowne** சமூக மற்றும் சுகாதார மையத்தைக் கட்டுவதற்கும் அதனிலும் மேலாக, செப்பர்ட் சுரங்கப்பாதை கிழக்கு விரிவாக்கத்திற்கான ஆரம்ப திட்டமிடல் பணிகளைத் தொடங்குவதற்கு போக்குவரத்து அமைச்சர் மற்றும் போக்குவரத்து இணை அமைச்சர் ஆகியோரின் பச்சைக் கொடி எங்களுக்கு இப்போது கிடைத்துள்ளது.
(உள்ளே செய்தியும் மேலும் படங்களும் 21ம் பக்கத்தில்)

# சர்ச்சைக்குரிய கருத்தை கூறிய சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு கடிதம்!



“பல்கலைக்கழகத்தில் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையில், நீதித்துறையின் சுதந்திரம் குறித்து பேசுவதற்கு சட்டத்துறை என்னை அழைத்தது ஒரு முரண்பாடான விடயமாகும்.” என சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு பகிரங்க கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.
சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் “நெருக்கடியான காலங்களில் நீதித்துறை சுதந்திரம்” என்ற விரிவுரை இரத்துச் செய்யப்பட்டது தொடர்பாக கடிதம் ஒன்றை எழுதியபோதே இதனை தெரிவித்தார்.
(உள்ளே செய்தி 33ம் பக்கத்தில்)


# கனடாவில் கவிஞர் கந்தவனம் அவர்களின் 90வது அகவைத் திருநாள் கொண்டாடப்பெற்றது



கனடாவில் கடந்த முப்பத்தி ஐந்து ஆண்டுகளாக வாழ்ந்தவண்ணம் கலை இலக்கிய மற்றும் சமயம் சார்ந்த பணிகளை தொடர்ச்சியாக ஆற்றி வந்த கவிநாயகர் கந்தவனம் அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் அகவை 90 ஐ அடைந்தார். உலகெங்கும் வாழும் கலை இலக்கியவாதிகளால் மதிக்கபெறும் கவிநாயகரது 90வது அகவைத் திருநாளைக் அவரது குடும்பத்தினரும் கலை இலக்கிய நண்பர்களும் கொண்டாடி மகிழ்ந்தார்கள். கனடா கவிஞர் கழகமும் இணைய வழி ஊடாக அவரைப் போற்றிப் பாடும் “கவியரங்கம்“ ஒன்றை நடத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது.

# "கோணேஸ்வரத்தை பெருங்கோயிலாக புனரமைப்புச் செய்ய இந்திய அரசு உதவும்”

## — *நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதி*



இலங்கையின் ஐந்து ஈஸ்வரத் திருத்தலங்களில் ஒன்றான திருக்கோனேஸ்வரத்தை பெருங்கோயிலாக புனரமைப்புச் செய்ய இந்திய அரசு அனைத்து உதவி-களையும் செய்யும் என்று, அந்நாட்டின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதியளித்துள்ளார்.
இலங்கைக்கு மூன்று நாட்கள் பயணமாக வந்துள்ள இந்திய நிதியமைச்சர் கிழக்கு மாகாணத்தின் தலைநகருக்குச் சென்று அங்கு திருக்கோனேஸ்வரம் கோவிலில் வழிபட்டார். பின்னர் அந்நகரில் இந்தியாவின் முன்னணி அரச வங்கியாக ‘பாரத ஸ்டேட் வங்கியின்’ கிளை ஒன்றையும் அவர் திறந்துவைத்தார். (உள்ளே விபரமான செய்தி 15ம் பக்கத்தில்)

# இலங்கையிலிருந்து கனடா வந்துள்ள பன்முகப் பெண் ஆளுமை உமாச்சந்திரா பிரகாஷ்



உமாச்சந்திரா பிரகாஷ் என்னும் பெயர் இலங்கைத் தீவெங்கும் நன்கு அறியப்பெற்ற ஒரு பன்முகப் பெண் ஆளுமையாக விளங்கும் ஒன்றாகும். எழுத்துலகம். ஊடகம். சமூகப்பணி மற்றும் அரசியல் மற்றும் பெண் தலைமைத்துவம் ஆகிய பிரிவுகளில் துலங்கிவரும் வரும் ஒரு தலைமைத்துவப் பண்பு கொண்ட பிரமுகராகவும் உமாச்சந்திரா பிரகாஷ் விளங்கி வருகின்றார். இவர் தற்போது கலை இலக்கிய மற்றும் சமூகம் நட்பு ஆகியவை சார்ந்த பயணம் ஒன்றை மேற்கொண்டு கனடா வந்துள்ளார். (உள்ளே விபரமான செய்தி 28ம் பக்கத்தில்)

# நள்ளிரவில் இனந்தெரியாத நபர்களால் வவுனியா தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சாவடிக்கு தீ வைப்பு



நள்ளிரவு நேரத்தில் இனந்தெரியாத நபர்களால் வவுனியா தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சாவடி மீது தீ வைப்பு- அதிஷ்டவசமாக தப்பிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்
நேற்றிரவு ( அக்டோபர் 28, 2023 சனிக்கிழமை),
அடையாளம் தெரியாத இரண்டு நபர்களால் இச் சாவடியில் வைக்கப்பட்ட தீயிலிருந்து, அறமும் கடவுளும் எங்கள் சாவ-டியைக் காப்பாற்றினர். காணாமல் ஆக்கப்பட்ட எங்களின் குழந்தைகளை தேடும் முயற்சியில், நேற்று இரவு எங்கள் சாவடியில், காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளில் ஒருவரின் தந்தை மற்றும் இரண்டு தாய்மார்கள் வழக்கம் போல் தூங்கினர்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker